1

அமெரிக்கா கலிபோர்னியாவின் பத்து பெரிய நகரங்களில் ஒன்றான சான்பிரான்ஸிஸ்கோ ஆரஞ்சு வர்ணத்தோடும் பனிப்புகையோடும் ஒரு பூவைப் போல் விடிந்து கொண்டிருந்தது. பனிப்புகையில் உயரமான கட்டிடங்களின் உச்சிமுனைகள் மட்டும் தெரிய தொலைவில் தெரிந்த விமான நிலையத்தின் டவர் சிவப்பு விளக்கோடு சுழன்றது.

நகரின் மையத்தில் இருந்த லேக் - பார்க் அவென்யூவில் இருந்த 401-வது அபார்ட்மெண்ட்டில் குளிர்காற்றோடு கலந்து தமிழ்க்குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

''டேய்... ஜாகீர்! இவ்வளவு காலையில் எந்திரிச்சு குளிச்சிட்டு அமர்க்களமாய் ட்ரஸ் பண்ணிட்டு எங்கடா கிளம்பிட்டே?'' கேள்வி கேட்ட செங்குட்டுவனை கண்ணாடி முன் நின்றிருந்த ஜாகீர் ஒரு புன்னகையோடு பார்த்தான். திரும்பிப் பார்க்காமல் கேட்டான்.

''இன்னிக்கு தேதி என்ன?''

''பதினாலு''

''இது என்ன மாசம்?''

''பிப்ரவரி''

''பிப்ரவரி - 14 ன்னு சொன்னதுமே உனக்கு என்ன ஞாபகம் வருது...?''

கம்பளியைப் போர்த்துக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்து இருந்த செங்குட்டுவன் சில விநாடிகள் யோசித்துவிட்டு உதட்டைப் பிதுக்கி தலையாட்டினான்.

''ஒண்ணும் ஞாபகத்துக்கு வரலையே?''

ஜாகீர் முறைத்தான். ''டேய் செங்கு...! நீ அண்ணா யூனிவர்ஸிடியில் படிச்சு கோல்ட் மெடல் வாங்கினதும், இப்போ சான்பிரான்ஸிஸ்கோவுக்கு வந்து 'ஹெவன் கேட் சாஃப்ட்வேர் கம்பெனி'யில டீம் லீடராய் வேலை பார்த்து மாசம் ரெண்டு லட்ச ரூபாய் சம்பளம் வாங்கறதும் தண்டம்ண்டா...! நீ உன்னோட ஜெனரல் நாலேட்ஜை ரொம்பவும்

இம்ப்ரூவ் பண்ணிக்கணும். இல்லேன்னா உன்னைக் கட்டிக்கப் போற பொண்ணு ரொம்பவும் கஷ்டப்படுவா...! ஏண்டா! உனக்கு உண்மையிலேயே பிப்ரவரி 14 ன்னு சொன்னதும் எதுவுமே ஞாபகத்துக்கு வரலையா?''

''வரலையே!''

''அது **'காதலர்தினம்'**டா... பாவி...!''

''அப்படியா...?''

''என்ன அப்படியா...? எந்த பொண்ணையாவது நீ நிமிர்ந்து பார்த்து இருந்தாத்தானே காதல் எப்படிப்பட்டதுன்னு தெரியும். எப்பப் பார்த்தாலும் லேப்-டாப்பைப் பார்த்துகிட்டும், தடித்தடியாய் புஸ்தகங்களைப் படிச்சுகிட்டும் இருந்தா எந்தப் பொண்ணு பக்கத்துல வருவா...?''

செங்குட்டுவன் சிரித்தான்.

''என்னடா சிரிப்பு...?''

''எனக்கு இந்த காதல் என்கிற வார்த்தையில் ஒரு பர்சென்ட் கூட நம்பிக்கை கிடையாது. அது ஒரு மாய்மால வார்த்தை...!''

''மாய்மால வார்த்தையா...!''

''ஆமாண்டா...! காதல் என்கிற வார்த்தைக்கு நீ நினைக்கிற மாதிரி எந்த ஒரு தெய்வீக உணர்வும் கிடையாது. உடம்புக்குள்ளே நடக்கிற எத்தனையோ ரசாயன மாற்றங்களில் இந்த காதலும் ஒண்ணு...! பதின்மூன்று வயது வரை 'தேமே'ன்னு சோம்பிக்கிடக்கும் ஹார்மோன்கள் அதுக்கப்புறம் வன்முறையில் ஈடுபட்டு கலாட்டா செய்யப் போக ஒரு டீன்ஏஜ் ஆண் மகனுக்கு எதிர்வீட்டு வேலைக்காரப் பெண் உலக அழகியாய் தெரிகிற கோமாளித்தனத்துக்குப் பெயர்தான் காதல். ஒரு பெண்ணுக்கும் அதே வயதில்தான் ஹார்மோன் களின் கலாட்டா ஆரம்பமாகி கண்ணாடி முன் நிறைய நேரம் நிற்க ஆரம்பித்து எதிர்வீட்டு குமாரைப் பார்த்ததும் ஒழுங்காய்ப் போட்டிருக்கிற தாவணியை சரிப்படுத்திக் கொள்கிற கிறுக்குத் தனத்துக்குப் பெயர்தான் காதல்.''

''டேய்... செங்கு...! வேண்டாம்... இதுக்கு மேலே பேசாதே...!''

செங்குட்டுவன் சிரித்தான்.

''அப்படித்தாண்டா பேசுவேன்...! இன்னமும்

காதலைப்பற்றி சொல்லட்டுமா...? காதலுக்கு கண்ணில்லைன்னு சொல்லுவாங்க. என்னைக்கேட்டா மூளையே இல்லைன்னு சொல்லுவேன்.''

''செங்கு...! நான் கிளம்பறேன்... காதலோட அருமையைப் பற்றித் தெரியாமே நீ பேசிட்டு இருக்கே... உனக்கும் ஒரு நாள் காதல் வரும். அப்போ நீ பேசற வார்த்தைகளே வேற விதமாய் இருக்கும். நான் இப்பவே கிளம்பிப் போனாத்தான் மெட்ரோ ட்ரெய்னை பிடிச்சு ஹட்டன் ஸ்ட்ரீட்ல இருக்கிற கோல்டன் கேட் போய்ச் சேர முடியும். ஜூசி எனக்காக வெயிட் பண்ணிட்டிருப்பா...''

செங்குட்டுவன் எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டே கேட்டான்.

''ஜூசி எப்படியிருக்கா ஜாகீர்?''

''உனக்குத்தான் காதல் பிடிக்காதே... எதுக்காக அவளைப் பத்தி கேட்கிறே...?''

''எனக்கு காதல்தான் பிடிக்காது. பட் ஜூசியை எனக்குப் பிடிக்கும்...! வெரி இண்டலிஜெண்ட் கேர்ள்....''

''நீ தான் அவளை மெச்சிக்கணும்.''

''ஏண்டா...?''

''அந்த இண்டலிஜெண்ட் கேர்ள் என்ன பண்ணினா தெரியுமா?''

''சொல்லு... என்ன பண்ணினா?''

''சான் ஜோஸ் சாஃப்ட் வேர் கம்பெனியில் மாசம் ரெண்டு லட்ச ரூபாய் சம்பளத்தில் ஒரு ராணி மாதிரி வேலை பார்த்துட்டு இருந்தா இல்லையா...?''

''ஆமா...''

''அந்த வேலையை ராஜினாமா பண்ணிட்டா''

''அட... ஏன்...?''

''கம்பெனியோட ஏ.வி.பி. இவளைப் பார்த்து ஜொள்ளு விடறானாம். தேவையில்லாமே தன்னோட அறைக்கு வரச்சொல்லி பேசறானாம். அவனை புத்திசாலித்தனமாய் அவாய்ட் பண்றதை விட்டுட்டு ரிசைன் பண்ணிட்டு வந்து நிக்கிறா...! ஒரு இண்டலிஜெண்ட் கேர்ள் செய்யற வேலையா இது? இந்த சான்பிரான்சிஸ்கோவில் இருக்கிற எல்லா சாஃப்ட்வேர் கம்பெனிகளிலும் ஒரு ஜொள்ளு பார்ட்டி இருக்கத்தான் செய்வான்.

அதுக்கெல்லாம் பயந்தா வேலை பார்க்க முடியுமா...?''

''ஸோ... லூசி இப்போ அன் எம்ப்ளாய்ட்?''

''ஆமா...!''

''கவலைப்படாதே ஜாகீர்...! அவளோட புத்திசாலித்தனத்துக்கும் கெட்டிக் காரத்தனத்துக்கும் சீக்கிரமே ஒரு நல்ல வேலை கிடைக்கும்...''

''எப்படி கிடைக்கும்...? இன்னிக்கு ஐ.டி. இண்டஸ்ட்ரி மெல்ல மெல்ல ஒரு கோமா ஸ்டேஜுக்குப் போய்க்கிட்டு இருக்கு... நீயும் நானும் வேலை பார்க்கிற நம்ம கம்பெனி மல்டி நேஷனல் கம்பெனி என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் 'தம்' பிடிச்சுட்டு இருக்கு... 'சான் ஜோஸ் ஸாஃப்ட்வேர் கம்பெனி' நம்ம கம்பெனியைக் காட்டிலும் ஜெனுவூன் கம்பெனி. அந்த கம்பெனி வேலையை ரிஸைன் பண்ணலாமா...?''

''சரி... சரி... புலம்பாதே...! இன்னிக்கு காதலர்தினம். லூசிக்கு ஏதாவது கிஃப்ட் வாங்கிக் கொடுத்து அவளை சந்தோஷப் படுத்து. நல்ல ரெஸ்டாரெண்ட்டுக்கு கூட்டிட்டுப்போ... ஹெவியா லஞ்ச் வாங்கிக் கொடு!''

''நல்ல ரெஸ்டாரெண்ட் எதுன்னு நீயே சொல்லேன். உனக்குத்தான் சான்பிரான்ஸிஸ்கோ முழுவதும் அத்துபடியாச்சே...''

''நான் ஒரு ரெஸ்டாரெண்ட் சொல்றேன்... போறியா?''

''சொல்லு...! லூசிக்கும் அது பிடிக்கணும்...''

''கண்டிப்பாய் பிடிக்கும். இந்த சான் பிரான்ஸிஸ் கோவில் சைனா டவுன்னு ஒரு இடம் இருக்கு... அங்கே லூசியைக் கூட்டிட்டுப் போ, அங்கேயிருக்கிற கோல்ட் லைன் ரெஸ்டாரெண்ட் புது வகையான உணவுகளுக்கு ரொம்பவும் பிரசித்தம். சௌத் இண்டியன், நார்த் இண்டியன் ஃபுட்ஸும் கிடைக்கும். ரெண்டு பேரும் போய் என்ஜாய் பண்ணிட்டு வாங்க...!''

''சரி... சரி... லூசிகிட்டே சொல்லிப் பார்க்கிறேன்.'' ஜாகீர் சொல்லிக் கொண்டே தன்னுடைய அலமாரியில் இருந்த தெர்மாகோல் கோட்டை அணிந்து கொண்டான். குளிர் உடனே காணாமல்

போயிற்று. உடம்புக்குள் சூடு பரவியது.

ஜாகீர் அபார்ட்மெண்ட்டை விட்டு வெளியே வந்தான். சுத்தமான கான்க்ரீட் சாலைகளில் கேபிள் கார்கள் பயணம் செய்து கொண்டிருந்தன. ஜாகீர் சான் பிரான்சிஸ்கோவுக்கு வந்த புதிதில் கேபிள் கார்களைப் பார்த்து மலைத்துப் போனான். அமெரிக்காவின் வேறு எந்த நகரத்திலும் இல்லாத இந்த கேபிள் கார்கள் இங்கே மட்டும் இருக்க என்ன காரணம் என்று கேட்க, உடன் வந்த செங்குட்டுவன் சாலைகளைக் காட்டிச் சொன்னான். ''இங்கே இருக்கிற ரோடுகளைப் பார்த்தியா...? எதுவுமே சமதளத்தில் கிடையாது. ஏதோ ஒரு மலைப்பகுதியில் இருக்கிற மாதிரி ஏற்ற இறக்கத்தோடு இருக்கும். ஒரு மேடான பகுதியிலிருந்து பார்க்கும் போது எல்லா ரோடுகளுமே வழுக்கிக் கிட்டு போய் கடலுக்குள்ளே விழற மாதிரி இருக்கும். உலகத்தில் வேற எந்த ஊர்லேயும் இது மாதிரியான கேபிள் கார்களைப் பார்க்க முடியாது. இந்த நகரில் மட்டுமே கேபிள் கார்களைப் பார்க்க முடியும்.'' என்று அப்போது சொன்ன போது ஜாகிர் வியந்து போனான்.

ரோட்டை க்ராஸ் செய்து சற்றுத் தொலைவில் இருந்த மெட்ரோ ட்ரெய்ன்கள் வந்து போகும் சென்ட்டர் ஸ்பாட்டை நோக்கிப் போனான். அதே விநாடி செல்போன் சிணுங்கியது. எடுத்து டிஸ்ப்ளேயில் யார் என்று பார்த்தான்.

லூசி.

ஜாகீர் செல்போனை காதுக்குப் பொருத்தி உற்சாகமாய் குரல் கொடுத்தான்.

''ஹேய் லூசி...!''

''என் சோம்பேறி காதலனே...! இன்னும் பெட்லதான் இருக்கியா...?''

''லூசி...! திஸ் ஈஸ் டூ மச். என்னை இன்சல்ட் பண்றதுக்கும் ஒரு அளவு இருக்கு... நான் குளிச்சு டிரஸ் பண்ணி அபார்ட்மெண்ட்டை விட்டு இறங்கி, ரோட்டைக் கிராஸ் பண்ணி மெட்ரோ ட்ரெய்ன் ஸ்பாட்டுக்கு வந்துட்டு இருக்கேன்...''

''உண்மையாவா?''

''நான் என்னிக்கு உன்கிட்டே 'பொய் சொல்லியிருக்கேன்...? விளையாட்டுக்குக் கூட

பொய் சொல்லக்கூடாதுன்னு நினைக்கிறவன் நான்.''

''சரி... சரி... அழுதுடாதே...! நான் இப்போ எதுக்காக போன் பண்ணினேன் தெரியுமா?''

''சொல்லு...!''

''இன்னிக்கு நாம எங்கே மீட் பண்ணப் போறதாய் ப்ளான்?''

''டைமண்ட் ஸ்கொயர்''

''அங்கே வேண்டாம்''

''பின்னே?''

''யூனியன் ஸ்கொயர்க்குப் பக்கத்தில் இருக்கும் பூங்காவுக்கு வந்துடு... அங்கே நான் உனக்காக வெயிட் பண்ணிட்டிருப்பேன்.''

''என்ன திடீர்ன்னு...?''

''காரணத்தை நேர்ல சொல்றேனே...!''

''இந்த சஸ்பென்ஸ்தானே வேண்டாங்கிறது...? போன்லயே என்ன காரணம்ன்னு சொல்லு...''

''நோ... நோ...! நேரில் மட்டுமே காரணம் சொல்லப்படும். கேபிள் கார் பிடிச்சு உடனே வந்து சேரு... நான் சொன்ன இடம் ஞாபகம் இருக்கா...?''

''இருக்கு...! யூனியன் ஸ்கொயர்க்குப் பக்கத்தில் இருக்கிற பூங்காதானே?''

''அதே... அதே...!''

''அரைமணி நேரத்துக்குள்ளே வந்துடறேன்!'' செல்போனை அணைத்த ஜாகீர் பக்கத்தில் இருந்த கேபிள் கார் ஸ்டாண்ட்டை நோக்கிப் போனான்.

ஐந்து நிமிஷம் காத்திருக்க, ஒரு கேபிள் கார் வந்து நின்றது. ஏறிக்கொண்டான். சாலையின் ஏற்ற இறக்கங்களில் வேகமாய் சென்ற கேபிள் கார் சரியாய் இருபது நிமிஷ நேரம் பயணித்து யூனியன் ஸ்கொயர் ஸ்டாப்பிங்கில் நின்றது. ஜாகிர் இறங்கி ஸ்கொயர்க்கு அருகாமையில் இருந்த க்ரீன்ஸ்பாட் என்ற பூங்காவைக் குறி வைத்து நடந்தான்.

யூனியன் ஸ்கொயரைச் சுற்றி அந்தக் காலை வேளையிலேயே வெளிநாட்டு பயணிகளின் கூட்டம் தெரிந்தது. அதில் நிறைய காதல் ஜோடிகள். நிமிஷத்துக்கொரு தரம் முத்தமிட்டுக் கொண்டார்கள். கிட்டத்தட்ட எல்லோருடைய கைகளிலும் பூங்கொத்துக்கள்.

ஜாகீர் லூசியைப் பார்வையால் தேடிக் கொண்டே

நடந்தான். பூங்காவின் மையம் வந்தது.

மையத்தில் ஒரு நினைவுச் சின்னமும் அந்த சின்னத்தின் உச்சியில் ஒரு பெண்ணின் சிலை - நம் ஊர் கண்ணகியைப் போல் - கையில் ஒரு வளையத்தோடும் தெரிந்தது. ஜாகீர் மெல்ல நடந்து போய் அந்த சிலைக்குக் கீழே நின்றான். கடிகாரத்தில் நேரம் பார்த்தான்.

நேரம் 6.35.

பூங்காவில் காதல் ஜோடிகள் சுற்றிக் கொண்டிருக்க - அவர்களுக்கு நடுவில் லூசியின் முகம் தெரிகிறதாவென்று பார்வையை உன்னிப்பாக்கினான். லூசி தட்டுப்படவில்லை.

'ஒரு வேளை பூங்காவுக்கு வந்து கொண்டு இருப்பாளோ?'

'போன் செய்து பார்க்கலாம்' ஜாகீர் தன் செல்போனைக் கையில் எடுத்துக் கொண்டு லூசியின் எண்களைத் தட்டினான். உடனே ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது.

''யுவர் காண்ட்டாக்ட் நெம்பர் ஈஸ் பிஸி''. நான்கைந்து தடவை முயற்சி செய்து பார்த்த பின்பும் அதே ரிக்கார்டட் வாய்ஸ் வரவே செல்போனை அணைத்துவிட்டு லூசி தெரிகிறாளாவென்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

'காணோம்...!'

மேலும் ரெண்டு நிமிடங்கள் பொறுமை காத்துவிட்டு மறுபடியும் செல்போனில் லூசிக்காக முயற்சித்த போது அவனுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட்டது.

அழைப்பது யார் என்று பார்த்தான்.

அது ஒரு பி.சி.ஓ நெம்பர்.

'பப்ளிக் பூத்திலிருந்து யார் பேசுகிறார்கள்?'

பட்டனை அழுத்திவிட்டு செல்போனை காதுக்குக் கொடுத்து ''எஸ்...'' என்றான்.

மறுமுனையில் லூசியின் குரல். கோபத்தில் வெடித்தாள்.

''என்ன எஸ்...? இப்ப மணி ஆறே முக்கால். ஆறரை மணிக்கெல்லாம் டைமண்ட் ஸ்கொயர்க்கு வந்துடறதா சொன்னியே? சரியான தூங்கு மூஞ்சி! இன்னிக்கு காதலர்தினம்ங்கிறதை மறந்துட்டியா?''

ஜாகீர் திடுக்கிட்டான்.

"ஏய்... லூசி... என்ன... உளர்றே? நீதான் கொஞ்ச நேரத்துக்கு முந்தி எனக்கு போன் பண்ணி யூனியன் ஸ்கொயர்க்குப் பக்கத்தில் இருக்கிற பூங்காவுக்கு வரச்சொன்னே...? நானும் இங்கே வந்து வெயிட் பண்ணிட்டிருக்கேன்...! விளையாடறியா...?"

"என்னது...! யூனியன் ஸ்கொயர்க்குப் பக்கத்தில் இருக்கிற பார்க்கில் வெயிட் பண்ணிட்டிருக்கியா...? நான் அங்கே வரச்சொல்லி உனக்கு போன் பண்ணலையே...?"

"நீ போன் பண்ணலையா?"

"ஆமா... கடந்த ரெண்டு மணி நேரமாய் என்னோட செல்போன்ல ஏதோ ப்ராப்ளம்... **'மெமரி கார்ட் நாட்யெட் ரெடி'**ன்னு டிஸ்ப்ளேயில் வாசகம் வருது... யார்க்கும் கால் பண்ணலை...! செல்போனை சர்வீஸுக்கு கொடுக்கும் போதுதான் என்ன அதுல பிராப்ளம்ன்னு தெரிய வரும்...! என்னோட செல்போன் சரியில்லாத காரணத்தால்தான் பப்ளிக் பூத்திலிருந்து உனக்கு போன் பண்ணிட்டிருக்கேன்."

"அப்படீன்னா... உன்னோட வாய்ஸ்ல எனக்கு போன் பண்ணினது யாரு...?"

"அந்தக் கால் உனக்கு எப்ப வந்தது?"

"இருபது நிமிஷத்துக்கு முன்னாடி"

"வந்தது... என்னோட கால்தான்னு உனக்குத் தெரியுமா?"

"ம்... பார்த்தேனே... **'LUCY CALLING'** ன்னு டிஸ்ப்ளேயில வந்ததே...?"

"எதுக்கும் ஒரு தடவை வெரிஃபை பண்ணிப் பார்த்துடு. நெம்பரையும் சரி பாரு...!"

"சரி... நீ போனை கட் பண்ணு... நான் நெம்பரை வெரிஃபை பண்ணிப் பார்த்துட்டு மறுபடியும் உனக்கு போன் பண்றேன்...!"

"சீக்கிரம்...!"

மறுமுனையில் லூசி செல்போனை அணைத்துவிட ஜாகீர் **'CALL REGISTER'** பட்டனைத்தட்டி **RECEIVED CALLS**-ல் லூசியின் நெம்பரைத் தேடிக் கொண்டிருந்த போது பின்பக்கம் ஏதோ சத்தம் கேட்டது.

"என்ன சத்தம்...?"

ஜாகீர் திரும்பிப் பார்க்க முயல - கழுத்தின் மேல்

இடி வந்து விழுந்த தினுசில் அந்த அடி விழுந்தது. வலி மொத்த நரம்பு மண்டலத்தையும் தாக்க - கண்களுக்குள் இருட்டு பாய்ந்தது.

ஒரு பக்கமாய் சரிந்து விழுந்தான்.

யாரோ தாங்கிப் பிடித்து இழுத்துப் போவதையும் ஒரு வாகனத்துக்குள் தள்ளப்படுவதையும் உணர்ந்தான் ஜாகீர்.

2

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பத்து பெரிய நகரங்களில் ஒன்று சான்பிரான்சிஸ்கோ. இது ஒரு தீவு நகரம். இந்த நகரின் வீதிகளில் வலம் வரும் கேபிள் கார்கள் இந்நகரின் போக்குவரத்தை எளிமையாக்குகின்றன. உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாத இந்த கேபிள் கார்கள் 1873-ம் ஆண்டு முதல் இந்நகரில் இயங்குகின்றன. இந்தக் கார்கள் தனிப்பட்ட சக்தி மூலம் இயங்கவில்லை. மையப்படுத்தப்பட்ட ஒரு இடத்திலிருந்து இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு கேபிள் காரிலும் இரண்டு ஊழியர்கள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட தொகையைக் கட்டணமாய் செலுத்திவிட்டு கேபிள் கார்களில் நகரைச் சுற்றிச் சுற்றி வரலாம். ஒரு முறை செலுத்தும் கட்டணம் நாள் முழுவதற்கும் போதுமானது.

சான் ஜோஸ் போலீஸ் ஹெட் க்வார்ட்டர்ஸ்.

அந்தத் துடிப்பான இளம் போலீஸ் சார்ஜண்ட் பால் ஹாரீஸ் அந்த முன்னிரவு வேளையில் லாஸ்ட் மன்த் க்ரைம் அக்கரன்ஸ் சம்பந்தப்பட்ட விபரங்களை லாப்டாப்பில் பார்த்துக் கொண்டிருந்த போது ட்ராஃபிக் சார்ஜண்ட் வில்பர்ட் உள்ளே வந்தார். உடலை விறைப்புக்கு கொண்டு வந்து அட்டென்ஷனில் நின்றார்.

"ஸார்..."

பால் ஹாரீஸ் லாப் டாப்பிலிருந்து தலையை

உயர்த்தாமலேயே ''எஸ்'' என்றார்.

''ஒரு நியூசென்ஸ் கேஸ்... குடித்துவிட்டு கார் ஓட்டி வந்தார். காரை நிறுத்தி விசாரித்த போது அவன் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறான். அதனால் இங்கே கூட்டி வந்துவிட்டேன். நீங்கள் விசாரித்துப் பார்க்கிறீர்களா...?''

பால் ஹாரீஸ் நிமிர்ந்தார்.

''அவன் பெயர் என்ன...?''

''மார்ட்டீன் ஸாம்ஸ்''

''இளைஞனா...?''

''ஆமாம்... முப்பது வயது... ப்ரெஞ்ச் தாடி மீசை - மொட்டைத் தலை. கறுப்பு ஜெர்கின்... ஆளைப் பார்த்தால் சந்தேகம் வருகிறது. அவனிடம் ஏதோ தப்பு இருப்பது போல் மனதுக்குத் தோன்றுகிறது.''

''இப்போது எங்கே அவன்...?''

''முன் அறையில் உட்கார்த்தி வைத்துவிட்டு வந்து இருக்கிறேன்...''

''அவன் ஓட்டி வந்த கார்?''

''அதையும் பறிமுதல் செய்து இங்கே நம்முடைய ஹெட்க்வார்ட்டர்ஸ் சீஸ்ட் வெஹிகிள்ஸ் பிரிவுக்கு கொண்டு வந்து விட்டேன்...!''

பால் ஹாரீஸ் லேப் டாப்பை அணைத்துவிட்டு எழுந்தார். கடிகாரத்தில் நேரம் பார்த்தார். மணி 11.15.

''மிஸ்டர் வில்பார்ட்?''

''ஸார்...''

''அவன் குடித்து இருப்பது உண்மைதானே...?''

''உண்மைதான் ஸார்... 'ப்ரீத் அனலைஸர்' வைத்து பார்த்தேன். அவனுடைய ரத்தத்தில் 0.08% க்கு மேல் ஆல்கஹால் கலந்து இருந்தது.''

''ஆல்கஹாலின் அளவு அதிகம்தான். இந்த நிலைமையில் அவன் கார் ஓட்டிக் கொண்டு போயிருந்தால் நிச்சயமாய் ஒரு விபத்தை ஏற்படுத்தியிருப்பான்.'' பால் ஹாரீஸ் பேசிக் கொண்டே அந்தக் கட்டிடத்தின் இரண்டு அறைகளைக் கடந்து முன்னறைக்கு வந்தார்.

ஒரு நாற்காலியில் அவன் தலை குனிந்து உட்கார்ந்து இருந்தான். தலையை உயர்த்த முயற்சி செய்யும் போதெல்லாம் தலை நிற்காமல் தானாய் கவிழ்ந்தது. பக்கத்தில் காவலுக்கு நின்றிருந்த கான்ஸ்டபிளின் கையில் இருந்த ரப்பர் தடியை

வாங்கிக் கொண்ட பால் ஹாரீஸ் அவனுக்கு முன்பாய் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். கையில் இருந்த ரப்பர் தடியை அவனுடைய தாடையில் வைத்து உயர்த்தினார்.

''உன் பெயர் என்ன?''

அவன் சிரமப்பட்டு தலையை உயர்த்தி உமிழ்நீர் வழியும் வாயோடு சொன்னான். கண்களில் பயம் தெரிந்தது. குரலில் குழறல்.

''மார்ட்டீன் ஸாம்ஸ்...''

''குடித்துவிட்டு கார் ஓட்டுவது குற்றம் என்று உனக்குத் தெரியாதா...?''

''தெரியும்... என் நண்பர்கள் வற்புறுத்திக் குடிக்க வைத்ததால் குடித்துவிட்டேன். என்னை மன்னியுங்கள் சார்ஜண்ட்...''

பக்கத்தில் நின்றிருந்த ட்ராஃபிக் சார்ஜண்ட் வில்பார்ட் குறுக்கிட்டு சொன்னார். ''ஸார்! நான் இதே கேள்வியை இவனிடம் இரண்டு முறை கேட்ட போது ஒரு தடவை உறவினர் வீட்டில் பார்ட்டி ஒன்று நடந்ததாகவும், அங்கே போய் குடித்துவிட்டு வந்ததாகவும் சொன்னான். இன்னொரு தடவை கேட்ட போது மதுபான விடுதியொன்றில் நண்பர் ஒருவர் வற்புறுத்திக் குடிக்க வைத்ததாக சொன்னான். யார் அந்த நண்பர் என்று கேட்ட போது பெயர் சொல்ல முடியாமல் திணறினான்.''

''இவனுடைய ட்ரைவிங் லைசென்ஸ், ஆர்.சி.புக் எங்கே...?''

''இதோ...!'' வில்பார்ட் தன்னுடைய யூனிஃபார்மின் பாக்கெட்டுகளில் இருந்து அந்த குட்டிப் புத்தகம் இரண்டை எடுத்துக் கொடுத்தார்.

''ஐ.டி.கார்ட்?''

''அது ஆர்.சி. புக்கின் உள்ளே இருக்கிறது ஸார்''

நாற்காலிக்கு சாய்ந்து கொண்ட பால் ஹாரீஸ் ஆர்.சி. புத்தகத்தைப் பிரித்து உள்ளேயிருந்த ஐ.டி. கார்டை எடுத்துப் பார்த்தார். அதில் இருந்த சோசியல் செக்யூரிடி எண்ணை ஒரு தாளில் குறித்துக் கொண்ட பால் ஹாரீஸ் அதை கம்ப்யூட்டர்க்கு கொடுத்து பட்டனைத் தட்டினார்.

பத்து விநாடி கழித்து கம்ப்யூட்டர் திரையில் 'மார்ட்டின் ஸாம்ஸ்' டை கட்டிக் கொண்டு

போட்டோவில் சிரித்தான். போட்டோவுக்கு கீழே வரி வரியாய் அவரைப் பற்றிய தகவல்கள் ஓடியிருந்தது.

பெயர்: **ஜே.எஃப் மார்ட்டின் ஸாம்ஸ்**
வயது: முப்பது.
முகவரி: சப்பர்ப்ஸ் அவென்யூ, ஃபோர்த் ஸ்ட்ரீட், டோர் நெம்பர் 1008 - 17.
சான்பிரான்ஸ்.
தொழில்: **ஷேர் மார்க்கெட். சீஃப் அட்வைஸர்.**

பால் ஹாரீஸ் தன்னுடைய கண்களில் வியப்பை நிரப்பிக் கொண்டு வில்பர்ட்டை ஏறிட்டார்.

''மிஸ்டர் வில்பர்ட்!''

''ஸார்...''

''கம்ப்யூட்டர் தருகிற தகவல்களைப் பார்த்தால் ஆள் படித்துவிட்டு ஒரு நல்ல வேலையில் இருப்பது போல் தெரிகிறது.''

''மே... பி... ஸார்...! பட் இன்றைக்குப் படித்தவர்கள்தான் சான்பிரான்சிஸ் கோவில் நிறைய குற்றங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் கேட்ட கேள்விகளுக்கு இவர் சரியான முறையில் பதில் சொல்லாத காரணத்தால்தான் இங்கே இவரைக் கூட்டிக் கொண்டு வந்தேன்.''

''ஓ.கே...!'' என்று தலையசைத்த பால் ஹாரீஸ் கான்ஸ்டபிளுக்குக் கண்ணைக் காட்ட, அவர் ஒரு பிளாஸ்டிக் டம்ளரில் தண்ணீரைக் கொண்டு வந்து அந்தக் குடிகார பேர் வழியின் முகத்தில் தண்ணீரை விசியடித்தார். அவன் உடம்பு ஒரு குலுக்கலுக்கு உட்பட்டு நிமிர்ந்தது. கண்கள் இப்போது முழுமையாய் திறந்தது.

பால் ஹாரீஸ் அவனுடைய முகத்தை மறுபடியும் ரப்பர் தடியால் நிமிர்த்தினார்.

''இதோ பார்...! இங்கே சான்பிரான்ஸிஸ்கோவில் குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது என்பது கடுமையான குற்றம். இதற்காக நீ கட்ட வேண்டிய அபராதத் தொகை பெரிய அளவில் இருக்கும். அந்தத் தொகை எவ்வளவு என்று உனக்குத் தெரியுமா?''

மார்ட்டின் ஸாம்ஸ் பீதியோடு தலையாட்டினான்.

''தெரியாது...''

''வில்பர்ட்...''

''ஸார்...''

''தொகை எவ்வளவு என்று நீங்கள் சொல்லுங்கள்.''

வில்பர்ட் தன் பாக்கெட்டில் இருந்த ஒரு சிறிய டயரியை எடுத்து பிரித்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தார்.

''குடித்து விட்டு வாகனம் ஓட்டியவர் போலீஸிடம் பிடிபட்டால் தொடர்ந்து அவர் அந்த வாகனத்தை ஓட்டிச் செல்ல முடியாது என்பதால் அந்த வாகனத்தை போலீஸ் நிலையத்துக்கு கொண்டு வர அவரிடம் இருந்தே 190 டாலர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வழக்கு கோர்ட்டுக்கு செல்லும் போது வழக்கு செலவுகளுக்காக 900 டாலர் பணத்தை அந்த குடிகார டிரைவர்தான் செலுத்த வேண்டும். அது தவிர ஏற்கெனவே விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் நிதிக்கு 100 டாலர், சாலை போக்குவரத்துக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் கல்வி நிதிக்கு 100 டாலர், லைசென்ஸ் ரத்து செய்யப்படுவதால் அந்த டிரைவர் மறுபடியும் டிரைவிங் வகுப்புகளுக்கு சென்று டிரைவிங்கை முறையாகக் கற்றுக் கொள்ள கட்டணம் 600 டாலர். கூடுதல் இன்சூரன்ஸுக்கு 3000 டாலர். முதல் தடவை மது அருந்திவிட்டு மாட்டிக் கொண்டால் மேற்குறிப்பிட்ட அபராதம் விதிக்கப்படும். இரண்டாவது தடவை மாட்டிக் கொண்டால் அபராதம் இரட்டிப்பாகும். மூன்றாவது தடவை மாட்டிக் கொண்டால் மூன்று மடங்கு அபராதம் விதிக்கப்படுவதோடு டிரைவிங் லைசென்ஸும் நிரந்தரமாக பறிக்கப்படும். பிறகு அந்த நபர் தன்னுடைய வாழ்நாளில் எந்த ஒரு வாகனத்தையும் ஓட்ட முடியாது...''

மார்ட்டின் ஸாம்ஸ் புன்னகைத்தான்.

''எனக்கும் இது தெரியும்.''

''தெரிந்தும் ஏன் தவறு செய்தாய்?''

''நான்தான் சொன்னேனே...! என்னுடைய அலுவலகத்தில் ஒரு பார்ட்டி நடந்தது. அந்த பார்ட்டியில் என்னுடைய சக ஊழியர்கள் என்னை வற்புறுத்தி குடிக்க வைத்துவிட்டார்கள்.''

வில்பர்ட் குறுக்கிட்டார். ''பார்த்தீர்களா ஸார்...

முன்பு நண்பர்கள் என்று சொன்னான். பிறகு உறவினர்கள் என்று சொன்னான். இப்போது என்ன சொல்கிறான் என்று பாருங்கள்! ஆபீஸில் வேலை பார்க்கும் சக ஊழியர்கள் வற்புறுத்திக் குடிக்க வைத்தார்களாம். இவனிடம் ஏதோ தப்பு இருக்கிறது ஸார்..."

தலையசைத்தார் பால் ஹாரீஸ். "எஸ்! இவன் சரியில்லை. இவனுடைய உடைகளை சோதனை செய்து பார்த்தீர்களா?"

"இல்லை ஸார்"

"முதலில் சோதனை செய்து பாருங்கள்..."

வில்பர்ட் மார்ட்டீனை நெருங்கி அவன் அணிந்து இருந்த பேண்ட், சர்ட் பாக்கெட்டுகளில் கையை நுழைத்து சோதனை செய்தார். சில பொருள்களை எடுத்து மேஜையின் மேல் வைத்தார்.

செல்போன்,

மணி பர்ஸ்

கீ பன்ச்

கைக்குட்டை.

பால் ஹாரீஸ் மணிபர்ஸை எடுத்து பிரித்தார். உள்ளே அமெரிக்கன் டாலர் நோட்டுகள் கற்றையாய்த் தெரிந்தன. மணிபர்ஸின் இன்னொரு பக்கத்தில் போப் ஆண்டவரின் போட்டோ. பெட்ரோல் போட்டதற்கான சில பில்கள்.

மணி பர்ஸை கீழே வைத்து விட்டு செல்போனை எடுத்தார். பட்டனைத் தட்டி செல்லுக்கு வந்த இன்கம்மிங் கால்ஸ்ஸையும் செல்லிலிருந்து போன அவுட் கோயிங் கால்ஸ்ஸையும் பார்த்த பின் மார்ட்டீனிடம் திரும்பினார். கேட்டார்.

"யார் அந்த ஷெர்லி...? உன்னோடு நிறைய தடவை பேசியிருக்கிறாள்."

"என் மனைவி..."

"உனக்கு இத்தனை தடவை போன் செய்ய என்ன காரணம்...? உங்களுக்குள் ஏதாவது பிரச்னையா...?"

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை...! அரைமணி நேரத்திற்கு ஒரு தடவை எனக்கு போன் பண்ணிப் பேசுவது அவளுடைய அன்றாட வழக்கம்..."

"உனக்கு குடிப்பழக்கம் இல்லையென்று சொன்னாய் இல்லையா...?"

"ஆமாம்...!"

"உனக்கு குடிப்பழக்கம் இருக்கிறதா இல்லையா என்பதை உன்னுடைய மனைவியிடம் கேட்டால் தெரிந்து விடும். உனக்கு அந்தப் பழக்கம் இல்லையென்று அவள் சொல்லி விட்டால் உனக்கு எந்த அபராதமும் கிடையாது." சொன்ன பால்ஸ் ஹாரீஸ் அந்த செல்போனிலேயே அவனுடைய மனைவி ஷெர்லியின் எண்களை அழுத்தினார். பதிலுக்கு ரிங் போகாமல் செல்போன் 'ஸ்விட்ச் ஆஃப்' செய்யப்பட்டு இருப்பதாக ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது.

"உன்னுடைய மனைவியின் செல்போன் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருக்கிறது."

"அவள் இப்போது தூங்கும் நேரம். அதனால் தன் செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்து இருக்கலாம்" மார்ட்டீன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பால்ஸ் ஹாரீஸின் பார்வை மேஜையின் மேல் வைத்து இருந்த கைக்குட்டைக்குப் போயிற்று. லேசாய் முகம் மாறியவராய் அந்த கைக்குட்டையை எடுத்தார்.

மெல்லப் பிரித்தபடியே கேட்டார்.

"இது உன்னுடையதுதானே?"

"ஆமாம் ஸார்..."

"இதுக்கு என்ன அர்த்தம்...?" கேட்ட பால்ஸ் ஹாரீஸ் அந்தக் கைக்குட்டையைப் பிரித்துக் காட்டினார்.

கைக்குட்டையில் -

உறைந்து போன ரத்தத்துளிகள்.

3

அமெரிக்காவின் கிழக்கு எல்லையிலிருந்து மேற்கு எல்லைக்கு விமானத்தில் பயணப்பட்டால் ஐந்து மணி நேரமாகிறது. வடக்கிலிருந்து தெற்கே செல்ல நான்கு மணி நேரமாகிறது. அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள நகரங்களிலிருந்து மேற்குப் பகுதி நகரங்களுக்கு விமானத்தில் சென்றால்

கடிகாரத்தில் மூன்று மணி நேரத்தைக் கூட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு அமெரிக்க நாடு கிழக்கு மேற்காகப் பரந்து விரிந்துள்ளது. நம் நாட்டிலிருந்து அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சான்பிரான்சிஸ் கோவுக்குச் செல்பவர்கள் சிங்கப்பூர் வழியாக சென்றால் பயண தூரம் குறைவு.

சாஃப்ட்வேர் கம்பெனியிலிருந்து களைப் போடு அபார்ட்மெண்ட் திரும்பி குளித்து டிரஸ் மாற்றிக் கொண்டு ரிமோட் கண்ட்ரோலோடு கிரிக்கெட் மேட்ச் பார்க்க டி.வி.க்கு முன்பாய் உட்கார்ந்த செங்குட்டுவன் அழைப்பு மணி சத்தம் கேட்டு எழுந்து போய் கதவின் தாழ்ப்பாளை விலக்கினான்.

வெளியே -

லூசி.

செங்குட்டுவன் மலர்ந்தான்.

"ஓ... லூசி...! நீயா...? வா... வா... என்ன ஒரு சர்ப்ரைஸ்...!"

லூசி உள்ளே வராமல் கோபக் கனல் தெறிக்கும் முகத்தோடு கேட்டாள். அமெரிக்க ஆங்கிலம் ஆத்திரத்தோடு அவளுடைய அரிசிப் பற்களில் அரைபட்டது. "எங்கே அந்த ஜடம்?"

"ஜடமா...?"

"ம்... ஜடம்தான்...! காதலின் அருமை தெரியாத ஜடம்... ஒரு பெண்ணின் மனதைப் புரிந்து கொள்ளாத முட்டாள்."

செங்குட்டுவன் நெற்றியைச் சுருக்கினான்.

"நீ யாரைச் சொல்கிறாய் லூசி...?"

"உன்னோடு இந்த அபார்ட்மெண்ட்டில் தங்கியிருக்கிறானே... உன்னுடைய நண்பன்... அவனைத்தான் சொல்கிறேன்."

"ஓ... ஜாகீர்...!"

"அந்த ராஸ்கல்தான்!"

"அவன்தான் இன்றைக்குக் காலையில் ஆறுமணிக்கே எழுந்து குளித்து அமர்க்களமாய் உடை மாற்றிக் கொண்டு உன்னைப் பார்க்கப் புறப்பட்டானே...?"

"அப்படி சொல்லிவிட்டு எங்கே போனான்?"

"அப்படியானால் உன்னைப் பார்க்க அவன் வரவில்லையா லூசி...?"

"வரவில்லையே!"

"ஏன்...?"

"என்னைக் கேட்டால்...?"

"அவனிடம் செல்போனில் பேசினியா?"

"பேசினேன்."

"என்ன சொன்னான்?"

"வண்டி வண்டியாய் பொய் சொன்னான். என்னை டைமண்ட் ஸ்கொயர்க்கு வரச் சொல்லி விட்டு இவன் போய் யூனியன் ஸ்கொயரில் நின்று கொண்டான். ஏன் என்று கேட்டால் யாரோ அவனுக்கு போன் செய்து என்னைப் போலவே பேசினார்களாம். அழகாய் கதை விட்டான். அந்த நெம்பரை செக் செய்து பார் என்று சொன்னேன். செக் செய்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு செல்போனை அணைத்தவன்தான். அதற்குப் பிறகு அவன் என்னிடம் பேசவில்லை. நான் அவனைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போது 'நெம்பர் பிஸி' என்றும் 'நோ ரெஸ்பான்ஸ்' என்றும் மெஸேஜ் வந்தது. சரியான பொய்யன்...! அவனிடமிருந்து போன் வரும் என்று காலையில் இருந்து காத்து இருக்கிறேன். போன் வரவேயில்லை...!"

செங்குட்டுவன் கையமர்த்தினான்.

"பொறு லூசி... கோபப்படாதே...! ஜாகீர் உனக்கு போன் செய்யவில்லை என்றால் அவனுக்கு ஏதாவது பிரச்னை ஏற்பட்டு இருக்கலாம்..."

"அவனுக்கு ஒரு பிரச்னையும் கிடையாது. என்னைவிட அழகாய் வேறு எவளையாவது பார்த்து இருப்பான்...! ஏதாவது ஒரு பக்கம் தள்ளிக் கொண்டு போயிருப்பான்."

"சேச்சே...! ஜாகீர் அப்படிப்பட்டவன் இல்லை. உன் மேல் உயிரையே வைத்து இருக்கிறான் லூசி...!"

"நீ அவனுடைய நண்பன்தானே...! அப்படித்தானே பேசுவாய்...?"

"நான் அவனுடைய செல்லுக்கு முயற்சி செய்கிறேன்."

"செய்... செய்...! செய்து பார்த்தால்தானே

உன்னுடைய நண்பனின் யோக்யதை உனக்குத் தெரியும்."

செங்குட்டுவன் தன் செல்போனை எடுத்து ஜாகீரின் செல்போனை தொடர்பு கொள்ள முயல 'நோ ஆன்ஸர்' என்ற வாசகம் சிவப்பு எழுத்துக்களில் மின்னியது. லூசி செல்போனை எட்டிப் பார்த்து விட்டு சொன்னாள். "பார்த்தாயா... திருடன்...!"

"லூசி...! எனக்கு என்னவோ சந்தேகமாய் இருக்கிறது...!"

"என்ன சந்தேகம்...?"

"ஜாகீர்க்கு ஏதாவது ஆபத்து...?"

லூசி சிரித்தாள். "ஆபத்து அவனுக்கா...? நீ கற்பனை பண்ணாதே! அவன் எவளையாவது தள்ளிக் கொண்டு போயிருப்பான்!"

"நான் நம்பமாட்டேன்...!"

"அவனைப் பற்றி உனக்குத் தெரியாது. எனக்குத்தான் தெரியும்...! சரி... நான் கிளம்புகிறேன். அவன் எப்படியும் நடு ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேல்தான் வருவான். வந்தால் நான் சொன்னதாய் ஒரு விஷயம் சொல்லு...!"

"என்ன...?"

"குட் பை டூ ஆல்...!"

"லூசி... அவசரப்படாதே... ஜாகீர் ரொம்ப ரொம்ப நல்லவன்..."

"நீ... இந்தியன்! அவனும் இந்தியன். ஒரு இந்தியன் இன்னொரு இந்தியனை விட்டுக் கொடுப்பானா என்ன? உனக்கும் சேர்த்து ஒரு குட்பை... நான் வரட்டுமா?"

செங்குட்டுவன் திகைத்து நிற்க, லூசி ஒரு கோபப் பார்வையை வீசிவிட்டு வெளியேறினாள்.

"ப்ளீஸ்... லூசி...! ஒரு நிமிஷம் நான் சொல்வதைக் கேள்...!"

அவளைப் பின் தொடர்ந்து வாசலுக்குப் போக - அதே விநாடி - 'SAN - POLICE' என்ற வாசகங்களோடு சிவப்பு விளக்கு சுழலும் அந்த போலீஸ் ஜீப் அபார்ட்மெண்ட் வாசலில் வந்து நின்றது.

கரு நீல யூனிபார்மில் ஒரு போலீஸ் அதிகாரி இறங்கினார். லூசியையும் செங்குட்டுவனையும்

மாறி மாறி பார்வையால் நனைத்துக் கொண்டே பக்கத்தில் வந்தார். பனிப்புகை பறக்கும் வாயோடு கேட்டார்.

"அபார்ட்மெண்ட் நெம்பர் 401 இதுதானே?"

செங்குட்டுவன் முன்னால் வந்தான்.

"எஸ்... ஸார்..."

"இங்கே ஜாகீர் என்ற பெயரில் யாராவது தங்கியிருந்தார்களா?"

"யூ... ஆர்... கரெக்ட் ஸார்...! ஜாகீர் என்னுடைய நண்பன்தான்...! அவனுக்கு என்னாயிற்று ஸார்...? ஏதாவது பிரச்னையா?"

செங்குட்டுவன் கேட்ட கேள்விக்கு போலீஸ் அதிகாரி பதில் சொல்லாமல் லூசியைக் காட்டி "இந்தப் பெண் யார்?" என்று கேட்டார்.

"இவள் பெயர் லூசி. ஜாகீரும் இவளும் காதலர்கள்!"

"அப்படியா...? சரி... இரண்டு பேரும் ஜீப்பில் ஏறுங்கள்..."

"எதற்கு...?"

"ஜாகீரைப் பார்க்கத்தான்..."

"ஜாகீர் எங்கே...?"

"நேப்பியர் ஹாஸ்பிட்டலில்"

"அவன் உடம்புக்கு என்ன?"

"அந்தக் கவலையெல்லாம் பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் ஜாகீர் இப்போது இருப்பது மார்ச்சுவரியில்!"

செங்குட்டுவனும் லூசியும் அதிர்ந்து போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஸ... ஸ... ஸார்... ஜாகீர்க்கு என்னாயிற்று?"

"மர்டர்..."

"யார்...? எப்படி...? எதற்காக...?"

"இப்போது நீங்கள் கேட்ட இந்த சின்னச்சின்ன மூன்று கேள்விகளுக்கும் விளக்கமாக பதில் சொல்ல வேண்டியது நீங்கள்தான்! ம்... போய் ஜீப்பில் ஏறுங்கள்...!"

"ஸ... ஸார்..."

"நோ...! இங்கே எந்தப் பேச்சும் வேண்டாம். ஸ்டேஷனில் போய் பேசிக் கொள்வோம்." கடுமையான குரலில் சொல்லியவர் போலீஸ் ஜீப்பைக் காட்டினார்.

4

அமெரிக்காவில் உள்ள நகரங்களில் நியூயார்க் நகரம் மட்டுமே 24 மணி நேரமும் தூங்காமல் விழித்துக் கொண்டு இருக்கும் நகரம். கடல் வழி, - நில வழி - ஆகாய வழி என்று மூன்று வழிகளின் மூலமாகவும் மக்கள் வெள்ளம் இந்நகர்க்குள் 24 மணி நேரமும் நுழைந்து கொண்டிருக்கிறது. சாலைகளில் பல மைல்கள் தூரத்திற்கு (அமெரிக்காவில் கிலோ மீட்டர் கணக்கு இல்லை. மைல் கணக்குத்தான்) நீண்டு செல்லும் மேம்பாலங்கள், ஆற்றின் உள்ளே போடப்பட்டு இருக்கும் சுரங்கப் பாதைகள், தரைக்குக் கீழே செல்லும் ரயில் பாதைகள், நகரைச் சுற்றி ஓடும் ஹட்சன் நதியில் இயங்கும் ஃபெரி எனப்படும் சிறு கப்பல்கள் - இப்படி நகர் முழுவதும் போக்குவரத்து வசதி வியக்கும் வகையில் அமைந்துள்ளதால் சாலைகளில் 'ட்ராஃபிக் ஜாம்' பிரச்னையெல்லாம் கிடையவே கிடையாது.

பால்ஸ் ஹாரீஸ் காட்டிய அந்த ரத்தக்கறை கர்ச்சீப்பைப் பார்த்ததும் மார்ட்டினின் முகம் மாறியது. கண்களில் மிரட்சி பரவியது.

''இது உன்னுடைய கைக்குட்டைதானே?''

''ஆமாம்... ஸார்...''

''இதில் எப்படி ரத்தம்?''

''தெ... தெ... தெரியவில்லை... ஸார்''

''உனக்குத் தெரியாமல்... உன்னுடைய கர்ச்சீப்பில் எப்படி ரத்தம்?''

''அ... அ... அது... அதுதான் புரியவில்லை ஸார்...''

''சிலர்க்கு மூக்கில் பிரச்னை ஏற்பட்டு ரத்தம் வருவது உண்டு. அப்படிப்பட்ட பிரச்னை ஏதாவது உனக்கு உண்டா?''

''இல்லை... ஸார்... அயாம் கொயட் நார்மல்''

''பின் எப்படி ரத்தம்?''

''ஸார்... உங்களைப் போலவே எனக்கும் இந்தக் கேள்விக்குப் பதில் தெரியாது!''

வில்பார்ட் கோபமானார். ''ஸார்! இவனை ரெட் செல்லுக்குக் கொண்டு போய் நான்கு மிதி மிதித்தால்தான் உண்மை வெளியே வரும்.''

''கொஞ்சம் பொறுங்கள் வில்பார்ட். இவன் இப்போது போதையில் இருக்கிறான். நாம் கேட்கிற கேள்விகளுக்கு அவனால் எதையுமே நினைவுக்குக் கொண்டு வந்து தெளிவாக பதில் சொல்ல முடியவில்லை.''

''அவன் நடிக்கிறான் ஸார்.''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. இந்த ரத்தக்கறை கைக்குட்டைக்குப் பின்னால் ஏதோ ஒரு விபரீதம் நடந்து இருக்கிறது. அது என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நாம் உடனடியாக ஒரு வேலை செய்ய வேண்டும்.''

''சொல்லுங்கள் ஸார்!''

''இவனுடைய வீட்டு முகவரி இப்போது நமக்குத் தெரியும். இவனை லாக்கப்பில் போட்டு அடைத்துவிட்டு வீட்டுக்குப் போய் அங்கேயிருக்கும் இவனுடைய மனைவி ஷெர்லியை விசாரித்தால் நமக்கு உண்மைகள் ஓரளவு பிடிபடலாம்.''

''யூ ஆர் கரெக்ட் ஸார்...''

''போய் இவனை லாக்கப்பில் தள்ளி விட்டு வாருங்கள்...''

''எஸ்... ஸார்'' சொன்ன வில்பார்ட், மார்ட்டின் ஸாம்ஸை நாற்காலியினின்றும் எழுப்பி கட்டிடத்தின் உள்ளே இருந்த லாக்கப்புக்கு தள்ளிக் கொண்டு போனார். ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்தார்.

''போகலாம் ஸார்!''

''அவனோட கார் சாவி உங்ககிட்டதானே இருக்கு?''

''ஆமா... ஸார்!''

''அந்த கார்லயே வீட்டுக்குப் போலாம்!''

''ஸார்... நாளைக்கு ஏதாவது பிரச்னை?''

''ஒரு பிரச்னையும் வராது... நாம் போலீஸ் ஜீப்பில் போனால் அந்த வீட்டுக்கு அக்கம் பக்கம்

இருப்பவர்கள் விளக்குகளைப் போட்டுக் கொண்டு ஜன்னல்கள் வழியே எட்டிப் பார்த்து நாம் வந்த விஷயத்தை பெரிது பண்ணி விடுவார்கள். கார் சாவியை என்னிடம் கொடுங்கள்.''

வில்பர்ட் சாவியைக் கொடுக்க - அதை வாங்கிக் கொண்ட பால் ஹாரீஸ் போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸுக்கு வெளியே ஒரு சில்வேனியா மரத்துக்குக் கீழே நிறுத்தியிருந்த அந்த ராயல் வேகன் காரை நோக்கிப் போனார்.

''ஆள் வசதியான பார்ட்டிதான்...!''

''ஆனால் தப்பானவன் ஸார்...''

''பார்க்கலாம்...! வீட்டுக்குப் போய் அவனுடைய மனைவியிடம் விசாரித்தால் உண்மை என்ன என்பது தெரிந்து விடும்.'' சொல்லிக் கொண்டே காரின் டிரைவிங் சீட்டை நோக்கிப் போன பால் ஹாரீஸ் சட்டென்று நின்றார்.

முகம் மாறியிருந்தது.

''வில்பர்ட்!''

''ஸார்''

''காரின் டிக்கியைப் பாருங்கள்''

வில்பர்ட் பார்த்தார். போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸ் வளாகத்தில் எரிந்து கொண்டிருந்த 'ப்ளட் லைட்' வெளிச்சத்தில் காரின் டிக்கி போர்ஷன் தெளிவாய்த் தெரிய - அதன் கைப்பிடியருகே இருந்த இடுக்கிலிருந்து ஏதோ சிவப்பு நூலிழை போல் தெரிந்தது.

வில்பர்ட் டிக்கியை நெருங்கி குத்துக்காலிட்டு உட்கார்ந்து தன் இடதுகையின் ஆட்காட்டி விரலால் அந்த சிவப்பு நூலிழையைத் தொட்டுப் பார்த்தார்.

அது நூலிழை அல்ல.

சின்னதாய் ஒரு ரத்தக் கோடு.

வில்பர்ட் அதிர்ச்சியோடு நிமிர்ந்து பால் ஹாரீஸை ஏறிட்டார்.

''ஸார்... இது ரத்தம்...!''

''மைகுட்னஸ்! முதலில் டிக்கியைத் திறந்து உள்ளே என்ன இருக்கிறது என்று பாருங்கள்...''

வில்பர்ட் சாவியை வாங்கி டிக்கியைத் திறந்து வைக்க பால் ஹாரீஸ் எட்டிப் பார்த்தார்.

உள்ளே -

ஒரு ஆணின் உடல் எசகு பிசகாய் மடக்கி

வைக்கப்பட்டு இருந்தது. வயிற்றுப் பகுதி ரத்தக் களரியாய் மாறியிருந்தது.

5

அமெரிக்கர்கள் தங்கள் நாட்டில் உயர உயரமாய் கட்டிங்களைக் கட்டுவதாலோ என்னவோ இயற்கையன்னையும் அவர்களுக்கு உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சியான 'நயாகரா'வைப் பரிசாகக் கொடுத்து இருக்கிறாள். 'நயாகரா' என்ற சொல்லுக்கு 'நீரின் இடியோசை' என்று பொருளாம். பனி மலைகளில் உருகிப் பெருகும் நீர் 'இரிக்' என்ற ஏரியிலிருந்து ஒண்டாரியோ என்ற ஏரிக்கு பாய்வதுதான் நயாகரா நீர்வீழ்ச்சியாகும். அமெரிக்க - கனடா நாடுகளின் எல்லையில் இருக்கிறது நயாகரா. நீர் விழும் பகுதி குதிரை லாட வடிவில் இருப்பதால் இதை 'ஹார்ஸ் ஷூ ஃபால்ஸ்' என்கிறார்கள். தண்ணீர் விழும் உயரம் 170 அடி. அமெரிக்காவில் 1075 அடி அகலத்திற்கும் கனடாவில் 2200 அடி அகலத்திற்கும் தண்ணீர் கொட்டுகிறது.

'சான்பிரான்ஸிஸ்கோவின் " DOWN TOWN ' பகுதியில் இருந்த நேப்பியர் ஹாஸ்பிட்டலுக்குள் போலீஸ் ஜீப் நுழைந்த போது ராத்திரி எட்டு மணி.

ஜீப்பினின்றும் இறங்கிய போலீஸ் அதிகாரி ஹாஸ்பிட்டலின் போர்டிகோ படிகளில் நின்றிருந்த இன்னொரு அதிகாரியை நோக்கிப் போனார்.

''மிஸ்டர் ஐசக்...! கொலை செய்யப்பட்ட ஜாகீர் தங்கியிருந்த இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அங்கே இருந்த 'லூசி' என்ற பெண்ணையும், 'செங்குட்டுவன்' என்ற ஒரு ஸாஃப்ட்வேர் என்ஜினியரையும் விசாரணைக்காக கூட்டிக் கொண்டு வந்து இருக்கிறேன்.''

பழுப்பு நிற கண்களோடு இருந்த ஐசக் என்ற போலீஸ் அதிகாரியின் சதைப் பிடிப்பு இல்லாத உதடுகளில் ஒரு புன்னகை அரும்பியது.

"குட் ஜாப் மிஸ்டர் எடிசன்...! அந்த இரண்டு பேரும் ஜாகீர் கொலையானது பற்றி என்ன சொல்கிறார்கள்?"

"அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை."

"கொலைச் செய்தியைக் கேட்டதும் அவர்களின் ரியாக்ஷன் எப்படியிருந்தது?"

"அதிர்ந்து போனார்கள். போலீஸ் ஜீப்பில் வரும் போது அந்தப் பெண் ஹூசி அழுது கொண்டே வந்தாள்."

"அவர்கள் எங்கே?"

"ஜீப்பில்..."

"இறக்கி கூட்டிக் கொண்டு வாருங்கள். முதலில் அவர்கள் ஜாகீரின் உடலை மார்ச்சுவரியில் பார்க்கட்டும். பிறகு விசாரணையை வைத்துக் கொள்ளுவோம்...!"

போலீஸ் அதிகாரி எடிசன், ஜீப்பிற்கு போய் உள்ளே தலை குனிந்து உட்கார்ந்திருந்த செங்குட்டுவனையும் , கர்ச்சீப்பால் முகத்தை பொத்தியபடி அழுது கொண்டிருந்த ஹூசியையும் கீழே இறங்கச் சொன்னார்.

இறங்கினார்கள்.

"நீங்கள் இரண்டு பேரும் போலீஸ் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பு கொடுத்தால்தான் ஜாகீரைக் கொலை செய்தது யார் என்பதைக் கண்டு பிடிக்க முடியும்." போலீஸ் அதிகாரி எடிசன் அதட்டும் குரலில் சொல்ல, செங்குட்டுவன் அவரைக் கோபமாய்ப் பார்த்தான்.

"ஸார்...! எங்கள் இருவரையும் ஏன் குற்றவாளிகள் போல் நடத்துகிறீர்கள்...? ஜாகீர் என்னுடைய நண்பன். ஹூசி அவனுடைய காதலி. அவன் கொலை செய்யப்பட்ட செய்தி எங்களுக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்து இருக்கிறது. அவன் எப்படி, யாரால் கொலை செய்யப்பட்டான் என்கிற விபரம் எங்களுக்கு வேண்டும்"

"இட்ஸ் ஓ.கே... ஐ... வில்... டெல் யூ...! ஜாகீர் 'DOWN TOWN' ஏரியாவில் உள்ள சைனா சிட்டியில் இருக்கும் ஒரு பாழடைந்த கட்டிடத்துக்குப்

பின்னால் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த உடம்போடு கிடப்பதைப் பார்த்துவிட்டு யாரோ பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்து சொன்னார்கள். சான் - போலீஸ் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து போய் உடம்பை மீட்டது. அவருடைய சர்ட் பாக்கெட்டில் இருந்த ஐ.டி.கார்டு மூலம் அட்ரஸ் கிடைத்தது. அந்த அட்ரஸுக்கு வந்த போதுதான் உங்கள் இருவரையும் பார்த்தேன்... ஜாகீர் யாரால் என்ன காரணத்துக்காக கொலை செய்யப்பட்டு இருப்பார் என்று தெரியவில்லை. சான்பிரான்சிஸ்கோவில் ஒரு இந்தியர் இப்படி கொலை செய்யப்படுவது இது முதல் முறை அல்ல. கடந்த ஆறுமாத காலத்திற்குள் மூன்று இந்தியர்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். மூன்றாவதாகக் கொலை செய்யப்பட்டு இருப்பவர்தான் ஜாகீர்."

செங்குட்டுவனும் ஹூசியும் மிரட்சியோடும் பயத்தோடும் எடிசனையே பார்க்க, எடிசன் தொடர்ந்தார்.

"ஜாகீர் கொல்லப்பட்ட இந்த மூன்றாவது கொலையால் சான் - போலீஸ் மொத்தமும் அரண்டு போயிருக்கிறது. கொலையாளியை உடனடியாய் மடக்கிப் பிடிக்க வேண்டும் என்று கலிபோர்னியாவின் கவர்னர் உத்தரவிட்டுள்ளார். நாங்கள் மேலதிகாரிகளால் நெருக்கப்படும்போது உங்களைப் போன்றவர்களை நாங்களும் கொஞ்சம் சிரமப்படுத்த வேண்டியிருக்கிறது."

எடிசன் பேசிக் கொண்டே ஹூசியையும் செங்குட்டுவனையும் ஹாஸ்பிட்டலின் கடைசியில் இருந்த மார்ச்சுவரிக்கு கூட்டிப் போனார்.

பனிக்கட்டித் துண்டங்களுக்கு நடுவே கிடத்தப்பட்டு இருந்த ஜாகீரின் உடலைப் பார்த்ததும் ஹூசி அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து பெரிய குரலில் கதறி அழ ஆரம்பித்தாள். செங்குட்டுவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஜாகீரின் உடலை அருகே சென்று பார்த்தான். குறைந்தபட்சம் ஏழெட்டு தோட்டாக்களாவது ஜாகீரின் உடலைக் குதறியெடுத்து இருந்தது.

மாடிப் பகுதியில் இருந்த சதை காணாமல் போய் ஒரு பக்க விலா எலும்புகள் தெரிந்தன. முகம் மட்டும் கொஞ்சம் கூட சிதையாமல் அது ஜாகீர்தான் என்பதை உறுதி செய்தது.

செங்குட்டுவனின் மனசுக்குள் கோபமாய் கேள்விகள் முளைத்தன.

'ஜாகீர் மேல் யார்க்கு என்ன கோபம்?'

'இப்படியொரு கொலை வெறி ஏன்?'

போலீஸ் அதிகாரி எடிசன் சொன்னது காதுகளில் இன்னமும் ரீங்காரித்தது. 'கடந்த ஆறுமாத காலத்திற்குள் மூன்று இந்தியர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவதாகக் கொலை செய்யப்பட்டு இருப்பவர்தான் ஜாகீர்.'

எடிசன் சொல்வது உண்மையாக இருந்தால் நான்காவதாய் அடுத்து ஒரு இந்தியர் கொலை செய்யப்படுவதற்கு முன்பு கொலையாளியைப் போலீஸார் பிடிக்க வேண்டும்.

'பிடிப்பார்களா?'

செங்குட்டுவனுக்கு உடம்பு வியர்த்துக் கொட்ட - இருதயம் உச்சபட்சத் துடிப்புக்குப் போயிற்று.

6

கலிபோர்னியா மாகாணத்தின் தலைநகரமான லாஸ் ஏஞ்சல்ஸ் ஒரு அழகான நகரம். சினிமா உலகத்தின் தலைநகரமாக விளங்கும் 'ஹாலிவுட்' என்னும் கனவு நகரம். இங்குதான் புகழ் பெற்ற யுனிவர்சல் ஸ்டூடியோ உள்ளது. 420 ஏக்கர் பரப்பில் உள்ள இந்த ஸ்டூடியோவில் இந்த உலகத்தையே - இன்னும் சொல்லப்போனால் இந்த அண்டத்தையே அடக்கியுள்ளார்கள். உள்ளே நுழையக் கட்டணம் 45 டாலர். நம் நாட்டு ரூபாய் மதிப்பில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் ரூபாய். ஸ்டூடியோவை சுத்தமாக வைத்து

இருக்கிறார்கள். யுனிவர்சல் ஸ்டூடியோவில் குப்பைகளைப் போட ஆங்காங்கே கூடைகள் வைக்கப்பட்டுள்ளன. யாராவது இரண்டு பேர் ஓரிடத்தில் நின்று ஏதாவது தின்பண்டங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் அவர்களை நோக்கி குப்பை கூடை நகர்ந்து வந்து 'என்னை உபயோகித்துக் கொள்ளுங்கள்' என்று குரல் கொடுக்கும். அவர்கள் குப்பைகளைப் போட்டதும் அந்தக் கூடை தானாக நகர்ந்து தனது பழைய இடத்திற்குப் போய் விடுகிறது. சுற்றுலாப் பயணிகள் நிற்கும் இடத்தைத் தூரத்திலிருந்து கண்காணிக்கும் துப்புரவுத் தொழிலாளர்கள் ரிமோட் மூலம் அந்தக் குப்பைக் கூடைகளை இயக்குகிறார்கள்.

அழைப்பு மணி அலறும் சத்தம் கேட்டு நல்ல உறக்கத்தில் இருந்த ஷெர்லி போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. நீல நிற நைட்கவுனில் பொன்னிற கூந்தலோடு ஒரு தேவதையைப் போல் தோற்றம் அளித்த ஷெர்லிக்கு இருபத்தைந்து வயது இருக்கலாம். அமெரிக்க பெண்களுக்கே உரித்தான காரட் நிறம். தேன் நிற விழிகள். ரோஜா வண்ண உதடுகள்.

அழைப்பு மணி மீண்டும் ஒலிக்க இப்போது தூக்கம் முற்றிலும் கலைந்து போன ஷெர்லி வேகமாய் எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். வெளியே நின்றிருந்த போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் சற்றே கலவரமானாள்.

''எஸ்?''

''அயாம் பால் ஹாரீஸ்... போலீஸ் சார்ஜண்ட் ஆஃப் ஹெட்க்வார்ட்டர்ஸ்...''

''ஓ.கே...! என்ன வேண்டும் உங்களுக்கு?''

''நீங்கள்தானே மிஸஸ் ஷெர்லி?''

''எஸ்''

''உங்கள் கணவரின் பெயர் மார்ட்டீன் ஸாம்ஸ்?''

''ஆமாம்''

''உங்களிடம் இந்த நள்ளிரவில் ஒரு சிறு

விசாரணையை நடத்த வேண்டியிருக்கிறது... நான் உள்ளே வரலாமா?''

''ப்ளீஸ்'' சொல்லிவிட்டு ஷெர்லி உள்ளே போக பால் ஹாரீஸ் அவளைப் பின் தொடர்ந்து போனார். அவர்க்கு ஒரு நாற்காலியைக் காட்டிய ஷெர்லி அவர் உட்கார்ந்ததும் கேட்டாள்.

''என்ன விசாரணை?''

''உங்கள் கணவர் மார்ட்டீன் ஸாம்ஸ் வீட்டில் இல்லையா...?''

''இல்லை! நாளை ஸ்டான் ஃபோர்டில் அவருடைய நண்பர் ஒருவர்க்குத் திருமணம். அந்த திருமணத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று மாலையே புறப்பட்டுப் போய்விட்டார்.''

''மார்ட்டீன் ஸாம்ஸ் என்ன வேலை பார்க்கிறார்?''

''கலிஃபோர்னியா ஷேர்ஸ் கம்பெனியில் அவர் சீஃப் அட்வைஸராக வேலை பார்க்கிறார். எதற்காக இந்த நள்ளிரவில் என் வீட்டிற்கு வந்து அவரைப் பற்றியே கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்?''

''உங்கள் கேள்விக்கு இறுதியில் பதில் சொல்கிறேன். இப்போது நான் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். உங்கள் கணவர்க்கு குடிப்பழக்கம் உண்டா?''

''இல்லை...''

''எந்த சந்தர்ப்பத்திலாவது குடிப்பவரா...? அக்கேஷனலாய் பார்ட்டி, ஃபீஸ்ட் என்று கலந்து கொள்கிறபோது?''

''அவர் குடித்து நான் பார்த்தது இல்லை''

பால் ஹாரீஸ் ஒரு சின்னப் புன்னகையை உதிர்த்துவிட்டு சொன்னார்.

''இன்றைக்கு ராத்திரி உங்கள் கணவர் மார்ட்டீன் ஸாம்ஸ் குடித்துவிட்டு கார் ஓட்டி வந்து போலீஸில் மாட்டிக் கொண்டார் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா... மாட்டீர்களா?''

''என்ன உளறுகிறீர்கள்...?-என்னுடைய கணவர் குடித்து விட்டு வந்தாரா...?''

''ஆமாம்...''

''நான் நம்ப மாட்டேன்...''

''இதையே நீங்கள் நம்பவில்லையென்றால் அவர் ஒரு நபரைக் கொலை செய்து அந்த டெட்பாடியை டிஸ்போஸ் செய்வதற்காக காரின் டிக்கியில்

போட்டுக் கொண்டு வந்தார் என்றால் நம்பவா போகிறீர்கள்?''

ஷெர்லி அதிர்ந்து போய் நிமிர்ந்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''இதோ பாருங்கள் மிஸஸ் ஷெர்லி! உங்கள் கணவர் கையும் களவுமாய் மாட்டிக் கொண்டு இப்போது போலீஸின் பிடியில் இருக்கிறார். அவரை விசாரித்தால் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார். அவர் குடித்துவிட்டு போதையில் இருக்கும் பொழுது ஏதோ ஒரு விபரீத சம்பவம் நடந்து இருக்கிறது. அந்த சம்பவம் ஏற்படுத்திய ஆத்திரத்தின் காரணமாய் உங்கள் கணவர், கொலை செய்து இருக்கலாம். அந்த டெட்பாடியை டிஸ்போஸ் செய்ய காரின் டிக்கியில் போட்டுக் கொண்டு வந்து இருக்கிறார். உண்மைகள் இப்படித் தெள்ளத் தெளிவாய் இருக்கும் போது உங்கள் கணவர் தான் அந்தக் கொலையைச் செய்யவில்லை என்றும் கொலை செய்யப்பட்ட நபர் யார் என்றே தனக்குத் தெரியாது... அவரை இதற்கு முன் பார்த்ததுகூட இல்லையென்றும் சொல்கிறார்.''

ஷெர்லி குறுக்கிட்டாள். ''எஸ்... ஹி... ஈஸ் கரெக்ட். அவர் சொல்வதுதான் உண்மையாக இருக்கும். ஏனென்றால் ஒரு மனிதரைக் கொலை செய்யக்கூடிய அளவுக்கு அவர் ஒரு மோசமான மனிதர் இல்லை. அவர் குடித்திருப்பார் என்பதைக்கூட என்னால் நம்ப முடியவில்லை...!''

''நீங்கள் மார்ட்டீன் ஸாம்ஸ்க்கு மனைவி. உங்களால் இப்போதைக்கு அப்படித்தான் பேச முடியும்.''

''நோ... இன்ஸ்பெக்டர்...! வாட் அயாம் ஸேயிங் ஈஸ் அப்சல்யூட்லி கரெக்ட். அவர் அப்படிப்பட்டவர் இல்லை. நான் வந்து அவரிடம் பேசுகிறேன். அவர் இப்போது எங்கே இருக்கிறார்?''

''போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸில்.''

''வாருங்கள் போகலாம்... நான் அவரிடம் பேசினால் உண்மை நிலவரம் என்ன என்பது தெரிந்து விடும்.''

''ஒரு நிமிஷம்...!''

''என்ன...?''

''இந்த போட்டோவைப் பாருங்கள்.'' பால் ஹாரீஸ்

தன் கோட் பாக்கெட்டிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்தார்.

''யாருடைய போட்டோ...?''

''உங்களுடைய கணவரின் கார் டிக்கியில் அடைத்து வைக்கப்பட்டு இருந்த - கொலை செய்யப்பட்ட நபர். இவரை உங்களுக்குத் தெரியுமா வென்று பாருங்கள்...''

ஷெர்லி போட்டோவை வாங்கிப் பார்த்தாள். பார்த்த விநாடியே இருதயத்துக்குள் ஒரு பிரளயம் நிகழ்ந்த உணர்வு.

'இவரா?' மனசுக்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டு அப்படியே மௌனமாய் நின்றாள். பால் ஹாரீஸ் உசுப்பினார்.

''போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்...? இவரை உங்களுக்குத் தெரியுமா தெரியாதா?''

''தெரியாது.''

''எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எங்கேயும் நீங்கள் இந்த நபரைப் பார்த்ததே கிடையாது?''

''பார்த்ததே இல்லை.''

''ஒ.கே... வாருங்கள்...! ஹெட்குவார்ட்டர்ஸுக்கு போகலாம். உங்கள் கணவரிடம் நீங்கள் எப்படி பேசுவீர்களோ எனக்குத் தெரியாது. இன்றைக்கு ராத்திரி பொழுது விடிவதற்குள் எனக்கு உண்மைகள் வேண்டும். போலீஸை ஏமாற்ற நினைத்தால் பிறகு சட்ட சிக்கலில் மாட்டிக் கொண்டு முழிக்க வேண்டியிருக்கும்.'' சொன்ன பால் ஹாரீஸ் வீட்டைப் பார்வையால் அலசிவிட்டு கேட்டார்.

''வீட்டில் வேறு யாராவது இருக்கிறார்களா?''

ஷெர்லி தலையசைத்தாள்.

''இல்லை... நான் மட்டும்தான்...'' ஷெர்ள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த அலங்கார மேஜையின் மேல் இருந்த டெலிபோன் ஒலிக்க ஆரம்பித்தது.

ரிஸீவரை எடுக்கப் போன ஷெர்லியை பால் ஹாரீஸ் கையமர்த்தினார். ''போனை நீங்கள் அட்டெண்ட் செய்ய வேண்டாம். ரிஸீவரை நான் எடுக்கிறேன்...''

''பை ஆல் மீன்ஸ்...'' ஷெர்லி தள்ளி நிற்க, பால் ஹ்ரீஸ் போய் ரிஸீவரை எடுத்து காதுக்கு ஒற்றினார்.

மறுமுனையில் ஒலிக்கும் குரலுக்காகக் காத்திருந்து - குரல் ஏதும் வராமல் போகவே மெல்ல ''ஹலோ'' என்றார்.

மறுமுனையில் எந்த சத்தமும் இல்லை. பால் ஹாரீஸ் மறுபடியும் குரல் கொடுத்தார்.

''ஹலோ...''

''.....'' பதில் இல்லை.

''ஹலோ...''

எதிர் முனையில் இப்போது ரிஸீவரை 'டொக்' என்று வைக்கும் சத்தம் தெளிவாய் கேட்டது. பால் ஹாரீஸ் ரிஸீவரை வைத்துவிட்டு ஷெர்லியிடம் வந்தார்.

''மிஸஸ் ஷெர்லி! நீங்கள் போனை எடுத்து இருந்தால் பேசியிருப்பார்கள் போல் தோன்றுகிறது. நான் குரல் கொடுத்ததும் ரிஸீவரை வைத்துவிட்டார்கள். இந்த நேரத்துக்கு உங்களுக்கு போன் செய்தது யாராக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?''

''எனக்கு எப்படி தெரியும்?''

''எனி கெஸ் ஒர்க்...?''

''ஸாரி! நான் வீணாக என் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை. என்னோட கணவரைப் பார்க்கப் போகலாமா?''

''ப்ளீஸ்... கம்... வித்... மீ...!'' பால் ஹாரீஸ் போர்டிகோவில் நின்றிருந்த போலீஸ் ஜீப்பை நோக்கி நடக்க, ஷெர்லி பின் தொடர்ந்தாள்.

7

சான்பிரான்சிஸ்கோ நம் குஜராத்தைப் போல் ஒரு பூகம்ப பூமி. 200 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பூகம்பத்தில் நகரமே முற்றிலும் அழிந்து நாசமாகிவிட்டது. இரண்டாவது பூகம்பம் 1889-ல் ஏற்பட்டது. அதில் 1800 கட்டிடங்கள் சேதம் அடைந்தன. பூகம்பத்திற்கு பயந்து இங்குள்ள மக்கள் வீடுகளை மரங்களால் கட்டிக் கொள்கிறார்கள். வீடு முழுக்க மரம் என்பதால்

தீக்குச்சி பற்ற வைத்தால் உடனே அலாரம் அடித்து எச்சரிக்கை செய்யும் அளவிற்கு ஒவ்வொரு வீட்டிலும் சென்சார் வைத்துள்ளார்கள். வீடுகளில் ட்யூப்லைட் உபயோகிப்பது இல்லை. எல்லாம் டேபிள் லேம்ப்தான்.

கண்ணீர் காயாத கண்களோடு லூசி தலை குனிந்து உட்கார்ந்திருக்க, எதிரே போலீஸ் அதிகாரிகள் எடிசன், ஐசக் நாற்காலிகளில் சாய்ந்து இருந்தார்கள். பக்கத்து நாற்காலியில் மிரண்டு போன தினுசில் செங்குட்டுவன் தெரிந்தான்.

எடிசன் லூசியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

''மிஸ் லூசி...! காதலர் தினமான இன்று நீங்களும் ஜாகீரும் டைமண்ட் ஸ்கொயரில் சந்திக்க திட்டம் போட்டிருந்தீர்கள் இல்லையா?''

லூசி கண்ணீரோடு தலையாட்டினாள்.

''ஆமாம் ஸார்...''

''ஆனால் ஜாகீர்க்கு வேறு யாரோ ஒரு பெண் போன் செய்து உன் குரலில் நீ பேசுவது போல் பேசி அவரை யூனியன் ஸ்கொயர்க்கு வரச்சொல்லியிருக்கிறாள். அவரும் அதை நம்பி அந்த இடத்துக்குப் போன போதுதான் ஜாகீர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று நீ சந்தேகப்படுகிறீர்கள்...!''

''எஸ்... ஸார்...!''

''உங்களுடைய செல்போன் உங்களிடம் இருக்கும்போது வேறு யார் உங்கள் போனை உபயோகித்து ஜாகீரிடம் பேசியிருக்க முடியும்?''

''அதுதான் ஸார் எனக்கும் புரியவில்லை. இத்தனைக்கும் என் செல்போன் காலையில் இருந்தே பழுதாகியிருந்தது. செல்போனில் என்ன பிரச்னை என்று எனக்குத் தெரியவில்லை. போனின் ' ON ' பட்டனைத் தட்டினால் ' MEMORY CARD NOT YET READY ' ன்னு டிஸ்ப்ளேயில் வந்தது. அதன் காரணமாய் நான் காலையிலிருந்தே யார்க்கும் போன் செய்யவில்லை. ஜாகீர்க்கு கூட பப்ளிக் பூத்திலிருந்துதான் போன் பண்ணி பேசினேன். அப்போதுதான் எனக்கே தெரிந்தது - என்னைப் போல் யாரோ ஜாகீரிடம் பேசியிருக்கிறார்கள் என்று.''

''ஜாகீர் அதைப்பற்றி உங்களிடம் என்ன சொன்னார்...?''

''நான் அப்படி சொன்னதும் அவர்க்கும் அதிர்ச்சி. அந்த யாரோ ஒரு பெண் அவருடைய செல்போனுக்கு போன் செய்த போது டிஸ்ப்ளேயில் 'LUCY CALLING ' என்ற வாசகம் வந்ததாக சொன்னார். நான் அதை நம்பவில்லை. அப்படியொரு வாசகம் வந்து இருந்தால் நான்தானே அவர்க்கு போன் செய்து இருக்க வேண்டும்? ஆனால் நான் போன் செய்யவில்லை. காரணம் என் செல்போன் பழுதுபட்டு இருந்தது.''

லூசி பேசப் பேச அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த செங்குட்டுவன் குறுக்கிட்டான். எடிசனை ஏறிட்டான்.

''ஸார்...! என்னுடைய சந்தேகத்தை சொல்லலாமா?''

''சொல்லுங்கள்''

''லூசியின் செல்போனில் இருந்த ஒரிஜனல் சிம்கார்டை யாரோ திருடிக்கொண்டு அதற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு டூப்ளிகேட் சிம்கார்டை அவளுடைய செல்போனில் பொருத்தியிருக்க வேண்டும். அந்த டூப்ளிகேட் சிம்கார்டு பொருத்தப்பட்ட காரணத்தினால்தான் லூசியால் யார்க்கும் போன் செய்ய முடியவில்லை. அதே நேரத்தில் லூசியின் சிம்கார்டை வேறு ஒரு செல்போனில் போட்டு லூசியைப் போலவே ஒரு பெண் ஜாகீர்க்கு போன் செய்து பேசியிருக்கிறாள். அந்தப் பெண் யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டால் இந்தக் கேஸில் எழுந்துள்ள எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும்... ஸார்.''

எடிசன் தலையசைத்தார்... ''யூ... மே... பி கரெக்ட்...! லூசி...! உங்களுடைய செல்போனில் உள்ள சிம்கார்டை எடுத்துக் கொடுங்கள். அது ஒரிஜினலா... இல்லையா என்று பார்த்து விடலாம்.''

லூசி தன் செல்போனைப் பிரித்து உள்ளே இருந்த சிம்கார்டை எடுத்துக் கொடுக்க, எடிசன் அதை வாங்கி தனக்குப் பக்கத்தில் இருந்த ஐசக்கிடம் கொடுத்தார்.

''மிஸ்டர் ஐசக்...! இதை டெக்னிகல் செக்ஷனுக்கு கொண்டு போய் சோதனை செய்து

பார்த்துவிட்டு பத்து நிமிடத்திற்குள் ரிப்போர்ட்டுடன் வாருங்கள்.''

''எஸ்... ஸார்'' ஐசக் சிம்கார்டோடு நடந்து போக எடிசன் லூசியை ஏறிட்டார்.

''லூசி...! ஜாகீரின் உடலை முறைப்படி அவருடைய உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவரோட ஃபேமிலி மெம்பர்ஸ் இந்தியாவில் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?''

''ஸார்...! ஜாகீர்க்கு அப்பா அம்மா கிடையாது. அவருடைய அண்ணன் ஒருத்தர் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள வாணியம்பாடி என்ற ஊரில் இருக்கிறார். அந்த ஒரு உறவைத் தவிர வேறு எந்த உறவும் அவர்க்கு இல்லை.''

''அவருடைய அண்ணனின் பெயர் என்ன?''

லூசி யோசிக்க, செங்குட்டுவன் இடை மறித்துச் சொன்னான். ''ரசாக் என்று நினைக்கிறேன் ஸார்''

''அந்த ரசாக்கின் செல் நெம்பர் தெரியுமா?''

''தெரியாது ஸார்...''

எடிசன் தன் நெற்றியைத் தேய்த்தார். ''ஜாகீரை கொலை செய்தவர்கள் அவருடைய ஐ.டி. கார்டை மட்டும் விட்டுவிட்டு செல்போனை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். செல்போன் நம் கைக்கு கிடைத்து இருந்தால் நமக்கு நிறைய விஷயங்கள் கிடைத்து இருக்கும்.''

''ஸார்... நானும் ஜாகீரும் ஒரே ஐ.டி. கம்பெனியில்தான் வேலை பார்க்கிறோம். அங்கே ஒவ்வொரு ஸ்டாஃபுக்கும் ஒரு பர்சனல் ஃபைல் உண்டு. அந்த ஃபைலில் அந்த ஸ்டாஃப் சம்பந்தப்பட்ட எல்லா விபரங்களும் இருக்கும். ஏதாவது விபத்து நேர்ந்து விட்டால இந்தியாவில் இருக்கக்கூடிய உறவினர்களில் முதலில் யார்க்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்கிற விபரமும் இருக்கும். எனவே நீங்கள் எங்கள் ஐ.டி. கம்பெனியின் பி.ஆர்.ஓ.வை தொடர்பு கொண்டு பேசினால் ஜாகீரின் அண்ணன் ரசாக்கின் செல்போன் நெம்பர் கிடைக்கலாம்...!''

''தட்ஸ் குட்... மிஸ்டர் செங்குட்டுவன்...! முதலில் உங்களுடைய ஐ.டி. கம்பெனியின் பி.ஆர்.ஓ. நெம்பரைக் கொடுங்கள். நான் பேசிப் பார்க்கிறேன்!''

செங்குட்டுவன் பி.ஆர்.ஓ.வின் நெம்பரைக் கொடுக்க, எடிசன் அதை தன் செல்போனுக்குக் கொடுத்து எண்களைத் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டு ஐ.டி.கம்பெனியின் பி.ஆர்.ஓ. ரிச்சர்ட் ஹெப்பார்ட் பேசினார். எடிசன் அவரிடம் விபரம் சொல்லி, ஐந்து நிமிடம் பேசி ஜாகீரின் அண்ணன் ரசாக்கின் செல்போன் எண்ணை வாங்கிக் கொண்டு செல்போனை அணைத்த விநாடி - ஐசக் எதிரில் வந்து நின்றார்.

''என்ன மிஸ்டர் ஐசக்...?''

''ஸார்...! லூசியின் செல்போனில் இருந்தது ஒரு போலியான டம்மி சிம்கார்டு. டெக்னிகல் டிபார்ட்மெண்ட்டில் உறுதிபட தெரிவித்து ரிப்போர்ட் கொடுத்து விட்டார்கள்.''

''ஸோ... அவர் அஸ்ஸெம்ஷன் ஈஸ் கரெக்ட். லூசிக்குத் தெரியாமலேயே யாரோ அவளுடைய செல்போனை எடுத்து சிம்கார்டைத் திருடியிருக்கிறார்கள். அந்த சிம்கார்டை பயன்படுத்தி ஜாகீர்க்கு போன் பேசியிருக்கிறார்கள்...! மிஸ் லூசி...!''

''ஸார்...!''

''உங்களுக்குத் தெரியாமல் உங்கள் செல்போனை எடுக்கும் அளவுக்கு நீங்கள் அஜாக்ரதையாய் இருந்து இருக்கிறீர்கள். நீங்கள் தங்கியிருக்கும் அறையில் எத்தனை பேர் உங்களுடைய ரூம் மேட்ஸ்?''

''இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை இரண்டு பேர் என்னுடைய அறையில் இருந்தார்கள். இப்போது அவர்கள் இருவர்க்கும் நியூயார்க்கில் வேலை கிடைத்து போய் விட்டார்கள். இப்போது நான் மட்டுமே அறையில் இருக்கிறேன். வேறு யாரும் கிடையாது.''

''நீங்கள் இப்போது எந்த கம்பெனியில் வேலை பார்க்கிறீர்கள்?''

''எந்த கம்பெனியிலும் இல்லை! நான் பிரைவேட்டாய் ப்ராஜக்ட் ஒர்க் செய்து வருகிறேன். அதே சமயத்தில் வேறு வேலைக்கும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன்.''

''ஒ.கே... மிஸ் லூசி...! இப்போது ஜாகீரின் அண்ணன் ரசாக்கின் செல்லுக்கு போன் செய்து பார்க்கலாம். அவர்க்கு உங்கள் காதல் விவகாரம்

தெரியுமா...?"

"தெரியாது...! நேரம் வரும்போது அண்ணனிடம் சொல்லிக் கொள்ளலாம் என்று ஜாகீர் என்னிடம் சொல்லியிருந்தார்...!"

எடிசன் தன் செல்போனில் ரசாக்கின் எண்களை அழுத்திவிட்டு காதில் வைத்தார்.

மறுமுனையில் ரிங் போயிற்று.

ரிஸீவர் எடுக்கப்பட்டது. எடிசன் குரல் கொடுத்தார். "மிஸ்டர் ரசாக்?"

மறுமுனையில் ஒரு ஆண் குரல் கேட்டது.

"நீங்கள் யார்?"

"அயாம் எடிசன்...! ஸ்பீக்கிங் ஃப்ரம் சான்பிரான்சிஸ்கோ போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸ்...! நீங்கள் மிஸ்டர் ரசாக்தானே?"

"இல்லை...!"

"பின்னே?"

"சி.பி.ஐ.! சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்...!"

8

அமெரிக்காவில் உள்ள டாக்ஸி டிரைவர்களில் 99% பேர் நாணயத்தோடு நடந்து கொள்பவர்கள். அவர்கள் பயணிகளை ஏமாற்றுவது இல்லை. நம் ஊரில் டாக்ஸியில் ஏறிக்கொண்டு இந்த நகரில் உள்ள ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு செல்ல வேண்டும் என்று சொன்னால் பெரும்பாலான டாக்ஸி டிரைவர்கள் வேண்டுமென்றே பல இடங்களைச் சுற்றி விட்டு கடைசியாக நாம் குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் நம் கையில் உள்ள பணத்தைக் கறந்து விடுவார்கள். ஆனால் அமெரிக்காவில் நாம் ஒரு இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால் டாக்ஸி டிரைவர்கள் தங்களிடம் உள்ள ரோடு மேப்பைக் காட்டி இந்த வழியில் சென்றால் பயணக் கட்டணம் குறைவு என்று சொல்லி அறிவுறுத்தியபின் பயணத்தை தொடர்கிறார்கள்.

மார்ட்டீன் ஸாம்ஸ் அடைபட்டிருந்த லாக்கப் அறைக்குள் ஷெர்லியும் பால் ஹாரீஸும் நுழைந்தார்கள். சோகையான சி.எஃப்.எல். பல்பு வெளிச்சத்தில் உள்ளாடைகள் மட்டுமே அணிந்து ஒரு ஸ்டூலின் மேல் சிரமமாய் உட்கார வைக்கப்பட்டிருந்தான் மார்ட்டீன் ஸாம்ஸ். போதை முற்றிலுமாய் தெளிந்து விட்டதால் முகம் முழுவதும் பயம் தெரிந்தது.

மனைவி ஷெர்லியைப் பார்த்ததும் அந்த பயம் இன்னமும் அதிகரித்தது. ஷெர்லி கோபமும் கண்ணீருமாய் கணவனுக்கு முன்பாய் போய் நின்றாள். கைகளை உதறிக் கொண்டு ஆத்திரத்தோடு கத்தினாள்.

"ஸாம்ஸ்! இதெல்லாம் என்ன...? நீங்கள் குடித்துவிட்டு கார் ஓட்டியதாகவும், காரின் டிக்கியில் ஒரு டெட்பாடி இருந்ததாகவும் இந்த போலீஸ் அதிகாரி சொல்கிறார். நீங்கள் குடித்து இதுவரை நான் பார்த்தது இல்லை. யார்க்கும் எந்தத் தீங்கும் நினைக்காதவர் நீங்கள்...! உண்மையில் என்ன நடந்தது என்று சொல்லுங்கள்...!"

மார்ட்டீன் ஸாம்ஸ், மனைவி ஷெர்லியை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டான்.

"இப்படி தலையைக் குனிந்து கொண்டால் என்ன அர்த்தம்? நீங்கள் எப்படிப்பட்ட சிக்கலில் மாட்டிக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதையாவது உணர்ந்து இருக்கிறீர்களா?"

"ஷெ... ஷெ... ர்... லி..."

"சொல்லுங்கள்...! என்ன நடந்தது...? யாரை... எதற்காகக் கொலை செய்தீர்கள்...?"

"நா... நான் யாரையும் கொலை செய்யவில்லை ஷெர்லி..."

"பின் எப்படி அந்த இறந்த உடல் உங்கள் காரின் டிக்கிக்குள் வந்தது...?"

"எனக்குத் தெரியாது..."

"உங்களுக்குத் தெரியாமல் எப்படி நடக்கும்...? இப்படி நீங்கள் சொல்வதை போலீஸார் மட்டும் இல்லை - நானும் கூட நம்ப மாட்டேன். நீங்கள் மது

குடித்தது உண்மைதானே?''

''உண்மைதான்...!''

''எத்தனை நாளாய் இந்தப் பழக்கம்...?''

''இன்று மட்டும்தான் குடித்தேன்...''

''எதற்காக...?''

''அது... வந்து... வந்து...''

''சொல்லுங்கள்...! எதையும் மறைக்காமல் சொல்லுங்கள். இல்லாவிட்டால் இந்த லாக்கப் அறையிலிருந்து நீங்கள் வெளியே வர முடியாது...?''

மார்ட்டின் ஸாம்ஸ் சில விநாடிகள் மௌனமாய் தலை குனிந்து இருந்துவிட்டு பிறகு கண்ணீரோடு நிமிர்ந்து ஷெர்லியை ஏறிட்டான்.

''ஷெர்லி! நீ என்னை மன்னிக்க வேண்டும். சில நாட்களாகவே எனக்கும் என் அலுவலகத்தில் பணி புரியும் மெர்லி என்ற பெண்ணுக்கும் பழக்கம். வாரத்தில் ஒரு இரவு அவளுடைய வீட்டில் தங்குவேன். இன்றைக்கு அவளுடைய பர்த்டே. அவள் எனக்கு ஒரு பார்ட்டி கொடுத்தாள். மெர்ரிக்கு குடிப்பழக்கம் உண்டு. இன்றைய பார்ட்டியில் நான் மது குடிக்க வேண்டும் என்று விருப்பப்பட்டாள். அவளுடைய விருப்பத்தை நிறைவேற்ற முதலில் கொஞ்சம் மது குடித்தேன். பிறகு நேரம் செல்லச் செல்ல அதிகமாகி போதை தலைக்கேறிவிட்டது. மெர்ரி எனக்கு ஒரு மாத்திரை கொடுத்தாள். அந்த மாத்திரை சாப்பிட்டால் போதை குறைந்து நிதான நிலைக்கு வந்து விடலாம் என்று சொன்னாள். நானும் அந்த மாத்திரை சாப்பிட்டேன். போதை குறைந்து நார்மலான நிலைமைக்கு வந்ததுபோல் உணர்ந்ததால் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். வழியில் குடிபோதை சோதனை செய்து கொண்டிருந்த போலீஸ் அதிகாரியிடம் மாட்டிக் கொண்டேன். நான் குடித்தது உண்மை. ஆனால் நான் யாரையும் கொலை செய்யவில்லை.''

ஷெர்லி தன் கணவனின் தோள் பட்டையை கோபத்தோடு இறுக்கிப் பிடித்தாள்.

''ஸாம்ஸ்...! நான் உங்களுக்கு என்ன குறை வைத்தேன்...? என்னைவிட அந்த மெர்ரி உங்களுக்கு எப்படி பிடித்துப் போயிற்று...''

''ஸாரி... ஷெர்லி...! நான் கொஞ்சம் நிலை தடுமாறிவிட்டேன்... என்னை மன்னித்து விடு.!''

ஷெர்லி ஏதோ கோபமாய் பேச முயல, பால் ஹாரீஸ் அவளைக் கையமர்த்தினார். ''இதோ பாருங்கள் மிஸஸ் ஷெர்லி...! நீங்கள் உங்கள் கணவரோடு சண்டை போட இது நேரமும் இல்லை; இடமும் இல்லை. எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உண்மையான தகவல் இன்னமும் உங்களுடைய கணவரிடமிருந்து கிடைக்கவில்லை. இப்போது அவர் எங்கே மது குடித்தார் என்பது பெரிய விஷயமில்லை. காரின் டிக்கியில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த நபர் யார் என்பதுதான் முக்கியம்... உங்கள் கணவர் இப்போதுதான் வாயைத் திறந்து ஒவ்வொரு உண்மையாக சொல்ல ஆரம்பித்து இருக்கிறார். காரின் டிக்கியில் இறந்து கிடந்த நபர்க்கும் உங்கள் கணவர்க்கும் ஏதோ பகை இருக்கப் போய்த்தான் கொலையே நடந்து இருக்க வேண்டும்.''

ஷெர்லி கோபப் பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு பால் ஹாரீஸை ஏறிட்டாள்.

''ஸார்...! நீங்கள் உங்கள் கற்பனையை வளரவிட்டு ஏதேதோ பேசிக்கொண்டு போக வேண்டாம். என்னுடைய கணவர்க்கும் கொலை செய்யப்பட்ட நபர்க்கும் எந்த ஒரு சம்பந்தமும் இருக்க வாய்ப்பு இல்லை...''

''எப்படி அவ்வளவு உறுதியாய் சொல்கிறீர்கள்?''

ஷெர்லி மௌனமாய் நின்றாள்.

அரை நிமிட நேரம் பொறுமை காத்துவிட்டு பிறகு கோபத்தோடு பால் ஹாரீஸ் கேட்டார்.

''இப்படி பேசாமல் நின்றால் என்ன பொருள்? உங்கள் கணவர்க்கும் கொலை செய்யப்பட்ட நபர்க்கும் எந்த ஒரு சம்பந்தமும் இருக்க வாய்ப்பு இல்லை என்று எப்படி அவ்வளவு உறுதியாய் சொல்கிறீர்கள்...?''

ஷெர்லி மேலும் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

''கொலை செய்யப்பட்ட நபர் யார் என்று எனக்குத் தெரியும்''

9

நம் நாட்டில் சாலை விதிகள் பற்றி மக்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லை. அதே போல் போதுமான பயிற்சி இல்லாமல் வாகனம் ஓட்டுபவர்களும் அதிகம். காரணம் இங்கே உள்ள R.T.O எனப்படும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணம் கொடுத்தால் போதும் - உரிமம் உடனடியாய் கிடைத்து விடும். ஆனால் அமெரிக்காவில் பணத்தைக் கொடுத்து உரிமம் பெற்றுவிட முடியாது. இங்கே R.T.O இருப்பது போல் அமெரிக்காவில் D.M.V. இருக்கிறது. D.M.V. என்றால் DEPARTMENT OF MOTOR VEHICLES. அமெரிக்காவில் ஒருவர் டிரைவிங் லைசென்ஸ் எடுக்க வேண்டுமென்றால் மோட்டார் வாகனச் சட்டம் என்ற புத்தகம் ஒன்றை முழுமையாகப் படித்து ஒரு பரீட்சை எழுத வேண்டும். அந்த பரீட்சையில் தேறியவர்கள் 2 மாதகாலம் ட்ரைவிங் ஸ்கூலில் சேர்ந்து கார், ஓட்டப் பழக வேண்டும். கார் ஓட்டிய பிறகு சோதனை ஓட்டத்தில் 36 திறன்களை மதிப்பிடு கிறார்கள். அதில் 6 தவறுகள் இருக்கலாம். 30ஐ சரியாக செய்தால் மட்டுமே லைசென்ஸ் தரப்படும்.

எடிசன் திகைத்தார்.

''சி.பி.ஐ...?''

''எஸ்...''

''இது ரசாக் என்பவரின் செல்போன் நெம்பர்தானே?''

''ஆமாம்...''

''ரசாக்கோடு பேச வேண்டும்.''

''என்ன விஷயமாய்?''

''இங்கே சான்பிரான்ஸிஸ்கோவில் ரசாக்கின் சகோதரர் இறந்துவிட்டார். இந்தத் தகவலை அவர்க்குத் தெரியப்படுத்த வேண்டும்.''

''சகோதரர் பெயர் என்ன?''

''ஜாகீர்...''

''எப்படி இறந்தார்?''

''மர்டர்ட் பை ஸம்படி...!''

''ஜாகீர் போன்ற நபர்களுக்கு இப்படிப்பட்ட மரணம்தான் கிடைக்கும்''

''என்ன சொல்கிறீர்கள்?''

''உங்களிடம் உண்மையைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் இப்போது எங்களுக்கு போன் செய்து பேசியிருக்காவிட்டால் நாங்கள் உங்களுக்கு போன் செய்து பேசியிருப்போம்.''

''நீங்கள் பேசுவது புரியவில்லை!''

''இதோ! புரியும்படியாகவே சொல்லி விடுகின்றோம். நீங்கள் செல்போனில் பேச விரும்பிய நபர் ரசாக்தானே?''

''ஆமாம்''

''அந்த ரசாக் இப்போது சி.பி.ஐ. போலீஸாரால் கைது செய்யப்பட்டு தீவிரவாத தடுப்பு சட்ட விதியின் கீழ் டெல்லி திஹார் சிறையில் அடைபட்டு இருக்கிறான். இன்று மத்தியானம்தான் அவனைக் கைது செய்தோம்.''

''ரசாக் தீவிரவாதியா?''

'' **'தி லாஸ்ட் டிஸ்டாஸ்டர்'** என்ற பயங்கரமான தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவன். இவன் மட்டும் இல்லை. இப்போது நீங்கள் சொன்ன கொலை செய்யப்பட்ட ஜாகீரும் அந்த அமைப்பைச் சேர்ந்தவன்தான். உண்மையில் இவர்கள் சகோதரர்கள் கிடையாது. நண்பர்கள். சகோதரர்கள் போல் நடித்து உலகத்தின் வெவ்வேறு பிராந்தியங்களில் தீவிரவாதத்துக்கான விதைகளை விதைத்துக் கொண்டிருந்தார்கள். ரசாக் மாட்டியதும் அவனை உடனடியாய் ரெட் செல்லுக்குக் கொண்டு போய் அவனை விசாரணை செய்கிற விதத்தில் விசாரணை செய்து அத்தனை உண்மைகளையும் வெளியே கொண்டு வந்து விட்டோம். அவனுடைய செல்போனையும் நாங்கள் பறிமுதல் செய்து வைத்து இருந்ததால் அவனால் எந்த உண்மையையும்

மறைக்க முடியவில்லை.''

எடிசன் குறுக்கிட்டு கேட்டார்.

''அப்படியானால் ஜாகீர் கொலை செய்யப்பட்டதின் பின்னணியில் வேறு ஏதாவது ஒரு தீவிரவாத அமைப்பு இருக்குமோ...?''

''இருக்கலாம்... அதை விசாரித்து உண்மைகளை வெளியே கொண்டு வருவது உங்களுடைய பொறுப்பு.''

''நீங்கள் எங்களுக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?''

''என்ன?''

''ஜாகீர் சான்பிரான்சிஸ்கோவில் கொலை செய்யப்பட்ட விஷயத்தை ரசாக்கிடம் தெரியப்படுத்தி - அந்தக் கொலைக்கு யார் காரணமாய் இருக்க முடியும் என்று கேட்க முடியுமா?''

''கண்டிப்பாய் கேட்டு - பதில் சாதகமாய் இருந்தால் - செல்போனில் உங்களைத் தொடர்பு கொள்கிறோம்.''

''மிக்க நன்றி!''

எடிசன் செல்போனை அணைத்துவிட்டு பக்கத்தில் நின்றிருந்த ஊசியையும் செங்குட்டுவனையும் ஏறிட்டு டெல்லி சி.பி.ஐ. போலீஸார் சொன்ன விபரத்தைச் சொல்ல, இருவரும் ஆடிப் போனார்கள்.

''மைகுட்னஸ்...! நான் ஒரு வெடிகுண்டை மடியில் கட்டிக்கொண்டே அலைந்து இருக்கிறேன்...'' ஊசியின் கண்களில் திகில். செங்குட்டுவனின் முகமும் வியர்த்துப் போயிருந்தது.

''ஸார்...! இப்போதுதான் எனக்கு நினைவு வருகிறது. ஜாகீர்க்கு எப்போது செல்போன் அழைப்பு வந்தாலும் சரி; சரியாய் கேட்கவில்லை என்று சொல்லிவிட்டு மொட்டை மாடிக்குப் போய் விடுவான். ஒரு மணி நேரம் வரைக்கும் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் வருவான்.''

''அவன் பேசியதை எப்போதாவது கேட்டு இருக்கிறீர்களா?''

''பலதடவை கேட்டு இருக்கிறேன். ஆனால் அவன் பேசுவது எனக்குப் புரியாது. காரணம் அவன்

பேசுவது உருது மொழியில்.''

எடிசன் ஏதோ பேச முயன்ற விநாடி - அவர் செல்போன் அழைத்தது. எடுத்து குரல் கொடுத்தார்.

''எஸ்!''

மறுமுனையில் டாக்டர் பிராங்க்ளின் பேசினார்.

''மிஸ்டர் எடிசன்...! ஜாகீரின் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்து அறிக்கையும் தயார் செய்துவிட்டோம். என்னுடைய அறைக்கு ஒரு சில நிமிடங்கள் வந்து போக முடியுமா...?''

''எனிதிங்க் இம்பார்ட்டண்ட் டாக்டர்?''

''எஸ்...! ஜாஹீரின் பல் வரிசையில் இரண்டு கடைவாய்ப்பற்கள் பொய்யானவை. அவைகளை அகற்றி வெளியே எடுத்துப் பார்த்தபோது அந்தப் பற்களின் உட்பகுதியில் இரண்டு 'மைக்ரோசிப்'கள் இருந்தன. நீங்கள் உடனே வந்து அதைப் பெற்றுக் கொள்ள முடியுமா?''

''இதோ...!'' செல்போனைக் கூட அணைக்காமல் பதட்டத்தோடு புறப்பட்டார் எடிசன்.

10

நம் நாடு போல் அமெரிக்காவில் அதிக விபத்துகள் நடப்பது இல்லை. தப்பித் தவறி விபத்து நடந்து விட்டால் அடுத்த நிமிடமே ஆம்புலன்ஸ் வந்து விடுகிறது. அதைத் தொடர்ந்து 'காப்ஸ்' என்று சொல்லப்படும் காவலர்கள் வந்து விடுகிறார்கள். விபத்து நடந்த இடத்துக்கு வரும் காவலர்கள் அங்கு இருப்பவர்களைப் பார்த்துக் கேட்கும் முதல் கேள்வியே 'நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா...? பயப்படாதீர்கள்... உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?' என்பதுதான். குழந்தைகளைக் கார்களில் ஏற்றிச் செல்வதானால் அவர்களுக்குத் தனியாக சீட் இருக்க வேண்டும். பிறந்து ஓர் ஆண்டு வரையிலான குழந்தைகளை வாகனம் செல்லும் திசையைப் பார்த்து உட்கார வைக்கக்கூடாது. காரின் பின்பக்கம் பார்த்த

படியாகக் குழந்தைகள் இருக்க வேண்டும். நம் ஊரைப் போல குழந்தைகளை மடியில் வைத்துக் கொண்டோ பக்கத்தில் அமர வைத்துக் கொண்டோ காரில் பயணம் செய்யக் கூடாது. இது போன்ற சட்டங்கள் இருப்பதால்தான் அமெரிக்காவில் விபத்துகள் குறைவு. ஆனால் நம் நாட்டிலோ போக்கு வரத்து விதிகளை யாரும் மதிப்பது இல்லை. வாகனம் ஓட்டுபவர்களுக்கு உயிரைப் பற்றியும் பயம் இல்லை. சட்டத்தைப் பற்றியும் பயமில்லை. போலீஸைக் கண்டும் பயமில்லை.

''கொலை செய்யப்பட்ட நபர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?''

ஷெர்லியைப் பார்த்து பால்ஸ் ஹாரீஸ் வியப்போடு கேட்க, அவள் தலையசைத்தாள்.

''தெரியும்.''

''உங்கள் வீட்டில் அந்த கொலை செய்யப்பட்ட நபரின் போட்டோவைக் காட்டிய போது 'தெரியாது' என்று சொன்னீர்களே?''

''தெரியும் என்று சொன்னால் உங்களால் எனக்கும் என்னுடைய கணவர்க்கும் நிறைய பிரச்னைகள் ஏற்படலாம் என்று நினைத்து அப்படியொரு பொய்யைச் சொன்னேன். அந்தப் பொய் இப்போது தேவையில்லை என்று நினைக்கிறேன்.''

''சரி...! கொலை செய்யப்பட்ட அந்த நபர் யார்...?''

''அவர் பெயர் ரிச்சர்ட். சான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள 'மேரியன்ஸ் ரெஸ்ட்' என்ற இடத்தில் இவர்க்கு ஒரு பெரிய தொழிற்சாலை இருக்கிறது. சிறந்த தொழிலதிபர். நான் ஒரு டி.வி.யில் 'காம்பியரிங்' செய்து கொண்டிருப்பதால் இவரை ஒரு தடவை பேட்டி எடுக்கச் சென்றேன். அவரோடு எனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பே கசப்பாக அமைந்து விட்டது!''

''எப்படி...?''

''நான் அவரைச் சந்தித்து 'உங்களைப் பேட்டி எடுக்க வேண்டும்' என்று சொன்னபோது அவர் என்ன சொன்னார் தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''டி.வி. ஒரு இடியட் பாக்ஸ். டி.வி. சானல்களை நடத்துபவர்கள் இடியட்ஸ். நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள் இடியட்ஸ். என்னைப் பேட்டி எடுக்க வந்து இருக்கிற நீ ஒரு இடியட். உன்னை மாதிரியான ஒரு இடியட்டுக்குப் பேட்டி கொடுத்தால் நானும் ஒரு இடியட். ஸோ...! கெட் அவுட்.''

பால் ஹாரீஸ் புன்னகைத்தார்.

''டி.வி. மேல் அவர்க்கு அப்படியென்ன கோபம்?''

''அதுதான் எனக்குப் புரியவில்லை. மேற்கொண்டு ஏதாவது பேசினால் அவர் என்னை அடித்தே விடுவார் போலிருந்தது. அதனால் உடனடியாக நான் அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வந்து விட்டேன்...''

''ரிச்சர்ட் வீட்டில் வேறு யாரெல்லாம் இருந்தார்கள்?''

''நான் அவர் வீட்டுக்குப் போன போது அவருடைய பி.ஏ. மட்டும்தான் இருந்தாள்.''

''ரிச்சர்ட்டின் ஃபேமிலி?''

''அதைப்பற்றி எனக்குத் தெரியாது.''

''ஓ.கே. மிஸஸ் ஷெர்லி...! நீங்களும் நானும் இப்போது ரிச்சர்ட் வீட்டுக்குப் போகப் போகிறோம். அங்கே வருவதில் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?''

''நோ... நோ... எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது... என்னுடைய கணவர் இந்தப் பிரச்னையிலிருந்து விடுதலையாக வேண்டும். அதுதான் என் விருப்பம். ஆனால் இந்த இரவில் அங்கே போக வேண்டாம். நாளைக்குக் காலையில் போவோம்.''

11

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் உலகத்தின் மற்ற நாடுகள் என்னென்ன வழக்கங்களைக் கையாள்கிறதோ அதற்கு நேர்மாறான வழக்கங்களைக் கொண்டுள்ளது.

உலகெங்கிலும் வாகனங்களில் ஸ்டீரியங் வலது பக்கம் உள்ளது. நம் நாட்டிலும், சரி; உலகின் மற்ற நாடுகளிலும் சரி; சாலைகளில் இடது பக்கமாக செல்வதுதான் வழக்கம். ஆனால் அமெரிக்கர்கள் சாலையின் வலதுபக்கமே செல்கின்றனர். பூட்டுகளை பூட்டும் போது நாம் மேல் நோக்கி பூட்டுகிறோம். திறக்கும் போது கீழ் நோக்கித் திறக்கின்றோம். ஆனால் அமெரிக்கர்கள் பூட்டும்போது கீழ் நோக்கியும், திறக்கும் போது மேல் நோக்கியும் திறக்கிறார்கள். அதே போல் மின் விளக்கு ஸ்விட்சுகளிலும் தலைகீழ் மாற்றம். மேலே அழுத்தினால் மின் விளக்கு எரியும். கீழே அழுத்தினால் அணையும்.

டாக்டர் பிராங்க்ளின் ஒரு சிறிய பாலிதீன் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்து இருந்த அந்த இரண்டு மைக்ரோசிப்புகளையும் எடுத்துக்காட்டினார். அவைகளை வாங்கி தன் வலது கையின் உள்ளங்கை பரப்பில் வைத்துக் கொண்ட எடிசன், அதை வியப்பு பார்வை பார்த்தபடி கேட்டார்.

''டாக்டர்...! ஜாகீரின் கடைவாய்ப் பற்களுக்கு நடுவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மைக்ரோ சிப்களைத் தவிர வேறு ஏதாவது உங்களுக்கு வித்தியாசமாய் தெரிந்ததா?''

''அவனுடைய தொடைபாகங்களில் எப்போதோ ஆப்ரேஷன் செய்யப்பட்ட தழும்புகள் தெரிந்தன. அந்த ஆப்ரேஷன் எதற்காக செய்யப்பட்டது என்று தெரியவில்லை. ஏதேனும் ஒரு பொருளை மறைத்து எடுத்து வருவதற்காகக்கூட செய்யப்பட்டு இருக்கலாம். இப்போது நமக்குக் கிடைத்து இருக்கும் இந்த இரண்டு மைக்ரோசிப்புகளையும் உங்களுடைய டெக்னிக்கல் டிபார்ட்மெண்ட்டில் கொடுத்து அதில் உள்ள செய்திகளைத் தோண்டி எடுங்கள். அதில் ஜாகீர் கொலை செய்யப்பட்டதற்கான காரணம் கூட பதிவு செய்யப்பட்டு இருக்கலாம்.''

''என்னுடைய அடுத்தகட்ட நடவடிக்கையும்

அதுதான். கொலை செய்யப்பட்ட ஜாகீர் ஒரு தீவிரவாதி என்று தெரிந்ததும் சான்பிரான்சிஸ்கோவின் ஒட்டு மொத்த போலீஸும் அலர்ட்டாகி விட்டது. ஜாகீரின் கொலையில் இன்னொரு விஷயமும் இருக்கிறது டாக்டர்.''

''என்ன?''

''கடந்த சில மாதங்களாக சான்பிரான்ஸிஸ்கோவில் இந்தியர்கள் மட்டுமே கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். ஜாகீர் மூன்றாவது நபர். இது தற்செயலாக நடைபெறும் கொலைகளா... இல்லை யாராவது திட்டம் போட்டு செய்கிறார்களா என்பது தெரியவில்லை...''

டாக்டர் பிராங்க்ளின் தன் நெற்றியைச் சுருக்கினார். ''இதற்கு முன்பு கொலை செய்யப்பட்ட அந்த இரண்டு இந்தியர்கள் யார்?''

''ஒருவர் சான்பிரான்ஸிஸ்கோ மிட்டவுனைச் சேர்ந்த இந்தியர். பெயர் விஷ்வா. டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் ஒன்றை நடத்திக் கொண்டு வந்தவர். ஒரு பட்டப் பகல் நேரத்தில் டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோரில் இருக்கும் அவருடைய அறையில் வைத்தே சுட்டுக் கொலை செய்யப்பட்டார். விஷ்வாவுக்கு குடும்பம் இல்லை. அவர் மட்டுமே ஒரு ஃப்ளாட்டில் குடியிருந்து வந்தார். அக்கம் பக்கம் விசாரித்ததில் விஷ்வா மிகவும் நல்ல மனிதர் என்று தெரிய வந்தது. யார் பிரச்னையிலும் தலையிடாதவர். யாரோடும் அதிகம் பேசாதவர். அவர்க்கு எதிரிகள் இருக்க வாய்ப்பே இல்லையென்று - ஒரு முழுமையான விசாரணை நடத்தி முடிக்கப்பட்ட போது தெரிய வந்தது. விஷ்வா கொலை செய்யப்பட்ட அடுத்த சில நாட்களிலேயே வட சான்பிரான்ஸிஸ்கோ ப்ரவுன் ஸ்டார் மவுண்ட்டனில் குடியிருக்கும் ஒரு இந்தியர் கொலை செய்யப்பட்டார். அவர் பெயர் அருண்டேல். அந்தப் பகுதியில் இருக்கும் ஹோட்டல் ஒன்றில் மேனேஜராய் பணி புரிந்து வந்தார். இவர்க்கு குடும்பம் இருக்கிறது. மனைவி மற்றும் ஒரு மகன். மனைவி ஒரு நர்ஸரி பள்ளியில் ஆசிரியை. மகன் ஒரு கம்ப்யூட்டர் கம்பெனியில் ப்ராஜக்ட் ஹெட். அருண்டேல் நல்ல மனிதர் என்பது தீவிர விசாரணையில் தெரிய வந்தது. பிறரால் கொலை

செய்யப்படக்கூடிய அளவுக்கு அவர்க்கு எதிரிகள் இருக்க முடியாது என்பது அவருடைய மனைவி மற்றும் மகனின் வாதம். விஷ்வா, அருண்டேல் என்ற இரண்டு இந்தியர்கள் கொலை செய்யப்பட்ட பின் ஜாகீர் இப்போது மூன்றாவது நபர். இந்த மூன்று பேர்களுக்கும் நடுவில் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று புலனாய்வுத்துறை அலசிப் பார்த்துவிட்டது. மூன்று பேரும் மூன்று திசைகள். ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டது கூட கிடையாது.''

டாக்டர் பிராங்க்ளின் இறுகிப்போன முகத்தோடு எடிசனை ஏறிட்டார்.

''ஜாகீரின் மரணத்தோடு இந்த தொடர் கொலைகளுக்கு போலீஸ் துறை ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்த மைக்ரோசிப்களை டெக்னிக்கல் பிரிவுக்கு அனுப்பி இதில் என்னென்ன தகவல்கள் இருக்கிறது என்று பாருங்கள். அந்தத் தகவல்களை வைத்துக் கொண்டு நீங்கள் கொலையாளியை நெருங்க முடியுமென்று நான் நினைக்கிறேன்...''

''ஷ்யூர் டாக்டர்...! நான் இப்போது ஃபாரன்ஸிக்கின் டெக்னிக்கல் பிரிவுக்குத்தான் போய்க் கொண்டு இருக்கிறேன்.''

எடிசன் சொல்லிக் கொண்டே எழுந்த விநாடி அவருடைய செல்போன் சிணுங்கி சிணுங்கி கூப்பிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார். சக போலீஸ் அதிகாரி ஐசக்.

''சொல்லுங்கள் மிஸ்டர் ஐசக்...''

''ஸார்...!'' என்று பதட்டமாய் அழைத்த ஐசக் அதே பதட்டத்தோடு தொடர்ந்து பேசினார். ''ஜாகீரின் நண்பர் செங்குட்டுவன் கடத்தப்பட்டு விட்டதாய் வெளியே பப்ளிக் பூத்திலிருந்து யாரோ ஒரு நபர் பேசினார்.''

எடிசன் அதிர்ந்தார். ''என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர் ஐசக்...? நான் டாக்டர் பிராங்க்ளினை பார்க்கப் புறப்பட்டு நம் அலுவலகத்தில் இருந்து கிளம்பும் போது செங்குட்டுவனும் லூசியும் அங்கேதானே இருந்தார்கள்?''

''ஆமாம் ஸார். இருந்தார்கள். நானும் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். போஸ்மார்ட்டம்

செய்யப்பட்ட ஜாகீரின் உடலை இந்தியாவுக்கு அனுப்பினாலும் அதைப் பெற்றுக் கொள்ள யாருமில்லை. எனவே உங்கள் இரண்டு பேரில் யாராவது பெற்றுக் கொண்டு 'க்ரிமேஷன்' செய்து விடுங்கள்' என்று சொன்னேன். ஆனால் ஜாகீர் ஒரு தீவிரவாதி என்பதால் இரண்டு பேருமே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு நானும் அவர்களை வற்புறுத்த வில்லை. சிறிது நேரம் கழித்து இருவருமே அவரவர் இருப்பிடங்களுக்கு போவதாக சொல்லிவிட்டு கிளம்பிவிட்டனர். நான் ஜாகீரின் உடலை கிரிமேஷன் செய்யும் சம்பிரதாயம் சம்பந்தப்பட்ட பேப்பர் வேலைகளில் ஈடுபட்டு இருந்தேன். அப்போதுதான் பப்ளிக் பூத்திலிருந்து யாரோ ஒரு நபர் போன் செய்து செங்குட்டுவன் கடத்தப் பட்டதாகவும் விரைவில் அவருடைய உயிரற்ற உடல் உங்களுக்குக் கிடைக்கும் என்றும் பேசிவிட்டு வைத்துவிட்டான்.''

''செங்குட்டுவனுக்கு செல்போன் செய்து பார்த்தீர்களா?''

''ம்... உடனே செங்குட்டுவனின் செல்போனை தொடர்பு கொண்டேன். அந்த செல்போனிலிருந்து எந்த ரெஸ்பான்ஸூம் இல்லை.''

''லூசிக்கு எந்த ஆபத்தும் இல்லையே!''

''லூசிக்கும் போன் செய்து பார்த்தேன். அவள் பத்திரமாய் தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்து விட்டாள்.''

''மிஸ்டர் ஐசக்! நீங்கள் உடனடியாய் இந்த விஷயத்தில் செயல்பட வேண்டும். ஒரு கமாண்டோ படையை அழைத்துக் கொண்டு நகர் முழுவதும் பெட்ரோலிங் செய்யுங்கள். செங்குட்டு வன் நமக்கு உயிரோடு வேண்டும். நான்காவதாய் ஒரு இந்தியர் இந்த சான்பிரான்ஸிஸ்கோவில் கொல்லப்பட்டு விடக்கூடாது. நீங்கள் பணியை ஆரம்பியுங்கள். நான் ஃபாரன்ஸிக் பிரிவு டெக்னிக்கல் செக்ஷனுக்குப் போய் ஒரு வேலையை முடித்துக் கொண்டு வந்தபின் உங்களோடு இணைந்து கொள்கிறேன்.''

''எஸ்... ஸார்'' மறுமுனையில் செல்போன் அணைந்தது.

12

அமெரிக்காவில் அபார்ட்மெண்ட்டுகளில் வசிப்பவர்கள்தான் அதிகம். அபார்ட்மெண்ட் என்பது ஆறு முதல் 100 வீடுகள் கொண்ட குடியிருப்புகளின் தொகுப்பு. ஒரு படுக்கை அறை கொண்ட வீட்டுக்கு மாத வாடகை 1000 டாலர். இரண்டு படுக்கையறை இருந்தால் 1200 டாலர். மூன்று படுக்கை அறை இருந்தால் 1300 டாலர். (ஒரு டாலரின் மதிப்பு இந்திய ரூபாயில் ரூ 50.) தம்பதியர்களுக்கு குழந்தைகள் இல்லை என்றால் மட்டுமே ஒரு படுக்கையறை கொண்ட வீடு கிடைக்கும். ஒரு குழந்தை இருந்து விட்டால் அந்தக் குழந்தைக்காக தனிப்படுக்கையறை உள்ள வீட்டைத்தான் வாடகைக்கு எடுக்க வேண்டும். குழந்தைகள் இரவில் தனியாய்த்தான் படுத்துக் கொள்ள வேண்டும் என்பது அமெரிக்காவில் எழுதப்படாத ஒரு சட்டமாகும்.

பால் ஹாரீஸும் ஷெர்லியும் சான்பிரான்ஸிஸ்கோவின் ஏற்றத்தாழ்வான சாலைகளில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் பயணம் செய்தபின் - அந்த அழகான மேரியன்ஸ் ரெஸ்ட் என்ற இடம் அவர்களுடைய பார்வைக்குக் கிடைத்தது. நேரம் காலை பதினோரு மணி.

அது ஒரு சுற்றுலாத்தலம் என்பதால் சாலையோரங்களில் கார்கள் பார்க் செய்யப்பட்டு டூரிஸ்ட் கும்பல் இரைச்சலோடு தெரிந்தது. கடை வீதிகளில் ஆங்கிலத்திலும், சீன மொழியிலும் பெயர்ப்பலகை எழுதி வைத்து இருந்தார்கள்.

பால் ஹாரீஸ் அந்த இடத்தை வியப்பாய்ப் பார்த்துவிட்டு சொன்னார். ''நான் இந்தப் பகுதிக்கு வந்து நிறைய நாட்களாகிவிட்டபடியால் ஏதோ ஒரு புதிய இடத்துக்கு வந்து விட்டதைப் போன்ற

உணர்வு ஏற்படுகிறது. இது அமெரிக்காவா... இல்லை சீனாவா?''

ஷெர்லி சின்னதாய் புன்னகைத்தாள்.

''உங்களுக்கு ஒரு புள்ளி விபரம் சொல்லட்டுமா? சான்பிரான்ஸிஸ்கோ நகரில் தற்போது 7.5 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். அதில் மூன்றில் ஒருவர் சீனர். இந்த அளவுக்கு சீனர்கள் சான்பிரான்ஸிஸ்கோவுக்கு வந்ததற்கு என்ன காரணம் தெரியுமா?''

''என்ன காரணம்...?''

''பல வருஷங்களுக்கு முன்பு சான்பிரான்ஸிஸ்கோவின் இந்தப் பகுதியில் தங்கம் நிறைய இருப்பதாக புவியியல் வல்லுநர்கள் சொல்ல, அமெரிக்க அரசு தங்கச் சுரங்கம் தோண்ட முடிவு செய்தது. அமெரிக்காவில் சுரங்கம் தோண்ட கூலியாட்கள் கிடைக்காத காரணத்தால் சீனாவிலிருந்து வேலைக்கு ஆட்களை அழைத்து வந்தார்கள். வந்தவர்களுக்கு குடியுரிமை கொடுத்ததால் அவர்கள் இங்கேயே நிரந்தரமாய் தங்கிவிட்டார்கள். தங்களுடைய மக்கள் தொகையையும் பெருக்கிக் கொண்டு விட்டார்கள். இந்த இடத்துக்குப் பெயரே சைனா சிட்டிதான்...!''

''இப்போது நாம் போக வேண்டிய மேரியன்ஸ் ரெஸ்ட் என்ற இடம் இந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரம்?''

''அதோ...! அந்த மலைப்பாங்கான இடம்தான்.''

கார் கடைவீதியை முடித்துக் கொண்டு மேட்டுப் பகுதியை நோக்கிப் போயிற்று. அடுத்த சில நிமிடங்களில் இரண்டு மாடிகளோடு நின்றிருந்த ஒரு வீட்டைக் காட்டினாள் ஷெர்லி.

''அதுதான் ரிச்சர்ட் வீடு''

''நீங்கள் ரிச்சர்டைப் பார்க்கப் போகும் போது வீட்டில் அவருடைய பி.ஏ.வை மட்டும் பார்த்தீர்கள் இல்லையா? அந்த பி.ஏ.வின் பெயர் ஞாபகம் இருக்கிறதா?''

''வயலெட் என்று அவள் சொன்னதாய் நினைவு.''

கார் வீட்டின் காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் நின்று ஹார்ன் கொடுக்க, செக்யூர்டி எட்டிப் பார்த்தான். அது போலீஸ் கார் என்பதையும் உள்ளே உட்கார்ந்திருந்த பால் ஹாரீஸின் போலீஸ்

யூனிஃபார்மையும் பார்த்து லேசாய் மிரண்ட செக்யூர்ட்டி வேகவேகமாய்க் கதவைத் திறந்து விட்டான்.

கார் உள்ளே போயிற்று.

போர்டிகோவில் போய் நின்றது.

போர்டிகோவில் பதிக்கப்பட்டிருந்த க்ரானைட் பாப்பை வேக்குவம் க்ளீனர் வைத்து சுத்தப்படுத்திக் கொண்டிருந்த அந்த பணிப் பெண் வேலை செய்வதை நிறுத்திவிட்டு தள்ளி நின்றாள்.

பால் ஹாரீஸ் அவளைக் கையசைத்துக் கூப்பிட்டார்.

''வா... இங்கே...!''

மெல்ல தயங்கி பின் பயத்தோடு வந்தாள்.

''உன் பெயர் என்ன?''

''கேத்ரீனா...''

''இங்கே... நீ பணிப்பெண்ணா?''

''ஆமாம்...''

''உன்னுடைய முதலாளி ரிச்சர்ட் உள்ளே இருக்காரா?''

''அவர் வெளியூர் போயிருக்கார்.''

பால் ஹாரீஸ் போர்டிகோ படிகளில் ஏறிக்கொண்டே கேட்டார். ''வீட்டில், வேறு யார் இருக்கிறார்கள்?''

''முதலாளியின் காரியதரிசி வயலட்''

''பிறகு...?''

''வேறு யாரும் இல்லை...'' பணிப் பெண் கேத்ரீனா சொல்லிவிட்டு மறுபடியும் வேக்குவம் க்ளீனரைக் கையில் எடுத்துக் கொண்டாள். பால் ஹாரீஸும் ஷெர்லியும் உள்ளே போனார்கள்.

இரண்டாவது அறையில் ஒரு மேஜையில் இருந்த கம்ப்யூட்டர்க்கு முன்னால் பாப் தலையோடு உட்கார்ந்திருந்த அந்த அழகான இளம் பெண் அவர்களைப் பார்த்ததும் எழுந்து வந்தாள். பால் ஹாரீஸைப் பார்த்து ''எஸ்...!'' என்றாள்.

''மிஸ்டர் ரிச்சர்டைப் பார்க்க வேண்டும்.''

''அவரை எதற்காகப் பார்க்க வேண்டும்?''

''ஒரு வழக்கு சம்பந்தமாய் விசாரிக்க வேண்டும்.''

''என்ன வழக்கு?''

''அதைப்பற்றி அவரிடம்தான் பேச வேண்டும்.''

''அவர் நேற்று காலைதான் பிசினஸ் விஷயமாக சிங்கப்பூர் புறப்பட்டுப் போனார். நான் அவருடைய பி.ஏ. வயலெட்''

''அவர் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்ததும் போன் செய்தாரா?''

''இல்லை''

''ஏன்...?''

''மிஸ்டர் ரிச்சர்ட் தேவையில்லாமல் போன் செய்ய மாட்டார்.''

''நீங்கள் போன் செய்தீர்களா?''

''நான் இரண்டு முறை போன் செய்தேன். ரிங் போயிற்று. ஆனால் அவர் போனை எடுக்கவில்லை.''

''எப்படி எடுப்பார்...? அவர்தான் சான்பிரான்சிஸ் அரசு ஹாஸ்பிட்டலின் மார்ச்சுவரியில் பனிக்கட்டிகளுக்கு நடுவில் படுத்துக் கொண்டு இருக்கிறாரே...?''

வயலெட் தன் பெரிய நீலநிறக் கண்களில் அதிர்ச்சியைக் காட்டினாள். ''எ... எ... என்ன சொன்னீர்கள்? மார்ச்சுவரியில் இருக்கிறாரா?''

''ஆமாம்...! நேற்று இரவு அவர் கொலை செய்யப்பட்டு விட்டார். அவரைக் கொலை செய்தது யார் என்று தெரியவில்லை. அவருடைய உடலை ஷெர்லி என்கிற இந்த பெண்ணின் கணவர் மார்ட்டின் ஸாம்ஸின் கார் டிக்கிக்குள் போட்டு வைத்து இருந்தார்கள். இப்போதைய நிலவரப்படி ஷெர்லியின் கணவர் மார்ட்டின் ஸாம்ஸ்தான் ரிச்சர்ட்டை கொலை செய்த கொலையாளி. ஆனால் அவர், தான் ரிச்சர்ட்டை கொலை செய்யவில்லை என்று சொல்கிறார். அவர் சொல்வது உண்மையாக இருந்தால் உண்மையான குற்றவாளி யார் என்பதை நாங்கள் கண்டு பிடித்தாக வேண்டும்.''

வயலெட்டின் கண்களில் நீர் பளபளத்தது.

''ஸார்... நீங்கள் சொல்வது உண்மையா?''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் தள்ளி நின்றிருந்த ஷெர்லி வயலெட்டுக்குப் பக்கத்தில் வந்தாள்.

''என்னை உங்களுக்கு நினைவு இருக்கிறதா மிஸ் வயலெட்?''

வயலெட் அவளைப் பார்த்துவிட்டு மெல்ல

தலையசைத்தாள். மெல்லிய குரலில் சொன்னாள்.

''சில நாட்களுக்கு முன் மிஸ்டர் ரிச்சர்ட்டை ஒரு டி.வி. சேனலுக்காக பேட்டி எடுக்க வந்தீர்கள். அவர் பேட்டி கொடுக்க மறுத்துவிட்டதால் நீங்கள் வருத்தத்தோடு புறப்பட்டுச் சென்றீர்கள்.''

''ஆமாம்...! அன்றைக்கு அவரைப் பார்த்த காரணத்தினால்தான் ரிச்சர்ட்டின் உடலை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. யாரோ ரிச்சர்ட்டைக் கொலை செய்துவிட்டு அந்தக் கொலைப்பழி எங்கள் மீது விழ வேண்டும் என்பதற்காக உடலை என் கணவரின் கார் டிக்கிக்குள் திணித்து வைத்து இருக்கிறார்கள். குடிபோதையில் இருந்த என்னுடைய கணவரின் கர்ச்சீப்பை எடுத்து ரிச்சர்ட்டின் ரத்தத்தில் தோய்த்து வைத்திருக்கிறார்கள்.''

ஷெர்லி பேச்சை நிறுத்த, பால் ஹாரீஸ் சில விநாடிகள் மௌனித்து விட்டு வயலெட்டை ஏறிட்டார்.

''மிஸ் வயலெட்! ரிச்சர்ட்டின் குடும்பத்தைப் பற்றி நீங்கள்தான் சொல்ல வேண்டும். அவர் திருமணமானவர்தானே?''

''ஆமாம்...!''

''அவருடைய மனைவி எங்கே?''

வயலெட் மௌனம் சாதித்தாள். பால் ஹாரீஸ் குரலை உயர்த்தினார்.

''என்ன... பதிலையே காணோம்?''

''அது... அது... வந்து... அவருடைய மனைவி இங்கே இல்லை...''

''இங்கே... இல்லையென்றால்... வேறு எங்கே?''

''எங்கே என்று எனக்குத் தெரியாது. இரண்டு மாதங்களுக்கு முன்பு ரிச்சர்ட்டின் மனைவி இந்த வீட்டை விட்டு வெளியேறிப் போய்விட்டார்கள்.''

''வீட்டை விட்டு வெளியேறிப் போய் விட்டார்களா?''

''ஆமாம்''

''என்ன காரணம்?''

''மிஸ்டர் ரிச்சர்ட்டுக்கும் அவருடைய மனைவிக்கும் டெர்ம்ஸ் சரியில்லை. இரண்டு பேரும் ஒரே வீட்டுக்குள் இருந்தாலும் இருவரும் பேசிக் கொள்வது இல்லை. இரண்டு மாதங்களுக்கு

முன்பு ஒரு நாள் காலை ரிச்சர்ட்டின் மனைவி கிளம்பிப் போய்விட்டாள்.''

''ரிச்சர்ட் தடுக்கவில்லையா?''

''தடுக்கவில்லை. 'உனக்கு எது விருப்பமோ அதைச் செய்' என்று சொல்லிவிட்டு தன்னுடைய பணிகளை கவனிக்க ஆரம்பித்து விட்டார்.''

''ரிச்சர்ட் மனைவியின் பெயர் என்ன?''

''செபாடினா...''

''அவர்களுக்கு குழந்தைகள்?''

''இல்லை...''

''மிஸஸ் செபாடினா இப்போது எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?''

''தெரியாது''

''ரிச்சர்ட்டின் மரணச் செய்தியை செபாடினாவுக்குத் தெரிவிக்க வேண்டாமா?''

வயலெட்டின் கண்களில் இப்போது நீர் பளபளத்தது.

''ஸார்... ரிச்சர்ட்டின் மரணச் செய்தியைக் கேட்டதிலிருந்து நான் அதிர்ச்சியிலும் பயத்திலும் குழம்பிப் போயிருக்கிறேன். நான் ரிச்சர்ட்டுக்கு காரியதரிசி மட்டுமே. மற்றபடி அவருடைய குடும்ப விவகாரங்கள் பற்றி எனக்குத் தெரியாது...''

''சரி...! ரிச்சர்ட்டுக்கு இந்த நகரத்தில் உறவினர்களாவது உண்டா...?''

''இல்லை''

''நண்பர்கள்?''

''எனக்குத் தெரிந்த வரைக்கும் அவர்க்கு நண்பர்கள் இல்லை.''

''ஓ.கே. மிஸ் வயலெட்...! நீங்கள் ரிச்சர்ட்டுக்கு அந்தரங்க காரியதரிசி. அவருடைய பலங்கள் என்ன என்பதும் பலவீனங்கள் என்ன என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்து இருக்கும். ரிச்சர்ட் இப்போது கொலை செய்யப்பட்டு விட்டார். இதற்கு என்ன காரணம் இருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்...?''

''ஸாரி ஸார்...! நான் இங்கே வேலைக்கு சேர்ந்தே ஒருவருட காலம்தான் ஆகிறது. ரிச்சர்ட்டின் அன்றாட பணிகளை நினைவூட்டுவது மட்டுமே

என் வேலை. மற்றபடி அவரைப் பற்றிய முழு உண்மைகள் எனக்குத் தெரியாது. ஆனால் கடந்த சில நாட்களாக என் மனதில் ஒரு விஷயம் உறுத்திக் கொண்டு இருக்கிறது. அதை உங்களிடம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்."

"சொல்லுங்கள்..."

"பதினைந்து நாட்களுக்கு முன் ரிச்சர்ட் டாய்லட்டில் இருந்த போது அவருடைய அலுவலக மேஜையை சுத்தம் செய்து கொண்டு இருந்தேன். அப்போது அவர்க்கு வந்த கடிதம் ஒன்று நான்கு துண்டுகளாய் கிழிக்கப்பட்டு வேஸ்ட் பின்னில் கிடந்தது. எதற்காக இந்தக் கடிதத்தைக் கிழித்துப் போட்டார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் அந்தத் துண்டுகளை எடுத்து இணைத்துப் பார்த்தேன். அந்தச் செயல் தப்புதான் என்றாலும் என் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதில் கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்ட சில வாசகங்கள் தெரிந்தது. படித்துப் பார்த்தேன்."

"அதில் என்ன வாசகங்கள் இருந்தது...?"

வயலெட் யோசித்துவிட்டு சொன்னாள்.

"நீங்கள் செய்யும் தவறு கூட புனிதம் ஆகும் அதை நீங்கள் ஒப்புக்கொள்ளும் போது...!

இப்படிக்கு

கலிபோர்னியா காதலி."

பால் ஹாரீஸ் விழிகளை உயர்த்தினார்.

"என்ன சொன்னீர்கள்... **கலிபோர்னியா காதலியா?"**

"ஆமாம்..."

"யார் அந்த **கலிபோர்னியா காதலி?"**

"எனக்குத் தெரியாது."

"ரிச்சர்ட்டிடம் அந்தக் கடிதத்தைக் காட்டி நீங்கள் எதுவும் கேட்கவில்லையா...?"

"நான் எப்படி கேட்க முடியும்...? அவர் ஏதாவது தப்பாக நினைத்துக் கொண்டால்...?"

பால் ஹாரீஸ் ஒரு பெருமூச்சோடு தன் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

"யார் இந்த **கலிபோர்னியா காதலி...?"**

13

அமெரிக்காவில் பெரும்பாலும் பிள்ளைகள் அனைவரும் 18 வயது நிரம்பியதுமே தம் பெற்றோரை விட்டுத் தனியே சென்று விடுகின்றனர். கூட்டுக் குடும்பம் என்பதோ, பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் பெண் பார்த்து திருமணம் செய்து வைப்பது என்பதோ அங்கு அபூர்வம். தமது 40 வயதுகளிலேயே பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளுக்கு அந்நியப்பட்டவர்களாக வாழ்கின்றனர். 60 - வயதுக்குப் பிறகு பெரும்பாலான முதியவர்கள் தனிமையிலேயே காலம் கழிக்கின்றனர். முதியோர் நலனைப் பாதுகாப்பதற்காக என்று அங்கு தனிச்சட்டமே உள்ளது. அதற்குப் பெயர் ஓ.எ.எ. (அதாவது ஓல்டர் அமெரிக்கா ஆக்ட்) தனிமையில் இருக்கும் முதியவர்களுக்கு என்னென்ன தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருகிறது.

சான்பிரான்ஸிஸ்கோவின் போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸ்.

போலீஸ் கமிஷனர் ஜான் ஃபோர்ட் தனக்கு முன்பாய் நின்றிருந்த எடிசனை ஏறிட்டு கோபமான குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

"மிஸ்டர் எடிசன்...! இங்கே என்ன நடந்து கொண்டு இருக்கிறது...? சான்பிரான்ஸிஸ்கோ மிட்டவுனைச் சேர்ந்த 'விஷ்வா' என்ற இந்தியரும், ப்ரவுன் ஸ்டார் மவுண்ட்டனில் குடியிருந்த அருண்டேல் என்ற இந்தியரும் கொலை செய்யப்பட்டு சில மாதங்கள் ஓடி விட்ட நிலைமையில் இப்போது ஜாகீர் என்ற இந்தியர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். ஜாகீர் ஒரு தீவிரவாதி என்பதில் அமெரிக்காவின் ஒட்டு மொத்த

மீடியாவும் சூடாகியிருக்கிறது. இந்த நிலைமையில் செங்குட்டுவன் என்கிற ஒரு இந்திய கம்ப்யூட்டர் என்ஜினியர் கடத்தப்பட்டு இருக்கிறார். அவருடைய உடல் எந்த நேரத்தில் - எப்படிப்பட்ட நிலையில் - எந்த இடத்தில் கிடைக்கும் என்ற நினைப்போடு ஒவ்வொரு விநாடியையும் கழிக்க வேண்டியிருக்கிறது. செங்குட்டுவனை நாம் உயிரோடு மீட்காவிட்டால் சான்பிரான்சிஸ்கோவில் உள்ள இந்தியர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகிவிடும்...''

''எனக்குப் புரிகிறது ஸார்...'' எடிசன் தயக்கமான குரலில் சொல்ல, கமிஷனர் ஜான் ஃபோர்ட் கோபத்தில் குரலை உயர்த்தினார்.

''உங்களுக்கு என்ன புரிகிறது மிஸ்டர் எடிசன்? இதுவரை நடைபெற்றதும் இனிமேல் நடைப் பெறப் போவதும் சாதாரண கொலைகள் இல்லை. எல்லாமே திட்டம் போட்டு செய்யப்பட்ட கொலைகள்... செய்யப்படப் போகிற கொலைகள். உங்களுடைய இன்வெஸ்டிகேஷனில் வேகம் இல்லை. கடைசியாய் கொலை செய்யப்பட்ட ஜாகீரின் உடலை போஸ்ட் மார்ட்டம் செய்த போது அவனுடைய கடைவாய்ப்பற்களிடையே வைக்கப்பட்டு இருந்த மைக்ரோ சிப்களில் எது மாதிரியான தகவல்கள் பொதிந்து இருந்தது என்பதைக் கண்டுபிடிக்க ஃபாரன்ஸிக் டெக்னிக்கல் செக்ஷனில் கொடுத்து இருந்தீர்கள் அல்லவா...?''

''ஆமாம்...''

''ஃபாரன்ஸிக் ரிப்போர்ட் கொடுத்தார்களா?''

''கொடுத்தார்கள் ஸார்.''

''அந்த மைக்ரோசிப்பில் இருந்த தகவல்கள் என்ன?''

''ஸார்...! அதில் இருந்தது எல்லாமே சங்கேத வார்த்தைகள். ஒரு வார்த்தைக்குக் கூட பொருள் புரியவில்லை. எனவே அந்த மைக்ரோசிப்களை நியூயார்க்கில் இருக்கும் அமெரிக்க புலனாய்வுத்துறைக்கு அனுப்பியிருக்கிறேன். இரண்டு மூன்று நாட்களுக்குள் அறிக்கை அனுப்பி வைப்பதாக சொன்னார்கள்.''

''இதோ பாருங்கள் மிஸ்டர் எடிசன்...! அந்த அறிக்கை வருகிற போது வரட்டும். அதற்காக காத்துக் கொண்டு இராமல் செங்குட்டுவனைக் காப்பாற்ற என்ன வழி வகைகள் இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள். இந்தியர்களைத் தேடிப் பிடித்துக் கொல்வதுதான் கொலையாளியின் நோக்கமாக இருந்து வருகிறது. அந்த லிஸ்டில் ஜாகீர் ஒருத்தன்... தட்ஸ் ஆல்...!'' மேற்கொண்டு கமிஷனர் பேசு முன்பு அவருடைய செல்போன் சிணுங்கியது. எடுத்து காதுக்கு ஒற்றினார்.

''எஸ்...''

மறுமுனையில் குரல் ஒலித்தது. ''குட்மார்னிங் ஸார்...! அயாம் பால் ஹாரீஸ் - சான்பிரான்ஸிஸ் போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் சார்ஜண்ட். போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸிலிருந்து சற்று முன்புதான் எனக்கு ஒரு ஃபேக்ஸ் செய்தி வந்தது. அந்த செய்தி குறித்து உங்களைத் தொடர்பு கொண்டு பேசச் சொன்னார்கள். அதனால்தான் போன் செய்தேன்.''

கமிஷனர் ஜான் ஃபோர்ட் மலர்ந்தார்.

''மிஸ்டர் பால் ஹாரீஸ்...! நீங்கள் என்னை உடனே தொடர்பு கொண்டதற்கு நன்றி. இப்போது நீங்கள் ஓய்வாய் இருக்கிறீர்களா...?''

''முக்கியமான பணி ஒன்றும் கிடையாது ஸார். நாம் வேண்டுமானால் சந்தித்து பேசலாம்.''

''அப்படியானால் நீங்கள் உடனே புறப்பட்டு போலீஸ் ஹெட்க்வார்ட்டர்ஸின் பிரதான கட்டிடத்தில் உள்ள என்னுடைய க்யூபுக்கு வாருங்கள்.''

''இதோ புறப்பட்டேன் ஸார்!''

''ப்ளீஸ்... ஒரு முப்பது நிமிஷ நேரத்திற்குள் வந்துவிடுவீர்களா?''

''ஷ்யூர் ஸார்...! ஐ வில் பி தேர் வித் இன் தர்ட்டி மினிட்ஸ்...!''

ஜான் ஃபோர்ட் செல்போனை அணைத்து விட்டு எடிசனை ஏறிட்டார்.

''மிஸ்டர் எடிசன்...! உங்களுக்கு பால் ஹாரீஸைத் தெரியும் அல்லவா...?''

''தெரியும் ஸார்... நானும் அவரும் மவுண்ட் மேரி சைண்ட் போலீஸ் கேம்பில் ஒன்றாக பயிற்சி எடுத்தோம். பயிற்சியின் போது அவர் நன்றாக

செயல்பட்டதால் அவர்க்கு சார்ஜண்ட் பதவி கிடைத்தது. ஹைலி டேலண்ட்டட் பாசன்."

"அவர் இங்கே இப்போது வருகிறார்."

"ஃபார் வாட் பர்ப்பஸ் ஸார்?"

"கடந்த ஒரு வருஷகாலமாய் அவர் ஒரு கேஸை புலனாய்வு செய்து கொண்டு வருகிறார். சரியாய் ஒரு வருஷத்துக்கு முன்பு மார்ட்டின் ஸாம்ஸ் என்ற ஒரு நபர் குடிபோதையில் கார் ஓட்டிக் கொண்டு போன போது வில்பார்ட் என்ற போக்குவரத்து போலீஸ் அதிகாரியிடம் பிடிபட்டார். வில்பார்ட் அந்தக் காரையும் மார்ட்டின் சாம்ஸையும் ஸ்டேஷனுக்கு கூட்டி வந்தார். ஸ்டேஷனில் இருந்த பால் ஹாரீஸ் மார்ட்டின் ஸாம்ஸை விசாரித்து சோதனை போட்ட போது அவரிடம் ரத்தக்கறை படிந்த கர்ச்சிப் இருந்தது. அதைத் தொடர்ந்து பால ஹாரீஸ் மாரட்டின் ஸாம்ஸின் காரை சோதனை போட - காரின் டிக்கியில், ஒரு ஆணின் இறந்த உடல் தோட்டாக்கள் துளைத்த காயங்களோடு அடைக்கப் பட்டு இருந்தது. பால் ஹாரீஸ் மேற்கொண்டு தீவிர விசாரணை செய்ததில் கொலை செய்யப்பட்ட அந்த நபரின் பெயர் ரிச்சர்ட் என்பதும், மேரியன்ஸ் ரெஸ்ட் என்ற இடத்தில் ஒரு பெரிய தொழில் அதிபராக இருந்தவர் என்றும் அவருடைய மனைவி செபாடினா இரண்டு மாதங்களுக்கு முன்பே வீட்டை விட்டுக் கிளம்பிப் போய்விட்டாள் என்பதும் தெரிய வந்தது. இந்த கேஸில் இதுநாள் வரைக்கும் பிடிபடாத ஒரு விஷயம் இப்போதுதான் போலீஸின் பார்வைக்குப் பிடிபட்டு இருக்கிறது."

"மே... ஐ... நோ... தட்... ஸார்?"

"ஷ்யூர்...! கொலை செய்யப்பட்ட ரிச்சர்ட் பிறப்பால் ஒரு இந்தியர் என்பதும், அவர் பல வருஷங்களுக்கு முன்பே சான்பிரான்சிஸ்கோவில் வந்து தங்கிவிட்டவர் என்பதும், செபாடினா என்ற அமெரிக்கப் பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர் என்பதும் இப்போது வெளிச்சத்திற்கு வந்த ஒரு புதுச் செய்தி."

எடிசன் குறுக்கிட்டார்.

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்"

"என்ன சொல்லுங்கள்?"

"அந்த ரிச்சர்ட் கொலை செய்யப்பட்ட

விஷயத்திற்கும் நாம் இப்போது புலனாய்வு செய்து கொண்டிருக்கிற விஷ்வா, அருண்டேல், ஜாகீர் கொலைகளுக்கும் என்ன சம்பந்தம் ஸார்?"

"சம்பந்தம் இருக்கிறது எடிசன்...! ரிச்சர்ட் ஒரு இந்தியர் என்பது முதல் காரணம். இரண்டாவது காரணம் ஒரு வருஷத்துக்கு முன்பு கொலை செய்யப்பட்ட ரிச்சர்ட்டுக்கும், சில மாதங்களுக்கு முன்பு கொலை செய்யப்பட்ட அருண்டேலுக்கும் இடையில் ஒரு நட்பு இருந்து வந்துள்ளது. அதற்கு ஆதாரம் இந்த போட்டோ"

கமிஷனர் ஜான் ஃபோர்ட் தன் பாக்கெட்டில் வைத்து இருந்த போட்டோ ஒன்றை எடுத்து நீட்டினார்.

எடிசன் வாங்கிப் பார்த்தார்.

ஒரு ஏரிக்கரையின் பின்னணியில் ரிச்சர்ட்டும் அருண்டேலும் கைகளைக் கோர்த்துக் கொண்டு புன்னகை முகங்களோடு தெரிந்தார்கள். எடிசன் போட்டோவைப் பார்த்து விட்டு நிமிர்ந்தார்.

"ஸார்...! இந்த போட்டோ எங்கே, எப்படி கிடைத்தது...?"

"அருண்டேல் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் ஷேடோ ஸ்க்வார்ட் ஒரு பக்கம் விசாரணை செய்து கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அருண்டேலின் நண்பர் ஒருவரை- விசாரித்தபோது அவர் இந்த போட்டோவைக் கொடுத்தார். இந்தப் போட்டோவைப் பார்த்ததில் இருந்து ஒரு விஷயம் தெளிவாக விளங்குகிறது. அந்த விஷயம் என்ன என்பது உங்களுக்குப் புரிகிறதா எடிசன்?"

"புரிகிறது ஸார்"

"என்னவென்று சொல்லுங்கள்...!"

"இந்தியர்களைக் குறி வைத்துக் கொலை செய்யும் இந்த கொடூர நிகழ்ச்சி ஒரு வருடத்துக்கு முன்பே அதாவது ரிச்சர்ட் வீட்டிலிருந்தே ஆரம்பமாகியிருக்கிறது. ஸார்"

"யூ... ஆர்... கரெக்ட்...! முதலில் ரிச்சர்ட், பிறகு விஷ்வா, அதற்குப் பிறகு அருண்டேல்... கடைசியாய் ஜாகீர், இந்த நிமிடம் கடத்தப்பட்ட செங்குட்டுவன் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. செங்குட்டுவனை

உயிரோடு மீட்காவிட்டால் அமெரிக்காவில் இருக்கும் இந்திய தூதரகம் கேட்கும் கேள்விகளுக்கு நம்மால் பதில் சொல்ல முடியாத நிலைமை ஏற்படும்.''

எடிசன் கவலை தோய்ந்த முகத்தோடு ஏதோ பேச முயன்ற விநாடி - போலீஸ் அதிகாரி ஐசக் உள்ளே நுழைந்து சல்யூட்டோடு நின்றார்.

''ஸார்...!''

''எஸ்'' என்றார் ஜான் ஃபோர்ட்.

''சான் பிரான்ஸிஸ் போலீஸ் சார்ஜண்ட் மிஸ்டர் பால் ஹாரீஸ் உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்.''

''உடனே உள்ளே வரச்சொல்லுங்கள்''

14

அனைத்துத் துறையிலும் நவீன மயத்தையும் செயற்கையையும் புகுத்திய அமெரிக்கா இப்போது உணவு விஷயத்தில் மட்டும் இயற்கையை நோக்கித் திரும்பியிருக்கிறது. இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி விளைவிக்கப் படுவதும், ரசாயன தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிக்கப்படாததுமான பழவகைகள், தானிய வகைகள், இறைச்சி கோழி, முட்டை மற்றும் பால் பதனப் பொருட்கள் இவைகளுக்கு அமெரிக்க வேளாண்துறை (ORGANIC) 'ஆர்கானிக்' என்ற முத்திரையைக் குத்தி விற்பனை செய்கிறது. இது நம்முடைய ஊர் 'அக்மார்க்' முத்திரையைப் போன்றது. விலையும் அதிகம். இருந்தாலும் அமெரிக்கர்கள் இந்த ஆர்கானிக் உணவுப் பொருள்களையே விரும்பி வாங்குகிறார்கள்.

பால் ஹாரீஸைப் பார்த்ததும் ஜான் ஃபோர்ட் எழுந்து நின்று கை குலுக்கினார். அதைத் தொடர்ந்து எடிசனும் கை குலுக்கி புன்னகைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

''ப்ளீஸ் ஸீட்ட்ட்...!'' உட்கார்ந்தார்கள்.

சில விநாடிகளுக்குப்பின் ஜான் ஃபோர்ட் மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

''மிஸ்டர் பால் ஹாரீஸ்...! இங்கே உங்களை நான் வரவழைத்ததற்கான காரணம் உங்களுக்கு புரிந்து இருக்கலாம் என்று நினைக்கிறேன். நம் சான்பிரான்ஸிஸ்கோ போலீஸ் மட்டும் இல்லை. மொத்த அமெரிக்கப் போலீஸ் துறையும் இப்போது ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. ஒரு வருடத்துக்கு முன்னால் ரிச்சர்ட் என்ற இந்தியர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வரிசையாய் சீரான இடைவெளி விட்டு மூன்று இந்தியர்கள் இந்த சான்பிரான்ஸிஸ்கோவில் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதில் ஜாகீர் என்பவன் மட்டும் ஒரு தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவன் என்ற உண்மை கிடைத்து இருக்கிறது. மற்ற மூன்று பேரும் நல்ல முறையில் தொழில் செய்து வாழ்ந்தவர்கள். இப்போது கடைசியாய் கடத்தப்பட்டு இருக்கும் செங்குட்டுவன் என்ற இந்தியர் உயிரோடு இருக்கிறாரா இல்லையாவென்று தெரியவில்லை. அவர் உயிரோடு இருக்கும் பட்சத்தில் அவர் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து அவரை மீட்க நாம் ஏதாவது அறிவு பூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். உங்களுக்கு ஏதாவது வழி தோன்றுகிறதா மிஸ்டர் பால் ஹாரீஸ்...?''

பால் ஹாரீஸ் தன் இரண்டு முழங்கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டு பெருமூச்சொன்றை விட்டார்.

''வெரி ஸாரி ஸார் டூ ஸே திஸ்...! ஒரு வருடத்துக்கு முன் ரிச்சர்ட் கொலை செய்யப்பட்ட போது எனக்கு எந்த அளவுக்கு குழப்பம் இருந்ததோ அதே அளவுக்குத்தான் இப்போதும் குழப்பம் உள்ளது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் தெளிவாய் புரிகிறது.''

''அது என்ன?''

''இந்தக் கொலைச் சம்பவங்களுக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள். அவள் தன்னை **கலிபோர்னியா காதலி** என்று சொல்லிக் கொள்கிறாள். முதன் முதலாக கொலை செய்யப்பட்ட ரிச்சர்ட்டுக்கு அவள் அனுப்பிய

கடிதத்தில் **'நீங்கள் செய்யும் தவறு கூட புனிதம் ஆகும் - அதை நீங்கள் ஒப்புக் கொள்ளும் போது'** என்ற வரிகள் அந்தப் பெண்ணின் கோபத்தை வெளிப்படுத்துகிறது."

"அந்த **கலிபோர்னியா காதலி** யாராக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?"

"ஸார்! ரிச்சர்ட், விஷ்வா, அருண்டேல், ஜாகீர் இந்த நான்கு இந்தியர்களும் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் நிறைய பெண்கள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். முதலாவதாக ரிச்சர்ட்டின் மனைவி செபாடினா. அவளை ஒரு வருஷமாய் காண வில்லை. அவள் எந்த நாட்டில் எங்கே இருக்கிறாள் என்பதும் தெரியவில்லை. இரண்டாவது ரிச்சர்ட்டின் பர்சனல் செக்ரட்ரி வயலெட். இவள் ரிச்சர்ட்டைப் பற்றி சொல்வதையெல்லாம் நம்பவும் முடிய வில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. பிறகு ரிச்சர்ட்டின் வீட்டில் சர்வண்ட் மெய்டாய் பணிபுரியும் கேத்ரீனா. அடுத்தபடியாய் கொலை செய்யப்பட்ட விஷ்வாவுக்கு குடும்பம் இல்லை. ஆனால் மூன்றாவதாய் கொலை செய்யப்பட்ட அருண்டேலுக்கு மனைவி மற்றும் மகன் உண்டு. மனைவி பெயர் எமிலி. அவள் ஒரு பள்ளிக்கூட ஆசிரியை. நான்காவதாய் கொலை செய்யப்பட்ட ஜாகீர்க்கு ஒரு காதலி உண்டு. அவள் பெயர் லூசி. இது தவிர குடிபோதையில் போலீஸாரிடம் மாட்டிய மார்ட்டீன் ஸாம்ஸின் மனைவி ஷெர்லி. அவருடைய சட்ட விரோத காதலி மெர்ரி. இப்படி இந்த விவகாரத்தில் நிறைய பெண்கள். இவர்களில் யார் அந்த கலிபோர்னியா காதலி...? ஜாகீரின் காதலி லூசியின் செல்போனில் இருந்த சிம்கார்டை மாற்றியது யார்...? ஜாகீரை யூனியன் சதுக்க பூங்காவுக்கு வரச் சொன்னது யார்...? குடிபோதை யில் இருந்த மார்ட்டின் ஸாம்ஸின் கார் டிக்கியில் அவர்க்குத் தெரியாமல் ரிச்சர்ட்டின் உடலைத் திணித்தது யார்? மார்ட்டின் ஸாம்ஸைப் பற்றி விசாரிப்பதற்காக நான் அவர் வீட்டுக்கு சென்று இருந்த பொழுது யாரோ ஷெர்லிக்கு போன் செய்தார்கள். ரிஸீவரை நான் எடுத்து குரல் கொடுத்த போது மறுமுனையில் ரிஸீவரை வைத்து விட்டார்கள்... அது யார் என்று இதுவரைக்கும் தெரியவில்லை. மார்ட்டின் ஸாம்ஸின் காதலி மெர்லியை விசாரித்த போது அவள் தன்னை ஒரு கால்கேர்ள் என்று சொல்லிக் கொண்டாள். அவளையும் கடந்த ஒரு வருஷ காலமாய் 'க்ளோஸ் ஃபாலோ அப்' செய்து பார்த்தாயிற்று. அவளுடைய எந்த ஒரு நடவடிக்கையும் சந்தேகப்படும்படியாய் இல்லை. மெர்ரி மட்டுமில்லை; இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட எல்லாப் பெண்களையுமே போலீஸின் புலனாய்வுத்துறை உன்னிப்பாய்க் கவனித்து தகவல்களை சேகரம் பண்ணியது. ஆனால் யாரையும் சந்தேகப்பட முடியவில்லை. இப்போது நமக்கு முன்பாய் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டு நிற்கும் கேள்வி யார் அந்த **கலிபோர்னியா காதலி?"**

ஜான் ஃபோர்ட் கவலையோடு கேட்டார்.

"மிஸ்டர் பால் ஹாரீஸ்! நாம் எப்படி அந்த கொலையாளியைக் கண்டுபிடிக்கப் போகிறோம்? உங்களிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?"

"நோ ஸார்... அயாம் ஹெல்ப்லெஸ். நான் இதைப் பற்றி யோசித்து யோசித்து களைத்துப் போய்விட்டேன். இப்போதைய என்னோட கவலையெல்லாம் கடத்தப்பட்ட செங்குட்டுவனை உயிரோடு மீட்க வேண்டும் என்பதே...!"

"அதுவும் முடியாது போலிருக்கிறதே மிஸ்டர் பால் ஹாரீஸ்...? கடத்தப்பட்ட செங்குட்டுவன் எந்த திசையில் இருக்கிறார் என்பதைக்கூட நம்மால் கணிக்க முடியவில்லையே?" சொல்லி விட்டு ஜான் ஃபோர்ட் நெற்றியைப் பிடித்துக் கொள்ள - அந்த அறையில் விரும்பத்தகாத ஒரு அமைதி நிலவியது.

15

அமெரிக்காவில் பணிபுரிபவர்கள் தங்கள் முதலாளியைக் கூட பெயர் சொல்லி அழைக்கும் வழக்கம்தான் இருக்கிறது. இங்கு இருப்பது போல் தனது மேலதிகாரி மற்றும் முதலாளி ஆகியோர்க்கு இடையே எந்த ஏற்றத்தாழ்வுகளும் இல்லை. நண்பர்களைப்

போல் சகஜமாய் பழகுகிறார்கள். அதேபோல் அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் பணி நேரம் கடுமையானதாக இல்லை. கொடுக்கப்பட்ட வேலையை முடித்துவிட்டால் ஊழியர்கள் எப்போது வேண்டுமானாலும் வெளியில் செல்லலாம். எப்போது வேண்டுமானாலும் வரலாம். அவர்களுக்கு வேலைதான் முக்கியமே தவிர வேலை செய்யும் நேரம் முக்கியமில்லை.

இரவு மணி பத்து முப்பது.

எடிசன் பார்த்துக் கொண்டிருந்த அலுவலக ஃபைல்களைத் தள்ளி வைத்துவிட்டு ''ஐசக்'' என்று கூப்பிட்டார்.

ஒரு கம்ப்யூட்டர்க்கு முன்பாய் உட்கார்ந்து க்ரைம் அக்கரன்ஸ் தகவல்களை சரிபார்த்துக் கொண்டிருந் தார் ஐசக். எழுந்து வந்தார்.

''ஸார்...!''

''நான் வீட்டுக்கு கிளம்புகிறேன். ஹெட் க்வார்ட்டர்ஸிலிருந்து ஏதாவது முக்கியமான செய்தி வந்தால் உடனடியாய் எனக்குத் தகவல் கொடுக்க வேண்டும். அடுத்த 24 மணி நேரத்திற்குள் செங்குட்டுவனை உயிரோடு மீட்டு கமிஷனர் ஜான் ஃபோர்டுக்கும், பால் ஹாரீஸுக்கும் முன்பாய் நிறுத்தினால்தான் என்னால் நிம்மதியாக சாப்பிட முடியும். உறங்க முடியும்...''

''ஸார்...! விடிவதற்குள் அந்த நல்ல காரியம் நிச்சயம் நடக்கும்... நம்முடைய சர்ச்சிங் கமாண்டோ ஸ்க்வாட் சான்பிரான்ஸிஸ்கோவின் மூலை முடுக்கையெல்லாம் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள்.''

''உங்களிடமிருந்து எனக்கு நல்ல செய்தி வரட்டும்.'' சொல்லிவிட்டு தன்னுடைய காரில் ஏறி உட்கார்ந்து கிளம்பினார். மனசுக்குள் ஒரு எரிமலை மௌனமாய் சீறிக் கொண்டிருந்தது. அந்தச் சீற்றத்தை காரின் வேகத்தில் காட்டினார்.

கார் 'க்ரீன் வேலி யார்க்' பகுதியில் இருக்கும் அவருடைய வீட்டை நோக்கிப் பறந்தது.

போக்குவரத்தற்ற நீளமான சாலை.

பத்து நிமிஷ பயணத்தில் பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தை கார் விழுங்கியிருந்த நேரத்தில் -

காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் ஐநூறு மீட்டர் தூரத்துக்கு அப்பால் சாலையின் வலது பக்க ஓரத்தில் யாரோ கீழே விழுந்து கிடப்பது தெரிந்தது.

எடிசனின் கால் தன்னிச்சையாய் காரின் பிரேக்கிற்குப் போக - காரின் வேகம் குறைந்தது.

கீழே விழுந்து கிடந்த அந்த நபரின் அருகே போய் கார் நின்றது.

எடிசன் முன் எச்சரிக்கையோடு தன்னுடைய இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி, நபரை நெருங்கி குனிந்தார். லேசான ரத்தக் காயங்களோடு தெரிந்த அந்த நபரின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

எடிசனின் முகம் அதிர்ச்சிக்குப் போயிற்று.

'இவன்... இவன்... செங்குட்டுவன்!"

அவனுடைய கன்னத்தை மெல்லத்தட்டினார். செங்குட்டுவனின் கண்ணிமைகள் மெல்ல பிரிந்தது. எடிசனின் முகத்தைப் பார்த்ததும் பதட்டமாய் எழ முயன்றான். பயத்தில் உதடுகள் துடித்தது.

''ஸ... ஸர்... ஸார்... ஹெல்ப்... மீ...!''

''செங்குட்டுவன்! பயப்படாதீர்கள்... உங்களுக்கு என்னாயிற்று...? யார் உங்களை இப்படி தாக்கியது...?''

''ஸ... ஸார்...! எ... எ... எல்லாவற்றையும் நா... நான் விபரமாக சொ... சொல்கிறேன்... மு... மு... முதலில்... இ... இ... இங்கிருந்து... போ... போய்... விடலாம்...! நா... நான்... த... தப்பி வ... வந்தது... அவர்களுக்கு... இ... இன்னமும்... தெ... தெரியாது. தெரிந்தால் வ... வந்துவிடுவார்கள்...!''

''யா... யார்... அவர்கள்...?''

''ஸ... ஸார்...! எ... என்னை மு... முதலில் பாதுகாப்பான... இ... இ... இடத்துக்கு... கொண்டு... போங்கள்... ப்ளீஸ்''

''ஓ... கே... செங்குட்டுவன்...! என்னைப் பிடித்துக் கொண்டு மெல்ல எழுந்து நில்லுங்கள். கார்க்குப் போய்விடலாம். நான் இப்போது என்னுடைய வீட்டிற்குத்தான் கிளம்பிப் போய்க் கொண்டு இருக்கிறேன்...'' செங்குட்டுவனை எழுப்பி

கைத்தாங்கலாய் நடத்தி கூட்டி வந்து காரின் பின் சீட்டில் படுக்க வைத்தார். செங்குட்டுவனின் கால்களிலும் ரத்தக் காயங்கள் தெரிந்தன.

''செங்குட்டுவன்! கொஞ்சம் தண்ணீர் சாப்பிடுகிறீர்களா?''

''வே... வேண்டாம் ஸார்...! முதலில் காரை இங்கிருந்து கிளப்புங்கள்...!''

கைத்துப்பாக்கியோடு எடிசன் சுற்றும் முற்றும் ஒரு தடவை பார்த்துவிட்டு காருக்குள் ஏறி உட்கார்ந்தார். காரை விரட்டினார்.

ஒரு கையில் ஸ்டீயரிங்கை கையாண்டு கொண்டே இன்னொரு கையில் செல்போனை எடுத்து எண்களைத் தட்டிவிட்டு காதுக்கு செல்போனை வைத்தார்.

செங்குட்டுவன் தீனறலோடு கேட்டான். ''ஸார்! யார்க்கு போன்?''

''போலீஸ் கமிஷனர் ஜான் ஃபோர்டுக்கும், சார்ஜண்ட் பால் ஹாரீஸுக்கும்!'' சொன்ன எடிசன் காரை நிதான வேகத்தில் ஓட்டிக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

''ஸார்! நவ் வாட் அயாம் ஸேயிங் ஈஸ் செண்ட் பர்செண்ட் கரெக்ட். செங்குட்டுவன் கிடைத்து விட்டார். நான் என் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்த வழியில் க்ரீன் வேலி யார்க் ஹைவேஸ் ரோட்டில் ஓர் ஓரமாய் காயங்களோடு கிடந்தார்.''

''.....''

''அவரைக் கடத்தினது யார்... காயப்படுத்தியது யார் என்று தெரியவில்லை. நான் இப்பொழுது அவரை என் வீட்டுக்கு காரில் அழைத்துப் போய்க் கொண்டு இருக்கிறேன். வீட்டுக்குப் போனதும்தான் விபரம் கேட்க வேண்டும்''

''.....''

''நோ... ஸார்...! அவருடைய உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. நல்ல சுய உணர்வோடுதான் இருக்கிறார். கைகளிலும் கால்களிலும் சின்னச் சின்ன ரத்தக் காயங்கள். வீட்டிற்குப் போனதும் நான் உடனடியாய் டாக்டரை வரவழைத்து ட்ரீட்மெண்ட் கொடுத்து விடுகிறேன்.''

''.....''

''நீங்களும் சார்ஜண்ட் பால் ஹாரீஸும் என் வீட்டுக்கு உடனே புறப்பட்டு வருகிறீர்களா? வாருங்கள் ஸார். உங்களுக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன்!'' எடிசன் செல்போனை அணைத்து விட்டு காரின் வேகத்தை அதிகப்படுத்தினார்.

செங்குட்டுவன் பின் சீட்டில் இருந்தபடி ஈனஸ்வரத்தில் கேட்டான்.

''ஸார்! உங்கள் வீட்டிற்கு செல்ல இன்னும் எவ்வளவு நேரமாகும்?''

''இன்னும் சில நிமிடங்களில் போய் விடலாம்''

16

அமெரிக்காவில் பெற்றோர், குழந்தைகளை அடிப்பது அந்த நாட்டு சட்டப்படி குற்றமாகும். பெற்றோர் அடித்தால் அந்த செய்தி அறிந்த மறு நிமிடமே போலீஸ், சம்பந்தப்பட்ட வீட்டில் ஆஜராகிவிடுவார்கள். இந்த சட்டத்துக்கு பயந்து பெற்றோர் குழந்தைகளை அடிக்காவிட்டாலும் தவறு செய்த குழந்தைகளுக்கு வேறு மாதிரியான தண்டனையைத் தந்து விடுகிறார்கள். அதாவது தவறு செய்த குழந்தைகளை ஒரு அறையில் சில மணி நேரம் தனியாக அமர வைத்து அவர்கள் செய்த தவறை உணரும் படி செய்கிறார்கள். இந்த தண்டனைக்கு பெயர் TIME OUT . இப்படி தனிமைப்படுத்துதல் மூலமாக குழந்தைகள் எதிர்காலத்தில் பெரிய அளவில் தவறுகளைச் செய்யாமல் ஒழுக்கம் மிக்கவர்களாக வாழ்வார்கள் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

தன் வீட்டு போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கிய எடிசன் செங்குட்டுவனை கைத்தாங்கலாய், வீட்டுக்குள் கூட்டிப் போய் ஒரு தனியறையில் சோபா ஒன்றில் உட்கார வைத்தார்.

செங்குட்டுவன் தளர்வாய் உட்கார்ந்தபடி சுற்றும் முற்றும் பார்த்தான். பலஹீனமான குரலில் கேட்டான்.

"ஸார்...! இந்த வீட்டில் உங்களைத் தவிர வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்?"

"இந்த வீட்டில் யாரும் கிடையாது."

"உங்களுக்கு மனைவி, குழந்தைகள்...?"

"திருமணம் செய்து இருந்தால்தானே மனைவி குழந்தைகள் எல்லாம்... நான் ஒரு பேச்சிலர்."

"வீட்டில் வேலைக்காரர்கள்?"

"யாரும் கிடையாது. போலீஸ் உத்யோகம் முடிந்து நான் வீட்டுக்கு வந்து விட்டால் நானே சமையல்காரன், நானே வேலைக்காரன், நானே தோட்டக்காரன்...!"

"இவ்வளவு பெரிய வீட்டில் நீங்கள் தனியாய் இருப்பதற்கு உங்களுக்கு பயமாய் இல்லையா?"

"எதற்குப் பயப்பட வேண்டும்? நான் என்றைக்கும் எதற்கும் பயப்பட்டது இல்லை. ஓ.கே... இப்போது உங்கள் விஷயத்துக்கு வருவோம். உங்களைக் கடத்தியது யார்...? அவர்களிடமிருந்து எப்படி தப்பித்து வந்தீர்கள்...? அந்த விபரத்தைச் சொல்லுங்கள்."

"ஸார்... நான் மிகவும் களைத்துப் போயிருக்கிறேன். உடம்பில் காயங்கள் வேறு உள்ளன. உங்களுக்குத் தெரிந்த டாக்டர் யாரையாவது அழைக்க முடியுமா?"

எடிசன் சிரித்தார்.

"டாக்டர் எதற்கு?"

"என்ன ஸார் இப்படி கேட்கிறீர்கள்...? நீங்கள் தான் போலீஸ் கமிஷனரிடம் போனில் பேசும் போது வீட்டுக்குப் போனதும் ஒரு டாக்டரை வரவழைத்து ட்ரீட்மெண்ட் கொடுக்கப் போவதாக சொன்னீர்களே?"

"சொன்னது உண்மைதான்...! ஆனால் பிறகு யோசித்துப் பார்த்ததில் டாக்டரை வரவழைத்து என்ன ஆகப் போகிறது? இன்னும் சிறிது நேரத்தில் சாகப் போகிற உனக்கு ட்ரீட்மெண்ட் எதற்கு...?"

செங்குட்டுவன் அதிர்ந்து போய் சோபாவினின்றும் எழ முயல, எடிசன் தன் இடுப்பில் இருந்த கைத் துப்பாக்கியை எடுத்து அவனைக் குறிபார்த்தினார்.

"செங்குட்டுவன்! உன்னைக் கடத்தினவர்கள் யார்

என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்த வேலையை நானே செய்ய ஒரு சரியான தருணத்தை எதிர்பார்த்து இருந்தேன். நான் யூனிஃபாரமை மாட்டிக் கொண்டு போலீஸ் உத்யோகம் பார்த்தாலும் என் மனதில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் நெருப்புக்கு உன்னைப் போன்ற இந்தியர்களை உணவாகக் கொடுத்து அதில் கிடைக்கும் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன். முதலில் ரிச்சர்ட், பிறகு விஷ்வா, பிறகு அருண்டேல். அதற்குப் பிறகு ஜாகீர். இப்போது நீ...! உனக்குப் பின்னாலும் இந்தப் பட்டியல் தொடரும். என்னுடைய பதவிக்காலம் முடிவதற்குள் இந்த சான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஒரு இந்தியன்கூட உயிரோடு இருக்கக்கூடாது என்பதுதான் என் விருப்பம்...!"

செங்குட்டுவன் மிரண்டு போய் தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந்தான்.

"ஸ... ஸ... ஸார்...! உங்களுக்கென்ன பைத்தியமா...? எதற்காக இந்தியர்கள் மேல் உங்களுக்கு இந்தக் கொலை வெறி...?"

எடிசன் சத்தமில்லாமல் சிரித்துவிட்டு சொன்னார்.

"காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் நீ உயிரை விடுவதுதான் உனக்கு நல்லது. உன்னைக் காப்பாற்ற போலீஸ் கமிஷனர் ஜான் ஃபோர்டோ சார்ஜண்ட் பால் ஹாரீஸோ வரப்போவது இல்லை. ஏனென்றால் காரில் வரும் போது அவர்களோடு போனில் பேசுவது போல் பாவ்லா செய்தேனே தவிர உண்மையில் பேசவில்லை. அடுத்த 24 மணி நேரத்திற்குள் உன்னை உயிரோடு மீட்க வேண்டும் என்று அவர்கள் சபதம் எடுத்துக் கொண்டு மும்முரமாய் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உன்னை மீட்கும் போது நீ உயிரோடு இருக்கமாட்டாய்!"

எடிசன் பேச்சை நிறுத்திவிட்டு தன் கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தினார். சோபாவில் மிரண்ட நிலையில் உட்கார்ந்திருந்த செங்குட்டுவனைக் குறிபார்த்தார்.

"ஸ... ஸார்... ப்ளீஸ்... வே... வேண்டாம்!"

செங்குட்டுவன் பதறிக் கொண்டு இருக்கும்போதே ட்ரிக்கரை சுண்டினார்.

"ட்ட்டப்ப்ப்ப்...!"

ஏதோ பட்டாசு வெடித்தது போல் ஒரு சின்ன

சத்தம். தோட்டா வெளியே வந்ததற்கான அறிகுறி சிறிதும் இல்லை.

எடிசன் திடுக்கிட்டுப் போய் தன் கையிலிருந்த துப்பாக்கியையே திருப்பித் திருப்பி பார்த்துக் கொண்டிருக்க, செங்குட்டுவன் ஒரு புன்னகையோடு தன் இடுப்பின் மறைவிலிருந்து அந்த குரோமியம் மெட்டல் ரிவால்வரை எடுத்தான்.

''மிஸ்டர் எடிசன்...! இந்த நிமிஷம் உங்கள் கையில் இருப்பது நீங்கள் வழக்கம்போல் உபயோகிக்கிற நிஜத் துப்பாக்கியில்லை. சினிமாக்களில் உபயோகப்படுத்தப்படும் டம்மித்துப்பாக்கி. உங்களுக்கு சந்தேகம் வராத அளவுக்கு அதை வடிவமைத்ததும் அதை ரீப்ளேஸ் செய்ததும் யார் என்று நினைக்கிறீர்கள்...? உங்களோடு பணி புரியும் இன்னொரு அதிகாரியான ஜகச்தான்...! என் கையில் இருக்கிற இந்த துப்பாக்கிதான் இப்போதைக்கு நிஜத்துப்பாக்கி. ட்ரிக்கரை சுண்டினால் தோட்டாக்கள் பாயும்.''

''ஏய்... நீ... நீ...?'' எடிசன் ஆவேசமாய் கத்திக்கொண்டே முன்னால் வர முயல -

செங்குட்டுவன் தன் கையில் இருந்த துப்பாக்கியை தாழ்த்தி எடிசனின் வலது முழங்காலுக்கு துல்லியமாய் குறி வைத்தான்.

''மிஸ்டர் எடிசன்! நீங்கள் இனி ஓர் அடி எடுத்து வைத்தாலும் உங்கள் வலது முழங்காலை தோட்டா சிதறடிக்கும். அதற்கு விருப்பம் என்றால் முன்னால் வாருங்கள்.''

எடிசன் மேற்கொண்டு நகராமல் அப்படியே வியர்த்து வழிந்து கொண்டு நின்றார். செங்குட்டுவன் சிரித்தபடியே மறுபடியும் போய் சோபாவுக்கு சாய்ந்து கொண்டான்.

''எடிசன்! நீங்கள் டாக்டரை வரவழைக்காமல் இருந்ததே நல்லது. ஏனென்றால் என் உடம்பில் தெரியும் காயங்களும் ரத்தக் கறைகளும் கைதேர்ந்த மேக்கப் மேன் ஒருவரால் உருவாக்கப்பட்டவை. அதற்கு எந்த ட்ரீட்மெண்ட்டையும் கொடுக்க முடியாது! என்ன அப்படி திகைத்துப் போய் பார்க்கிறீர்கள் எடிசன்? நான் இப்படியெல்லாம் நடிக்க வேண்டுமென்றால் எனக்கு மேலே டைரக்டர் ஒருவர் இருக்க வேண்டும் அல்லவா...? அவர் யார் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால்

நீங்கள் சாத்தி தாழிட்டுவிட்டு வந்த வாசல் கதவைப் போய் திறந்து பாருங்கள்.''

எடிசன் அப்படியே வெறித்து பார்த்துக் கொண்டு நிற்க - செங்குட்டுவன் குரலை உயர்த்தினான்.

''ம்...! போய் திறங்கள். இல்லாவிட்டால் உங்கள் முழங்கால் என் துப்பாக்கித் தோட்டாவுக்கு சொந்தம்.''

எடிசன் தயக்கமாய் மெல்ல நடையிட்டு வாசல் கதவை நோக்கிப் போனார்.

''ம்... சீக்கிரம்!''

கதவை நெருங்கினார் எடிசன். தாழ்ப்பாளை விலக்கித் திறந்தார்.

வெளியே - போர்டிகோ படிகளின்

அரையிருட்டில்

போலீஸ் கமிஷனர் ஜான் ஃபோர்ட், பால் ஹாரீஸ் நின்றிருக்க, அவர்களுக்குப் பின்னால் தலையில் இரும்புத் தொப்பி அணிந்த கமாண்டோ போலீஸ் ரைஃபிள்களோடு தெரிந்தார்கள்.

17

அமெரிக்காவில் கோடைக்காலங்களில் காலை நான்கு மணிக்கு சூரியன் உதயமாகிறது. அதனால் அமெரிக்கர்கள் அந்தப் பகல் பொழுதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக கடிகாரத்தில் ஒரு மணி நேரத்தை முன்னதாக திருத்தி வைத்துக் கொள்கிறார்கள். இதனால் கோடைக் காலங்களில் ஒரு மணி நேரம் முன்னதாகவே பகல் பொழுது துவங்கி விடுகிறது. இதனால் அமெரிக்காவில் பகல் நேரம் அதிக அளவில் பயன்படுத்தப்படு வதால் மின்சாரம் சிக்கனம் செய்யப்படுவ துடன் இரவு நேரங்களில் நடைபெறும் குற்றங்களும் குறைகிறது.

சான்பிரான்ஸிஸ் போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸ்.

'ரெட் செல்' எனப்படும் விசாரணை அறை.

நள்ளிரவு இரண்டு மணி.

உண்மையை வரவழைக்க போலீஸார் கொடுத்த

ட்ரீட்மெண்ட்டுகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தளர்ந்து போன எடிசன் மெல்ல மெல்ல ஒவ்வொரு உண்மையாய் கக்க ஆரம்பித்தார்.

சுற்றிலும் நின்றிருந்த போலீஸ் கமிஷனர் ஜான் ஃபோர்ட், பால் ஹாரீஸ், ஐசக், மேலும் சில அதிகாரிகள் ஒவ்வொரு கேள்வியாய் கேட்க ஆரம்பித்தார்கள்.

''இந்தியர்கள் மேல் அப்படி என்ன கோபம்?''

எடிசனின் விழிகள் கோபமாய் உயர்ந்தன.

''என் காதல் மனதை இரண்டாய் வெட்டிப் போட்டவன் ஒரு இந்தியன். அந்த விநாடியிலிருந்தே இந்தியர்களை நான் வெறுக்க ஆரம்பித்து விட்டேன்...!''

''யார் அந்த இந்தியன்?''

''ரிச்சர்ட்...! நான் காதலித்த செபாடினா என்ற பெண்ணை வலுக்கட்டாயமாக - அவளுடைய விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்து கொண்டவன். அப்படி திருமணம் செய்த பின்னும் அவளை சந்தோஷமாக வைத்துக் கொள்ளாமல் அவளிடம் ஒரு சேடிஸ்ட் போல் நடந்து கொண்டவன். அந்த ரிச்சர்ட் செபாடினாவை எப்படியெல்லாம் கொடுமைப் படுத்துவான் என்பதை அங்கே பணிப் பெண்ணாய் பணி புரியும் கேத்ரீனா என்பவள் என்னை நேரில் சந்தித்து சொல்லும் போது நான் உடைந்து போவேன். எல்லாவற்றுக்கும் உச்சபட்சமாய் செபாடினா வீட்டை விட்டு வெளியே போகவில்லை; அவள் ரிச்சர்ட்டால் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டு ஒரு எரியில் சாம்பலாய் கரைக்கப்பட்டுவிட்டாள் என்ற உண்மை எனக்குத் தெரிந்த போதுதான் வெறி பிடித்த மனிதனாய் மாறினேன். போலீஸ், கோர்ட் என்று போனால் அவன் தப்பித்துக் கொள்ள வாய்ப்புக்கள் அதிகம் இருந்ததால் நானே அவனைத் தீர்த்துக் கட்டினேன். உடலை எரித்து டிஸ்போஸ் செய்வதற்குள் போலீஸ் பெட்ரோலிங் வேனின் சைரன் சத்தம் கேட்கவே டெட்பாடியை சாலையோரத்தில் நின்றிருந்த ஒரு காரின் டிக்கிக்குள் திணித்தேன். அது மார்ட்டின் ஸாம்ஸ் கார் என்று எனக்குத் தெரியாது. குடிபோதையில் காரின் ஸ்டீயரிங்கின் மேல் தலை கவிழ்ந்து தூங்கிக் கொண்டிருந்த மார்ட்டின் ஸாம்ஸின் பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து அவருடைய

கர்ச்சீப்பை எடுத்து ரத்தக்கறை படிந்த என் கைகளைத் துடைத்துவிட்டு மறுபடியும் அவருடைய பாக்கெட்டிலேயே போட்டு வைத்தேன். ரிச்சர்ட் கொலை சம்பந்தமாய் எந்தக் காரணத்தை முன்னிட்டும் என் மேல் சந்தேகம் வந்து விடக்கூடாது என்பதற்காக அப்படிச் செய்தேன். பிறகு அதை நினைத்து வருத்தப்பட்டதும் உண்டு!''

ஜான் ஃபோர்ட் குறுக்கிட்டார்.

''ஓ.கே! ரிச்சர்ட் மேல் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் கோபம் இருந்தது. பழி தீர்த்துக் கொண்டீர்கள். ஆனால் மற்ற இந்தியர்களான விஷ்வா, அருண்டேல், ஜாகீர் கொலைகள் ஏன்...?''

''ரிச்சர்ட்டைக் கொன்ற பிறகும் எனக்கு இந்தியர்கள் மேல் இருந்த கோபமும் வெறியும் அடங்கவில்லை. இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது எந்த இந்தியனையாவது தீர்த்துக்கட்ட வேண்டும்போல் என் மனதுக்குள் இருந்த ஒரு மிருகம் துடித்தது. அதன் துடிப்பை அடக்குகிற வரை என்னால் நிம்மதியாய் தூங்க முடியவில்லை. சாப்பிட முடியவில்லை. எங்கே ஒரு மன நோயாளியாய் மாறிவிடுவேனோ என்கிற பயத்தில் தொடர்ந்து விஷ்வா, அருண்டேல், ஜாகீர் என்று இந்தியர்களைத் தேடிப் பிடித்துக் கொலை செய்தேன். அதில் ஜாகீர் ஒரு தீவிரவாதியாய் இருப்பான் என்று கொஞ்சம் கூட நான் நினைத்துப் பார்க்கவில்லை... ஒரு தீவிரவாதியைத்தான் கொலை செய்து இருக்கிறோம் என்று தெரிந்தபோது மனசுக்கு கொஞ்சம் சந்தோஷமாய்க்கூட இருந்தது.''

பால் ஹாரீஸ் சிரித்தார்.

''அந்த ஜாகீரின் மரணம்தான் உங்களை ஒரு கொலைகாரர் என்று அடையாளம் காட்டியது என்று தெரிந்து இருந்தால் நீங்கள் சந்தோஷப்பட்டிருக்க மாட்டீர்கள்.''

எடிசன் தன் நெற்றியைச் சுருக்கினார்.

''ஜாகீரின் மரணம் என்னைக் காட்டிக் கொடுத்ததா...? எப்படி...?''

பால் ஹாரீஸ் தன் கையில் இருந்த ஒரு சிறிய பிளாஸ்டிக் உறையைப் பிரித்து அதற்குள் இருந்த இரண்டு மைக்ரோசிப்களை எடுத்துக் காட்டினார். கேட்டார்.

''இது என்னவென்று தெரிகிறதா எடிசன்?''

எடிசன் அவைகளைப் பார்த்துவிட்டு தயக்கமான

குரலில் சொன்னார். "மைக்ரோசிப்ஸ்...!"

"இது உங்களால் கொலை செய்யப்பட்ட ஜாகீரின் கடைவாய்ப் பற்களுக்கு நடுவில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த மைக்ரோசிப்ஸ். ஞாபகத்துக்கு வருகிறதா...?"

"ம்..." எடிசன் தலையாட்டினார். ஜான் ஃபோர்டு இடைமறித்து கேட்டார்.

"இந்த மைக்ரோசிப்களை நீங்கள் பாரன்ஸிக்கில் உள்ள டெக்னிக்கல் செக்ஷனுக்கு கொடுத்து ரிப்போர்ட் வாங்கினீர்கள் இல்லையா?"

"ஆமாம்!"

"அந்த ரிப்போர்ட்டில் என்ன எழுதப்பட்டு இருந்தது?"

"**இரண்டு மைக்ரோசிப்களிலும் இடம் பெற்று இருந்த வார்த்தைகள் எல்லாமே சங்கேத வார்த்தைகளாக உள்ளன. ஒரு வார்த்தையைக் கூட புரிந்து கொள்ள முடியவில்லை. மைக்ரோசிப்களை டெரரிஸ்ட் சம்பந்தப்பட்ட புலனாய்வு பிரிவுக்கு அனுப்பினால் ஒருவேளை அந்த வார்த்தைகளுக்கு பொருள் புரியலாம்** என்று ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டு இருந்தது."

இப்போது பால் ஹாரீஸ் தொடர்ந்தார்.

"இவ்வளவு தெளிவாய் அறிக்கை கொடுத்த ஃபாரன்ஸிக் டெக்னிக்கல் துறை அதிகாரிகள் உங்களிடம் வேண்டுமென்றே ஒரு விஷயத்தை சொல்லாமல் மறைத்து விட்டார்கள்."

எடிசனின் கண்களில் குழப்பம்.

"சொல்லாமல் மறைத்து விட்டார்களா?"

"ஆமாம்...! அந்த மைக்ரோசிப்களில் மைக்ரோ காமிராக்கள் இருந்ததும், ஜாகீர் வாயைத் திறந்து பேசும் போதோ அல்லது கத்தும் போதோ அந்த காமிராக்கள் இயங்கி எதிரே நிற்கும் நபரைப் பதிவு செய்து வைத்துக் கொள்ளும் என்பதும்தான் அந்த விஷயம். அந்த மைக்ரோசிப்களை விசேஷ கம்ப்யூட்டர்க்கு கொடுத்து செயல்பட வைத்தபோது நீங்கள் துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு ஜாகீரை மிரட்டுவது பார்த்த டெக்னிகல் துறையின் தலைவர், போலீஸ் கமிஷனர் ஜான் போர்ஃபோர்டுக்கு போன் செய்து தகவல் கொடுத்தார். கமிஷனர் எனக்கு போன் செய்து சொல்ல, நாங்கள் இரண்டு பேரும்

உடனே புறப்பட்டு ஃபாரன்ஸிக் டெக்னிகல் பிரிவுக்கு வந்து தலைவரைச் சந்தித்து பேசினோம்."

பால் ஹாரீஸ் பேச்சை நிறுத்த இப்போது ஜான் ஃபோர்ட் தொடர்ந்தார்.

"ஜாகீரைக் கொன்றது நீங்கள்தான் என்பது உறுதியானதும் உங்களை அவசரப்பட்டுக் கைது செய்ய நான் விரும்பவில்லை. விஞ்ஞானக்கருவிகள் உண்மையைப் பேசினாலும் கூட கோர்ட் சில சமயம் அந்த சாட்சியங்களை நிராகரித்து விடுகின்றன. எனவே உங்களைக் கையும் களவுமாய் 'ரா ஹேண்ட்'டாய் பிடிக்க ஒரு திட்டம் போட்டோம். அந்தத் திட்டம்தான் செங்குட்டுவன் கடத்தல் திட்டம். செங்குட்டுவன் கடத்தப்பட்டதாய் நாங்கள்தான் ஒரு பொய்த்தகவலைப் பரப்பினோம். உங்களையும் நம்ப வைத்தோம். கொல்லப்பட்ட நபர்கள் எல்லோருமே இந்தியர்கள் என்பதால் ஒரு இந்தியரான செங்குட்டுவனிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று பார்ப்பதற்காகத்தான் செங்குட்டுவனுக்கு ரத்தக் காய மேக்கப் போட்டு சாலையோரம் படுக்க வைத்தோம். அதற்குப் பிறகுதான் என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமே?"

எடிசன் நொறுங்கிப் போனவராய் தலை குனிந்து உட்கார்ந்திருக்க - பால் ஹாரீஸ் அவருடைய தோளைத் தொட்டார்.

"உங்களிடம் நான்கைந்து குட்டி குட்டி கேள்விகள் கேட்கலாமா?"

எடிசன் மெல்ல தலையசைத்துவிட்டு எங்கோ பார்க்க, பால் ஹாரீஸ் கேட்டார்.

"உங்களுக்கு இந்த விஷயத்தில் உதவியாய் இருந்தது ரிச்சர்ட வீட்டில் வேலை பார்க்கும் அந்தப் பணிப் பெண் கேத்ரீனாதானே?"

"ஆமாம்...!"

"லூசியின் செல்போனில் சிம்கார்டைத் திருடியது?"

"அவள்தான்!"

"டெலிபோன்களில் அவ்வப்போது பேசியது?"

"அவள்தான்...! கேஸை திசை திருப்புவதற்காக நான் செய்த முயற்சிகளுக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்தாள் கேத்ரீனா. மற்றபடி அவளுக்கும்

இந்தக் கொலைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை!"

"அதை கோர்ட் தீர்மானிக்கும்." பால் ஹாரீஸ் சொல்லிவிட்டு நகர - அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் ஒரு ஓரமாய் நின்றிருந்த செங்குட்டுவன் எடிசனுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

"மிஸ்டர் எடிசன்...! நீங்கள் உங்களுடைய சொந்த வெறுப்புக்காக இந்தியர்களை வேட்டையாடியது மன்னிக்க முடியாத குற்றம். இந்தியர்கள் தேசப்பற்று மிக்கவர்கள். எந்த நாடு வேலை வாய்ப்பு தந்ததோ அந்த நாட்டையும் தங்களுடைய நாடாக நினைத்துப் போற்றுபவர்கள். இன்றைக்கு உங்களுடைய அமெரிக்க நாடு பொருளாதார மேம்பாட்டில் சிறந்து விளங்கக் காரணம் இந்தியர்களின் உழைப்புதான்...! இதை உங்கள் நாட்டுப் பொருளாதாரத்துறையின் புள்ளி விபரம் சொல்லிக் கொண்டு இருக்கிறது. இதை நீங்கள் எப்படி மறந்தீர்கள்?"

"வெல் செட்...!"

போலீஸ் கமிஷனர் ஜான் ஃபோர்ட் உள்பட எல்லோரும் கைகளைத் தட்டினார்கள். எல்லோருடைய கண்களிலும் சந்தோஷ மின்னல்கள் பளிச்சிட்டன.

முற்றும்.

அர்த்தமுள்ள அரட்டை

டி.வி.யில் நியூஸ் ரீடர் ஏற்ற இறக்கங்களோடு செய்தி வாசித்துக் கொண்டிருந்தார்.

"அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் அங்குள்ள மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றான லோமன் பிரதர்ஸ் திவாலாகிப் போனது. உலகநாடுகளை சுழற்றி சுழற்றி அடித்துக் கொண்டிருக்கும் நிதி நெருக்கடியினால் இந்திய பங்குச் சந்தையும் ஆட்டம் கண்டுள்ளது. இந்த நிலையில் 'நாம் பணம் போட்டு வைத்து இருக்கும் வங்கிகள் திவாலாகிப் போனால்...?' என்ற பயம் மக்களின் மனதை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது."

டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்த விவேக், தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரூபலாவைத் திரும்பிப் பார்த்தான்.

- ராஜேஷ்குமார்

"ரூபி...!"

"ம்"

"இந்த நியூஸைக் கேட்டு உனக்கு பயம் வரலையா...?"

"எதுக்குப் பயப்படணும்? நாம பேங்க்ல போட்டு இருக்கிற டிபாசிட் பணத்துக்குத்தான் ரிசர்வ் வங்கியின் பாதுகாப்பு இருக்கே?"

விவேக் சிரித்தான். ரூபலா அவனை வியப்பாய்ப் பார்த்தாள்.

"என்ன சிரிக்கறீங்க?"

"சிரிக்காமே என்ன பண்றது...? ஒரு பேங்க் திவாலாயிட்டா அதுல பணம் போட்டவங்களுக்கெல்லாம் போட்ட பணம் அத்தனையும் திரும்பவும் கிடைக்கும்ங்கிறதுக்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. அந்த பணத்துக்கு ரிசர்வ் வங்கியும் பொறுப்பு எடுத்துக்காது...!"

"என்னங்க! சத்தம் இல்லாமல் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறீங்க...?'ச'

"இது குண்டு இல்லை ரூபி... உண்மை...! இந்தியாவில் இருக்கிற பொதுத்துறை, தனியார்துறை

வங்கிகள் எல்லாமே ரிசர்வ் வங்கியோட கட்டுப்பாட்டில்தான் இருக்கு... இதன் காரணமாய் வாடிக்கையாளர்கள் பேங்கில் போட்டு வைத்து இருக்கும் சேமிப்புப் பணம், டெபாசிட் பணம் எல்லாமே பாதுகாப்பாய் இருக்கும்ன்னு நினைச்சுட்டு இருக்காங்க... பேங்க் திவாலாகும் போது ரிசர்வ் பேங்க் பணம் முழுவதையும் திருப்பிக் கொடுத்துடும்ன்னு நம்பிட்டு இருக்காங்க. அது உண்மை கிடையாது."

"அப்படீன்னா போட்ட பணம் போனதுதானா?"

"முழுப்பணமும் கிடைக்காது. ஓரளவு கிடைக்கும்."

"ஓரளவுன்னா... எவ்வளவு...?"

"ரூபி...! பேங்க் திவாலானால் வாடிக்கையாளர்களுக்கு நிவாரண நிதி அளிக்கும் பொறுப்பை DICGC என்ற அமைப்புத்தான் ஏத்துக்கும்."

" DICGC ன்னா...?"

"டிபாசிட் இன்ஸ்யூரன்ஸ் அண்ட் க்ரெடிட் க்யாரண்டி கார்ப்பரேஷன் (DEPOSIT INSURANCE AND CREDIT GUARANTEE CORPORATION) என்ற அமைப்புதான் வாடிக்கையாளர்களுக்கு சட்டத்தின் அடிப்படையில் திவாலான பணத்தை திரும்பவும் கொடுக்கும்."

"நிவாரண நிதின்னா எவ்வளவு கொடுப்பாங்க?"

"இந்தியாவில் இருக்கிற எல்லா அரசுடமை பேங்குகளும் எல்லா தனியார் பேங்குகளும் தங்களிடம் உள்ள வைப்பு நிதி, சேமிப்பு நிதி எல்லாவற்றையும் இந்த 'DICGC' அமைப்பில்தான் இன்சூர் பண்ணியிருப்பாங்க. ஒரு பேங்க் திவாலாகும் போது பணத்தை சட்டரீதியாக கொடுக்கும் பொறுப்பையும் இந்த DICGC ஏற்றுக் கொள்கிறது. அதன்படி வாடிக்கையாளர் ஒருவர் போட்டு வைத்து இருக்கும் தொகையில் அதிகபட்சம் ஒரு லட்சம் வரை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். உதாரணமாக ஒரு நபர் ஒரு வங்கியில் ஃபிக்ஸட் டெபாசிட்டில் இரண்டு லட்ச ரூபாயும், சேமிப்புக் கணக்கில் ஒரு லட்ச ரூபாயும், நடப்புக் கணக்கில் ரூபாய் 70 ஆயிரமும் போட்டு வைத்து இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த வங்கி திடீரென்று திவாலாகிவிட்டால் அந்த நபர் கணக்கில் உள்ள மொத்தத் தொகையான 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் முழுவதும் கிடைக்காது."

"பின்னே?"

"ஒரு லட்ச ரூபாய்தான் கிடைக்கும்"

"மீதி ரெண்டு லட்சத்து எழுபதாயிரம் ரூபாய்...?"

"போச்சு...!"

"இது என்னங்க அநியாயமாய் இருக்கு...?"

"இது அநியாயம் இல்லை ரூபி...! ஒரு வங்கி திவாலாயிட்டால் நாம போட்ட பணம் அதாவது ஒரே

பேங்கில் ஒரே நபரின் பெயரில் எவ்வளவு பணம் போட்டிருந்தாலும் சரி ஒரு லட்ச ரூபாய்தான் அவர்க்கு கிடைக்கும்."

"அந்த நபர் ஒரு கோடி ரூபாய் போட்டு இருந்தாலும் ஒரு லட்சம்தான் கிடைக்கும்ன்னு சொல்றீங்களா?"

"ஆமா...! ஆனால் அதே நபர் அந்த கோடி ரூபாயைப் பிரிச்சு பத்து லட்சம் பத்து லட்சமாய் பத்து பேங்குகளில் போட்டு வெச்சிருந்தா ஒவ்வொரு பேங்கிலிருந்தும் அவர்க்கு ஒவ்வொரு லட்ச ரூபாய் கிடைக்கும்."

"சரி... ஒரு வாடிக்கையாளர் ஒரு பேங்கில் 50 ஆயிரம் மட்டும் போட்டு வெச்சிருக்கார். அவர்க்கு எவ்வளவு கிடைக்கும்?"

"அவர்க்கு அந்த 50 ஆயிரம் ரூபாயும் அதுக்கான வட்டியையும் சேர்த்து மொத்தப் பணமும் கிடைக்கும். அதாவது சட்டரீதியாய் போட்ட அசல் பணத்தோடு சேர்த்து வட்டித் தொகையையும் ஒருத்தர் பெற முடியும். ஆனால் வட்டியுடன் சேர்த்து ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் போகக் கூடாது."

"அப்படீன்னா குறைந்த முதலீட்டாளர்க்கு போட்ட பணமும் வட்டியும் கிடைக்கும்... லட்ச லட்சமாய்ப் போட்டவங்களுக்குத்தான் பிரச்னை?"

"ஆமா...! பேங்கல பணம் போடறதுக்கு முந்தி நாம் சில யோசனைகளைப் பின்பற்றினால் அந்த வங்கி திவாலாகும் போது நமக்கு நஷ்டம் ஏற்படாது."

"என்னென்ன யோசனைகள்...?"

"கையில் பணம் இருந்தால் அதைப் பரவலாய் எல்லா பேங்க்குகளிலும் போட்டு வைக்கணும். ஒரே பெயரில் போட்டு வைக்கக் கூடாது. வீட்டில் உள்ள மனைவி, மகன், மகள் பெயர்களில் தொகையைப் பிரிச்சு போட்டு வைக்கணும். SB எனப்படும் சேமிப்புக் கணக்கு, மற்றும் நடப்புக் கணக்கு போன்ற கணக்குகளைத் தொடங்கி அதில் பணத்தைப் போட்டு வைக்கணும். இப்படி கணக்குகளை தனித்தனியாய்ப் போட்டு வைக்கிறதால நமக்கு எந்த நஷ்டமும் ஏற்படாமல் போட்ட பணம் கிடைக்கும்."

"ஒரு வங்கி திவாலாகப் போற விஷயத்தை நாம் முன் கூட்டியே தெரிஞ்சுக்க முடியுமா...?"

"பொருளாதார நிபுணர்களால ஓரளவு கணிக்க முடியும். ஆனா பொது மக்களால் அதை தெரிஞ்சுக்க முடியாது... அமெரிக்காவின் மிகப் பெரிய பேங்க் லேமன் பிரதர்ஸ் பேங்க். அந்த பேங்க் திவாலாகும்ன்னு பொருளாதார நிபுணர்களாலேயே கண்டு பிடிக்க முடியலை."

"சரி... ஒரு பேங்க் திவாலானதும் பணம் எத்தனை மாசத்துக்குள் ஒரு வாடிக்கையாளர்க்கு கிடைக்கும்..."

''ரெண்டு மாசத்துக்குள்ளே குடுத்துடுவாங்க...!''

''நம்ம நாட்ல பேங்க்குகள் திவாலாக வாய்ப்பு இருக்கா?''

''வாய்ப்பு 99% இல்லை. பட்... எந்த நேரத்துல எது நடக்கும்ன்னு யாராலேயும் சொல்ல முடியாது. இந்தியாவின் முன்னணி கம்ப்யூட்டர் நிறுவனங்களில் 4 வது இடத்தில் இருந்தது **சத்யம் கம்ப்யூட்டர் கம்பெனி.** இப்ப என்னாச்சு...? இன்னிக்கு அது அசத்யமான கம்பெனி. உலகம் முழுவதும் 66 நாடுகளில் கிளைகளை விரித்ததோடு இந்தியாவின் பன்னாட்டு நிறுவனம் என்ற பெருமையோடு இருந்த சத்யம் நிறுவனம் 8000 கோடி ஊழல் செய்து உலக அரங்கில் தலை குனிஞ்சு நின்னுட்டு இருக்கு...''

''சத்யம் கம்பெனி இப்படியொரு நிலைமைக்கு வர என்ன காரணம்...?''

''பங்குச் சந்தையில் தன்னுடைய நிறுவனம் நல்லமுறையில் மதிப்பிடப்படணும்ங்கிறதுக்காக கூடுதல் வருமானம் மற்றும் லாபத்தைக் காட்டியதாகவும் நிறுவனத்துக்கு இருந்த கடனைக் காட்டாமல் மறைத்ததாகவும் வங்கி இயக்குநர்களுக்கு சத்யத்தின் நிறுவனர் எழுதிய கடிதத்தில் அவர் ஒப்புக் கொண்டார்.''

''வங்கி இயக்குநர்கள் ஏமாறலாம்... சரி... வருமானவரித் துறை அதிகாரிகள் என்ன பண்ணிட்டிருந்தாங்க...?''

''தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு வருமான வரி விலக்கு இருப்பதால் அதிக அளவில் லாபத்தைக் கணக்கில் காட்ட முடிந்து இருக்கிறது.''

''பணம் சம்பாதிக்க எப்படியெல்லாம் அரசாங்கத்தை ஏமாத்தறாங்க...!''

விவேக் சிரித்தான். ''அரசாங்கம் ஏமாந்து போறது ஒரு பக்கம் இருக்கட்டும். லண்டனில் உள்ள உலக நிறுவனங்களின் நிர்வாக கவுன்சில் சார்பாக விருது வழங்கும் கமிட்டி ஒண்ணு இருக்கு. அந்த கமிட்டியில் இருப்பவர்கள் சிறந்த பொருளாதார நிபுணர்கள். அப்பேர்ப்பட்ட நிபுணர்கள் குழுவையே சத்யம் நிறுவனம் ஏமாத்தியிருக்கே!''

''எப்படி?''

''லண்டனில் இருக்கிற அந்த சர்வதேச நிர்வாக கவுன்ஸில் 'சத்யம்' நிறுவனத்தை சிறந்த நிறுவனமாகத் தேர்ந்து எடுத்து **'தங்க மயில்'** விருது கொடுத்து இருக்காங்க...!''

''அடேடே... அப்புறம்...?''

''அப்புறமென்ன...! சத்யம் நிறுவனத்தோட மோசடி அம்பலமானதும் அந்த **தங்க மயில்** விருதை பறிச்சுகிட்டாங்க...''

''அப்படிப் பறிச்சகிட்டவங்க வேற ஒரு விருதைக் கொடுத்து இருக்கணும்...''

''என்ன விருது...?''

''பொருளாதாரத்தின் அவமானச் சின்னம்''

''பொருத்தமான விருதுதான்...!''

''கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமே எப்படிங்க இவ்வளவு பெரிய திருட்டைப் பண்றாங்க?''

''ரூபி...! மொதல் தடவை திருடும் போதுதான் உடம்பும் உள்ளமும் கூசும். அப்புறம் திருடத் திருட மரத்துப் போகும். போலீஸ் ஜீப்ல ஏறும்போது கூட எல்லாப் பற்களையும் காட்டிகிட்டு 'டாட்டா' 'பை... பை' சொல்லிட்டுப் போவாங்க...''

''சத்யம் என்னாகும்...?''

''2008 ஜனவரி 1-ம் தேதி அன்று சத்யம் நிறுவனத்தின் பங்கு விலை 444 ரூபாயாக இருந்தது. இந்த 2009 - ஜனவரி 7-ம் தேதி அதன் ஊழல் அம்பலத்துக்கு வந்த போது பங்கின் விலை ரூபாய் 40/= மட்டுமே. இந்த நிறுவனத்தை இனி பழைய நிலைமைக்கு தூக்கி நிறுத்த, நல்ல லாபத்தில் இயங்கக் கூடிய ஒரு மல்டி நேஷனல் கம்பெனி முன்வர வேண்டும்.''

''என்னங்க...! எனக்கு ஒரு சந்தேகம்.''

''என்ன...?''

''சத்யம் நிறுவனத் தலைவரோட பேரு ராமலிங்கராஜு தானே...?''

''ஆமா...''

''இவ்வளவு பெரிய மோசடி பண்ணியிருக்கார். கோர்ட் அவர்க்கு என்ன தண்டனை கொடுக்கும்...?

விவேக் சிரித்தான். ''என்னது... தண்டனையா...? சட்டம் இவங்களையெல்லாம் கண்டுக்கவே கண்டுக்காது. 100 ரூபாய் 500 ரூபாய் திருடற குப்புசாமிகளையும், மாடசாமிகளையும்தான் சட்டம் தன்னோட நெற்றிக் கண்ணைத் தொறந்து பார்க்கும். ராமலிங்கராஜு எட்டாயிரம் கோடி ரூபாய் மோசடி பண்ணியிருக்கார். இதுக்கு சட்டம் கொடுத்து இருக்கிற செல்லமான பேர் என்ன தெரியுமா ரூபி...?''

''என்ன...?''

''**ஒயிட் காலர் க்ரைம்...** பணம் படைச்சவங்க யார் - எவ்வளவு பெரிய தப்பு பண்ணினாலும் உடனே ஜாமீன்ல வெளியே வந்துடுவாங்க... கேஸ் வருஷக்கணக்காய் நடக்கும். வழக்கை விசாரிக்கிற நீதிபதிகள் ரிடையராகிப் போயிட்டே இருப்பாங்க. கேஸ் மட்டும் முடியவே முடியாது. ஒரு வழியாய் கேஸ் முடியும் போது ராமலிங்கராஜுக்கு 90 வயசு முடிஞ்சிருக்கும்.''

''சரிங்க... ராமலிங்கராஜு இந்த 'சத்யம்' கம்ப்யூட்டர்

திருவனத்தைத் தொடங்கறதுக்கு முந்தி என்ன பண்ணிட்டிருந்தார்?"

ரூபலா கேட்ட இந்த கேள்விக்கு விவேக் பதில் சொல்வதற்குள்...

வாசகர்களே!

உங்களுக்குத் தெரியுமா?

தெரிந்தால் ஒரு தபால் கார்டை எடுத்து பதில் எழுதி 25-04-09 தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான பதில் எழுதி தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து பேர்களுக்கு புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அர்த்தமுள்ள அரட்டை,
க்ரைம் நாவல்,
ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

கேள்வி: ராக்கெட்டை செலுத்தப் பயன்படும் தொழில் நுட்பத்துக்கு என்ன பெயர்?

பதில்: 'கிரையோ - ஜெனிக்' தொழில்நுட்பம்.

சரியான பதில் எழுதி குலுக்கல் முறையில் பரிசு பெற்ற 5 வாசகர்கள்:-

1. ஏ.விஜயன் - திருவனந்தபுரம்.
2. டி.பாஸ்கர் - சின்னியம்பாளையம் (கோவை)
3. எம்.வி.ஸ்ரீனிவாஸ் - கோவில்பட்டி வில்லேஜ்.
4. மனோ. வெங்கட் - ஜெய்ஹிந்த்புரம் (மதுரை)
5. மா.பூபதிராஜ் - அபிஷேகப்பட்டி (நெல்லை.)